# ஆரண தேசிகனின் ஆயிரம் அறிவுரைகள்

## பாகம் 1 (1 முதல் 100 வரை)




உரையாசிரியர்:

ஸ்ரீமதுபயவே ரஹஸ்யார்த்த கோவித நாவல்பாக்கம் யக்ஞும்

Dr. V. கண்ணன் ஸ்வாமி

Sincere Thanks to:
Oppiliappan Koil Sri V. Sadagopan Swamy for hosting this title under his sadagopan.org website portal

**Cover Picture: Swamy Desikan, Sri Thooppul**
**(Courtesy: Sri U.Ve. Satakopa Tatachar, Kancheepuram)**

**Cover Design by: Sri Murali Desikachari**

# ஆரண தேசிகனின் ஆயிரம் அறிவுரைகள்


## முதல் பாகம்

## (1–500)

# முன்னுரை.

கடந்த ஆறு வருஷங்களாக ஸ்ரீஹயக்ரீவ ப்ரியா, ஸ்ரீ ஹயக்ரீவ ஸேவக, என்ற மாதப்பத்திரிகைகளில் வெளிவந்த கட்டுரைத் தொடரைத் தொகுத்து புத்தகமாக வெளியிடுவதில் பெருமகிழ்ச்சி கொள்ளுகிறோம். இந்த நூலில் ஆயிரம் அறிவுரைகளில் முதல் ஐந்நூறு நீதிகள் இந்த முதற்பாகத்தில் தொகுக்கப் பட்டிருக்கின்றன. இவையெல்லாம் ஸ்வாமி தேசிகனின் நூல்களிலிருந்து எடுத்துக் கோர்த்தவை. இவற்றை இவ்வாறு தொகுத்து வெளியிடப் பல காரணங்கள் உள்ளன.

முதலாவது காரணம்: அடியேனுடைய ஆசாரியர் .



அரிய அர்த்தங்களை அறிவித்த ஆசார்யன்
நாவல்பாக்கம் ஸோமயாஜி அக்னிஹோத்ரம்
நாராயண தாதயார்ய மஹாதேசிகன்

அவர் காலக்ஷேபம் சாதிக்கும் காலங்களில் மட்டுமின்றி, வேஷ்டி உலர்த்தும்போது, அமுது செய்யும்போது, பூணூல் நூற்கும்போது, குளத்துக்கு ஏள்ளும்போது, என்றிவ்வாறான பல காலங்களிலும், அடியேனையொத்த பரிமிதரான சிஷ்யர்களுக்கு, வாத்ஸல்யத்தோடு பூர்வஸூக்திகளின் ஸாரத்தையும் ஸ்வாரஸ்யத்தையும் பற்றி அடிக்கடி அபூர்வார்த்தங்களை அருளிக்கொண்டேயிருப்பது வழக்கம். இவற்றையெல்லாம் "சிந்தாமல் உலகங்கள் வாழவென்று" தொகுத்தளிப்பது அந்த ஆசாரியருக்குத் திருவுள்ளவுகப்பைத் தரும் என்பதால் அடியேனின் இந்த முயற்சி ஸபலமாகிறது.

இரண்டாவது காரணம்: தற்காலத்தில் நிறைய பேருக்குச் சிரத்தை அதிகமாய் இருக்கிறது; ஆனால் நேரம் குறைவு. அவர்கள் தேசிகன் கூறியுள்ள நீதிகளை அறியவும் பின்பற்றவும் விரும்புகிறார்கள்; முழுதாகத் தேசிகக்கிரந்தங்களைப் பயிலமுடியாத நிலையில் இருக்கிறார்கள். அவர்களுக்கு இந்த நூலில் இருப்பது போல ஸாரோத்தாரம் பண்ணி நீதிகளை மட்டும் தொகுத்தளித்தால், உதவியாய் இருக்கும். ஆகையால் ஆசார்யகைங்கர்யமாக ஆரம்பித்த இது தேசிக பக்தர்களான வாசகர்களுக்கும் பண்ணுகிற கைங்கர்யமாக அமைகிறது.

மூன்றாவது காரணம்: தேசிகரே இந்தக் கைங்கர்யத்தை (இதுபோல நீதிகளைத் திரட்டித் தரும் திருப்பணியை) பண்ணச்சொல்லியிருக்கிறார். (இதைப்பற்றி 64–வது நீதியில் காண்க.) ஆகையால் தேசிக நியமனத்தைத் தலைக் கட்டுவதற்காகவும் இந்தப்புத்தகம் வெளிவருவது அவசியமாகிறது.

நாலாவது காரணம்: இளமையில் ஆத்திச்சூடி, கொன்றை வேந்தன், உலகநீதி, முதலிய நூல்களில் நீதிகளை (மிகச்சிறிய வாக்கியங்களில் மெட்டமைத்து)க் கூறியுள்ள முறை அடியேனது மனத்தைக் கவர்ந்தது. நம் ஸம்ப்ரதாயத்து நீதிகளை அதுபோலவொரு செய்யுள்மெட்டில் அமைக்கவேண்டும் என்ற அடியேனது தினவடங்குவதற்காகவும் இந்த ஆயிரம் நீதிகளுக்குத் தலைப்புகளை நல்ல தமிழில் சொற்சுவையோடு அமைக்கும் முயற்சியையும் இதில் சேர்த்துள்ளேன். இதற்கு வாசகரிடையேயும் வரவேற்பிருப்பதாகத் தெரிகிறது.

ஐந்தாவது காரணம்: தேசிகஸூக்திகள் மஹாஸமுத்ரம் போலே பரந்தும் ஆழ்ந்தும் இருக்கின்றன. அவற்றின் ஸாரத்தை எளிய தமிழில் வடித்தால், அது கடலில் முத்தாடியெடுத்து மெருகேற்றி மாலையாகக் கோர்த்துத் தருவது போலே பல வர்க்கத்தினருக்கும் (கலைஞர்களுக்கும் வாங்கியணிபவர்களுக்கும்) மகிழ்ச்சியை அளிப்பதாக இருக்கும். ஸம்ப்ரதாயப் பற்று இல்லாதவர்களும் கூட இந்தப் புத்தகத்தைப் படித்து இன்புறலாம்.

ஆறாவது காரணம்: நம் ஸம்ப்ரதாய இளைஞர்களில் பலர் தேசிகனின் அபாரமான புலமையையும் நம் ஸம்ப்ரதாயத்தின் உயரிய கோட்பாடுகளையும் அறியாமல் கிடக்கிறார்கள். அவர்கள் மலைத்துப் போகும்படியாக, தேசிகனின் எழுத்தாற்றலை அவர்கள் முன் நிறுத்துவதற்கும், பலரிடையே தேசிகபக்தியைத் தூண்டுவதற்கும், இந்தப் புத்தகம் உதவும் என்றும் நம்புகிறேன்.

இவ்வாறாக,

ஆசார்யரின் உகப்புக்காகவும்,
ஸம்ப்ரதாய உணர்வுள்ளோர்க்கு உதவவும்,
தேசிகனின் கட்டளையை நிறைவேற்றவும்,

அடியேன் தினவடங்கவும்,
வாசகரின் மகிழ்ச்சிக்கும்,
அன்னியர்க்கும் தேசிகபக்தியைத் தூண்டவும்,

என்ற ஆறு காரணங்களுக்காக இந்த நூல் வெளிவருகிறது. இதன் இரண்டாம் பகுதியும் விரைவில் வெளிவந்து நிறைவடைவதற்கு தேசிகனின் அருளை வேண்டுவோமாக.

ஏற்கெனவே ஸங்கல்பித்தபடி, ஆயிரம் அறிவுரைகளையும் தொகுத்த பின்னரும், இந்தத் திருப்பணியைத் தொடர்வதற்கு எத்தனையோ வழிகள் உள்ளன. அவற்றுள் ஆறை மட்டும் இப்போது குறித்துக் காட்டுகிறோம்.

**1.**தேசிக ஸூக்திகளின் ஆழத்தையும் அகலத்தையும் சொல்லி மாளாது. இந்த ஆயிரத்தோடு அவருடைய நூல்களில் நீதிகள் முடிந்துவிடவில்லை. இன்னும் எத்தனையோ ஆயிரங்கள் இருக்கின்றன. எனவே இதே ரீதியில் தொடர்வது ஒரு வழி. க என்னும் எழுத்தில் தொடங்கி நூறு நீதிகள், கா என்னும் எழுத்தில் தொடங்கி நூறு, என்றெல்லாம் கூட இதைத் தொடரலாகும். நாம் ஓய்ந்து போவது நம்முடைய இயலாமையினாலேயேயன்றி, முடிவை எட்டியதாலாகாது. ஸமுத்ரத்தில் இருக்கும் மணிகளை மொத்தத்தையும் எடுக்க யாரால் முடியும்?

**2.** இவ்வாறிருக்க, தொகுத்துள்ள நீதிகளை வரிசைப் படுத்துவதிலும் வேறு முறைகள் மேலும் நன்றாம். உணவு குறித்தவை, பேச்சு குறித்தவை, கல்வி பற்றியவை, பொறுமை பற்றியவை, என்றிவ்வாறாக ஆயிரக்கணக்கான விஷயங்களை எடுத்துக்கொண்டு, ஒவ்வொரு தலைப்பிலும் ஏராளமான தேசிக–நீதிகளைத் தொகுப்பதும் நன்றாம்.

**3.**நீதிகள் மட்டுமா முக்கியம்? கொள்கைகள், கோட்பாடுகள், திருஷ்டாந்தங்கள், வாதங்கள், அலசல்கள், எல்லாமே வகைப்படுத்தவேண்டியவை, பட்டியலிட்டுப் புரிந்துகொள்ளத் தக்கவை. தேசிகஸூக்திரஸிகர்கள் நூற்றுக்கணக்கில் ஒன்றிணைந்து, தேசிகர் கருத்துகள் என்றொரு லட்சம் தேர்ந்தெடுத்து விளக்கினும் நன்றாம். ஒரு தனி மனிதரால் ஆகாது. ஒரொன்று தானே அமையாதோ வானேறப்போமளவும் வாழ்வு என்ற தனியன் வரிக்கு கீழ்க்கண்ட கருத்தும் உண்டு: ஒரு முழு வாழ்க்கையை, பூரண ஆயுளை, அர்ப்பணித்தாலும், அது மொத்தத்துக்கும் ஈடு கொடுப்பதாகத் தேசிகனின் ஒவ்வொரு கிரந்தமுமே ஆகும். தேசிகனின் நூற்றுக்கணக்கான கிரந்தங்களைப் புரிந்துகொள்ளவும் புரிவிக்கவும் ரசிக்கவும் பரப்பவும் பின்பற்றவும் விழைந்தால், நூற்றுக்கணக்கானவர்கள் சேர்ந்து செயல்பட வேண்டியிருக்கும். இந்தத் திருப்பணிக்கு தேசிக–கைங்கர்யத்தையே முழுமூச்சாகக் கொண்டிருக்கும் ஸ்ரீஹயக்ரீவ ஸேவக என்னும் பத்திரிகை பொதுமேடையாக அமைவதும் தகும்.

**4.**இணையதளத்தில் இந்த அறிவுரைகளை இடும்போது, தொடர்புடைய அறிவுரைகளுக்கு இணைப்புகளை ஏற்படுத்தினால் வாசகப் பெருமக்களுக்குப் பேருதவியாக இருக்கும்.

**5.**இவற்றை வேறு சில மொழிகளிலும் மொழிபெயர்ப்பது அவசியம். ஏனென்றால் தற்காலத்தில் தேசிகபக்தர்களின் தாய்மொழிகள் பலவாக வேறுபட்டிருக்கின்றன. இலக்கிய ரஸிகர்கள் எல்லாப் பிராந்தத்திலும் இருக்கிறார்கள்.

**6.**இதிலுள்ள ஒவ்வொரு நீதிக்கும் மற்ற பூர்வர்களின் ஸம்வாதஸூக்திகளை (ஒத்த கருத்துள்ள வரிகளை)க் காட்டி விளக்குவதும் பயன்மிக்க பணியாகும்**.**

இவ் ஆறு வகையான இலக்கியப்பணிகளும் இனிவரும் நூற்றாண்டில் விரைவுபடுத்தப்பட்டு நடந்தேறுமாறு, தேசிகனாக அவதரித்த திருவேங்கடவன் அருள் புரிவானாக**.**

இங்ஙனம் தொகுப்பாளன்

தாஸன் யஜ்ஞும்**.**

ஹைதராபாத்.

நந்தன கார்த்திகை திருவோணம்.

# ஆரண தேசிகனின் ஆயிரம் அறிவுரைகள்.

(நாவல்பாக்கம் ஸோமயாஜி அக்நிஹோத்ரம் ஸ்வாமியிடம் கேட்டறிந்து தொகுத்தவை)

(தொகுப்பு : யஜ்ஞம்)

ஸ்வாமி தேசிகன் நூற்றுக்கணக்கான கிரந்தங்களில் நம் நன்மைக்காக ஆயிரக்கணக்கான உபதேசங்களைப் பண்ணியிருக்கிறார். அவற்றுள் முக்கியமான ஆயிரம் அறிவுரைகளை இப்போது பார்ப்போம். ஒவ்வொன்றுக்கும் அவருடைய ஸூக்திகளை மேற்கோள் காட்டி எளிய தமிழ்ப்பொருளுடன் அனுபவிப்போம்.

முதல் பாகமாக ஒன்றிலிருந்து ஐந்நூறு வரையிலான நீதிகள் இந்தப் புத்தகத்தில் உள்ளன. இதற்கு மேல் படிக்க விரும்புவோர் ஸ்ரீஹயக்ரீவ ஸேவக என்னும் மாதப் பத்திரிகையின் சந்தாரராக ஆகுங்கள். முகவரி: ஸ்ரீ வேதாந்த தேசிக வித்யா ட்ரஸ்ட், 7\16,இரண்டாவது மெயின் ரோடு, ஏ. வீ.எம்.அவென்யூ, விருகம்பாக்கம், சென்னை 600092. போன்:09444903721



# அருள் தரும் ஆரண தேசிகன்

முதல் நூறு.
(இதிலுள்ள நூறு தலைப்புகளும் அ என்கிற எழுத்தில் தொடங்கும்.)

## 1.அலராள் கேள்வன் அடி பணிமின்.

லக்ஷ்மீபதியின் திருவடியைப் பணியுங்கள்.

**இப்படி ச்ரிய:பதியான நாராயணன் திருவடிகளே உபாயதசையிலும் பலதசையிலும் உபஜீவ்யங்கள் .**

***-- ரஹஸ்யத்ரயஸாரம், நிகமநாதிகாரம்.***

இது ரஹஸ்யத்ரயஸாரம் என்கிற பெரிய மணிப்ரவாளக் கிரந்தத்தின் கடைசி உரைநடை வாக்கியம். அந்த முழுநூலின் ஸாரமாகச் சுருங்கச் சொன்ன மணிமொழி. இதன் அர்த்தம்:

> இப்படி, மேற்கூறியவிதமாக, திருமாலின் திருப்பாதங்களே, உபஜீவ்யங்கள். (அதாவது பெருமாள் திருவடிகளே நம் பிழைப்புக்கு மூலங்கள்). உபாயதசையிலும் சரி, பலதசையிலும் சரி, அவர் திருவடிகளை அண்டியே நம் ஜீவனம். உபாயநிலையில், அதாவது சரணாகதி பண்ணும்போது, அத்திருவடிகளையே பற்றுகிறோம். பிறகு அதன் பலன் கிடைக்கையில், அதாவது மோக்ஷநிலையிலும், அவன் திருவடிகளையே பற்றிக்கொண்டு வாழ்கிறோம். இரண்டு நிலைகளிலுமே பிராட்டியுடன் சேர்ந்த அவன் திருவடிகளே உபஜீவ்யங்கள்.

ச்ரிய:பதியாய் இருத்தலும் நாராயணன் என்ற பெயரும் அவனுக்கே அசாதாரணமானவை. வேறெந்தத் தேவருக்கும் இல்லாமல் அவனுக்கு மட்டும் உரித்தானவை. அவன் திருவடி துணைகொண்டு அவன் திருவடி அடைகிறோம். இது சரணாகதி மந்த்ர ஸாரம். திருவடிகளே என்றவிடத்தில் ஏகாரம் நமக்கு வேறு புகலோ வேறு பயனோ இல்லாமையை அறிவிக்கிறது. அவன் திருவடியை ஒழிய வேறு வழியுமில்லை. வேறு புருஷார்த்தமும் வேண்டாம்.

## 2.அடியார்க்கடிமை செய்திடுமின்.

பாகவதர்களுக்குக் கைங்கர்யம் பண்ணுங்கள்.

**कर्मावलम्बकाः केचित् केचित् ज्ञानावलम्बकाः ।**

**वयं तु हरिदासानां पादरक्षावलम्बकाः ॥**

-- *முக்தகச்லோகம்.*

இது ஒரு தனிப்பாடல். தேசிகன் அருளியதாக வைபவப்ரகாசிகையில் உள்ளது. இதன் அர்த்தம்:

ஒருசிலர் யாகயஜ்ஞாதி கருமங்களைப் பற்றிக்கொண்டவர். இன்னும் சிலர் ஜ்ஞானயோகத்தைப் பற்றிக்கொண்டவர். நாமோவெனில் திருமாலடியாரின் பாதுகைகளைப் பற்றிக்கொண்டவர்.

யாகயஜ்ஞங்கள் போலவும் பக்தியோகாதிகள் போலவும் பாகவத தாஸ்யமும் உய்யும் வழியாகும். நம் ஆத்மோஜ்ஜீவனத்திற்கு அவலம்பமாக நாம் அடியார்க்கடிமையைக் கொண்டுள்ளோம்.

இந்தச்சுலோகத்தை எந்தச் சந்தர்ப்பத்தில் ஸ்வாமி தேசிகன் அருளினார் என்றறிந்தால் அதன் பொருள் நமக்கு நன்கு புரியும். அவரிடம் அசூயை கொண்ட சில வைஷ்ணவர்கள் அவரது திருமாளிகையில் செருப்புத்தோரணம் கட்டினார்கள். அந்த அசூயாளுக்களும் வெட்கப்படும் படியாகத் தேசிகன் அருளிய நல்வார்த்தை இது. அந்த அளவுக்குப் பாகவதர்களைக் கௌரவித்தால், அவர்களுக்கு அடிமைப்பட்டால், நமக்கு நல்ல கதி தான். கர்மயோகமோ ஜ்ஞானயோகமோ தேவையில்லை.

## **3.**அபவர்க்கத்தைப் பெற விழைமின்**.**

மோக்ஷத்தில் ஆசை கொள்ளுங்கள். முமுக்ஷுவாகுங்கள்.

**मुक्तानन्दामृतैकोदधिपृषतगणस्पर्धिनः अन्ये पुमर्थाः**

-- ***அதிகரணஸாராவளீ***

மனிதன் நாடும் வஸ்துக்களைப் புருஷார்த்தங்கள் என்பர். அவற்றுள் ஒன்று மோக்ஷம். அது பேரானந்தமாக இருப்பதால் மற்றவற்றை விட்டு மோக்ஷத்திலேயே விருப்பம் கொள்வது நல்லது. இதைச் சொல்லும் ஸாராவளிச்லோகப்பகுதியின் அர்த்தம்:

மோக்ஷாநந்தம் அமுதக்கடல் போன்றது. அதன் சிறு துளிக்குக்கூட ஈடாகமாட்டாதவை மற்ற புருஷார்த்தங்கள். மோக்ஷமெனும் அமுதக்கடலின் திவலைத் துளிக்குப் போட்டியிடுபவை அவை.

நான்கு புருஷார்த்தங்கள் உண்டு. அறம், பொருள், இன்பம், வீடு, என்று. வீடு என்பது தான் மோக்ஷம். மோக்ஷத்தில் கல் போலச் சுகதுக்கமற்று இருப்பதாகச் சொல்வோர் பிறர். நம் வைதிகமதப்படி மோக்ஷத்தில் பேரானந்தம். அந்தமில் பேரின்பம். இதை அறிந்து நாம் மோக்ஷமார்க்கத்தை நாட வேண்டும். ஸம்ஸாரமே போதும் என்றிருக்கலாகாது.

## **4.**அவசரமாகச் சரணடைமின்**.**

சரணாகதி பண்ணுவதற்கு அவசரப்படுங்கள்.

**கடுக மோக்ஷோபாயத்திலே மூள ப்ராப்தம்.**

***––ரஹஸ்யத்ரயஸாரம்***

நல்ல காரியத்தைத் தள்ளிப் போடாதீர். முதுமையில் பரந்யாஸம் பண்ணிக்கொள்ளலாம் என்று எண்ணி வாளவிருக்காதீர். இதைச்சொல்லும் ஸூக்தி மேலே தரப்பட்டது. தத்வத்ரயசிந்தநாதிகாரத்தின் கடைசி வாக்கியத்தில் இந்த நீதி. இதன் அர்த்தம்:

> கடுக, விரைவாக, த்வரையுடன், மோக்ஷத்திற்கான உபாயத்தைச் செய்யவேண்டும். பக்தி, ப்ரபத்தி, இவற்றுள் ஒன்றில் மூண்டிட வேண்டும்.

அதற்குக் காலம் தாழ்த்தக் கூடாது. அப்புறம் செய்துகொள்ளலாம் என்று தள்ளக்கூடியதன்று சரணாகதி. அவசரம் காட்டவேண்டும். இப்பொழுதே ஆசார்யனை அடைந்து ப்ரபத்தி பண்ணிக்கொள்ளுங்கள்.

இதுவரை சொன்ன நாலு உபதேசங்கள்:

- அலராள் கேள்வன் அடிபணிமின்.
- அடியார்க்கடிமை செய்திடுமின்
- அபவர்க்கத்தைப் பெற விழைமின்
- அவசரமாகச் சரணடைமின்

## 5.அந்திவணக்கம் தவறாதே.

ஸந்தியாவந்தனத்தை விடக்கூடாது.

**ஆகையால் தந்தாமுக்கடைத்த शौच आचमन स्नान सन्ध्योपासनादि களை விட்டால் सन्ध्याहीनोऽशुचिर्नित्यं अनर्हस्सर्वकर्मसु ।**

**यदन्यत्कुरुते कर्म न तस्य फलभाक् भवेत्॥**

**இத்யாதிகளிற்படியே விசேஷகைங்கர்யங்களுக்கு அநர்ஹனாம்**

***–விரோதபரிஹாரம்***

எல்லாக்கருமங்களுக்கும் அடிப்படையானவை ஸ்நாநஸந்தியைகள். அவற்றைச்செய்யாமல் ஜபம், ஹோமம், முதலிய மற்ற கர்மங்களைச் செய்யக்கூடாது. இதை வலியுறுத்தும் விரோதபரிஹாரஸூக்தியின் அர்த்தம்:

சௌசம், ஸ்நானம், ஸந்தியாவந்தனம், முதலியவற்றை ஒருபோதும் விடலாகாது. ஸந்த்யையை விட்டவன் அசுத்தமாகிறான். எப்போதும் எல்லாக்கருமங்களிலும் தகுதி இழக்கிறான். அவன் வேறெந்தக் கருமம் செய்தாலும் அதன் பலனை அடையாதொழிகிறான். என்று சாத்திரம் சொன்னபடி விசேஷ கைங்கரியங்களுக்கு யோக்கியதை அற்றுப்போகிறான்.

ஸந்தியாவந்தனம் பண்ணாத பிராம்மணர்கள் கோவிலில் உத்ஸவங்கள், அர்ச்சனை, சிராத்தம், விவாஹாதிகள், எது பண்ணினாலும் பலன் ஏற்படாது. வீணாகப் பணத்தையும் சிரமத்தையும் மற்ற கருமங்களில் இடுவானேன்? ஸந்தியை செய்தாலொழிய அவை எல்லாமே வியர்த்தம் தான்.

## **6.**அற்ப வயிற்றுக்கலையாதே

வயிற்றுப்பிழைப்புக்காக அதிக அலைச்சல் தேவையற்றது.

**सिलं किं अनलं भवेत् अनलं औदरं बाधितुम्**
**पयः प्रसृतिपूरकं किमु न तारकं सारसम्**

***——வைராக்யபஞ்சகம்***

வயிற்றுக்காகவும் உடலுக்காகவும் "உண்டியே உடையே உகந்தோடும்" வழக்கம் அவசியமானது தானா? ஸ்வாமி தேசிகன் கேட்கிறார் இந்தச் சுலோகத்தில்:

வயிற்றுள் உள்ள அநலத்தை, அதாவது ஜாடராக்கினியைச் சமிப்பதற்கு (**தணி**ப்பதற்கு) ஸிலம் என்னும் உதிரி தானியமே போதாதா என்ன? கையளவு குளத்து நீரே தாகத்தைத் தீர்த்துவிடாதா என்ன?

அநலம் என்ற சொல்லை இரண்டு அர்த்தங்களில் கையாளுகிறார். நெருப்பு என்பது முதல் அர்த்தம். அலம் என்பதற்கு எதிர்ப்பதமாக ஒரு அர்த்தம், போதாது என்று. வயிற்று அநலத்தைப் பாதிக்க ஸிலம் அநலமா என்ன? இல்லை. ஸிலமே போதுமானது. பசியும் தாகமும் எளிதில் தீரும். படாத பாடு பட்டு ஓடியாடி உழலவேண்டாம். நம் ப்ரயத்னங்களையெல்லாம் வேறு ஸத்விஷயத்தில் பண்ணலாம். மொத்தத்திறமையையும் கேவலம் சாப்பாட்டுக்கே செலவழித்துவிட வேண்டாம். ராஜஸபைக்கு வருமாறு இரண்டாம் முறை வித்யாரண்யரிடமிருந்து அழைப்பு வந்தபோது அதை அங்கீகரிக்காமல் ஸ்வாமி அருளிய வைராக்யபஞ்சகத்தில் உள்ள இந்தக்கருத்து நமக்கு நல்ல அறிவுரையாக அமைந்துள்ளது.

## **7.**அயலான் பணத்தை விரும்பாதே**.**

பிறர் பணத்தில் ஆசை கொள்ளக்கூடாது.

कस्यापि बन्धोरबन्धोर्वा धनं मा गृधः माऽभिकांक्षः

**ஈசாவாஸ்ய உபநிஷத் பாஷ்யம்.**

உபநிஷத்துகளை நாம் வரிசைப்படுத்தும்போது முதலாவதாக ஈசாவாஸ்ய உபநிஷத்தைக் கொள்வது வழக்கம். இந்த முதல் உபநிஷத்தின் முதல் ரிக்கிலேயே (அதாவது முதல் மந்த்ரத்திலேயே) இந்த அறிவுரை இருக்கிறது. எவர் பணத்திலும் ஆசை வைக்காதே என்று. இதற்கு உரையாக அமைந்த தேசிகஸூக்தியின் அர்த்தம்:

> மற்றவர் உனக்கு உறவினராக இருந்தாலும் சரி, உறவில்லாதவரானாலும் சரி, அவருடைய தனத்தை நீ விரும்பாதே.

பணத்தைத்திருடுதல், கடன் வாங்கித் திருப்பித்தராதிருத்தல், ஏமாற்றிப் பணம் சேர்த்தல், முதலிய கெட்ட காரியங்களுக்கெல்லாம் மூலமானது பிறர்பணத்தில் ஆசை தான். இந்த ஆசையை நீக்கினால் தான் அர்த்தசுத்தி ஏற்படும். இந்தத்தூய்மை அவசியம். பிறர் பணம் நம்மிடம் இல்லாமல் கண்ணும் கருத்துமாக இருந்தால் பாவம் குறையும். நமக்கு நேர்மையாகச் சொந்தமான பணம் மட்டுமே போதும்.

## 8.அவமானத்தில் குமுறாதே.

அவமானம் நேரிட்டாலும் மனம் கலங்கக்கூடாது.

**இப்படித் தெளிந்தவன்**

**न प्रहृष्यति सम्माने नावमानेऽनुतप्यते।**

**गङ्गाह्रद इवाक्षोभ्यो यस्स पण्डित उच्यते॥**

**என்கிறபடியே மான அவமான ஆதிகளில் கலங்கான்.**

***—— ரஹஸ்யத்ரயஸாரம், மூலமந்த்ராதிகாரம்.***

பிறர் புகழும்போது துள்ளிக்குதிக்கவும் வேண்டாம். பிறர் இகழும்போது கூனிக்குறுகவும் வேண்டாம். இங்கு தேசிகஸூக்தியின் அர்த்தம்:

> இவ்வாறாகத் திருமந்திரத்தில் தெளிவு பெற்றவன் ஸம்மானம் கிடைக்கும்போது பெருமகிழ்ச்சி கொள்வதும் இல்லை. அவமானம் நேரும்போது குன்றிக் குமுறுவதும் இல்லை. கங்கையின் ஆழ்மடு போல் கலங்காமல் இருப்பான். இத்தகையவன் தான் உண்மையில் பண்டிதன் ஆவான். என்று மஹாபாரதத்தில் சொன்னபடி கலக்கமில்லாமல் இருப்பான்.

மனத்தெளிவிலிருந்து மனவலிவு பிறக்கிறது. அயலாரது புகழ்ச்சியும் இகழ்ச்சியும் வெகுவாகப் பாதிப்பதில்லை. மனோபலம் இல்லாதவர்கள் தான் மற்றவரின் ஸம்மான-அவமானங்களைப் பெரிது படுத்துவார்கள்.

கடந்த நாலு அறிவுரைகளிலும் நாம் செய்யக்கூடாததாகச் சொன்ன விஷயங்களின் தொகுப்பு:

- அந்திவணக்கம் தவறாதே.
- அற்பவயிற்றுக் கலையாதே.
- அயலான் பணத்தை விரும்பாதே.
- அவமானத்தில் குமுறாதே.

## 9.அபகாரத்தை நினையாதே.

நமக்குப் பிறர் செய்த தீங்குகளை நாம் மறந்துவிட வேண்டும்.

प्रथमसुजनाय पुंसे मह्यमपि प्रथमदुर्जनाय नमः।
सर्वं हतः कृतं यौ सकृदुपकारापकाराभ्याम्॥

***——ஸுபாஷிதநீவீ***

ஒரு உதவி பெற்றவுடன் பழைய அபகாரங்களையெல்லாம் மறப்பவனே நல்லவன். ஸுபாஷிதநீவியின் முதல் சுலோகத்திலேயே இந்தக்கருத்து உள்ளது. சுலோகத்தின் அர்த்தம்:

> நல்லவர்களில் தலையாயவனுக்கு நமஸ்காரம். தீயவர்களில் தலையாயவனான எனக்கும் ஒரு கும்பிடு. ஒரே உதவியால் இதுகாறும் செய்த எல்லா அபகாரங்களையும் மறக்கிறான் நல்லவன். ஒரு தீமைக்காளானவுடன் இதுவரை பெற்ற நன்மைகளையெல்லாம் மறக்கிறான் துர்ஜனன்.

க்ருதஜ்ஞன் நல்லவன். கிருதக்கினன் (நன்றி கொன்றவன்) கெட்டவன். நன்றி கொல்பவன் துர்ஜனன். பிறர் புரிந்த அபகாரங்களை எளிதில் மறப்பவன் நல்லவன். இதை இலக்கணமாகவே கொள்ளலாம்.

## 10.அஹங்காரத்தால் அழியாதே

அகந்தை பொல்லாதது. நம்மை அழித்துவிடும்.

हितवचनानादरस्य निमित्तभूतं अहङ्कारविशेषं आह।
अहमेव कृत्याकृत्यविषयं सर्वं जानामीति भावादिति।
न श्रोष्यसीति श्रूयमाणेऽपि श्रुतफलनिवृत्त्यभिप्रायम्।
विनंक्ष्यसि इत्यनेन अनादिकालं अनुवृत्तस्य आत्मनाशस्य उत्तरकालेऽपि
अनुवृत्तिः विवक्षिता इत्यभिप्रायेणाह -- नष्टो भविष्यसीति।
बुद्धिनाशात्प्रणश्यसीति प्रागुक्तप्रत्यभिज्ञापनं इति भावः।

***தாத்பர்யசந்த்ரிகா***

பிறரைவிட நானே கெட்டிக்காரன் என்ற அகம்பாவம் நமக்குப் பெருங்கேட்டை விளைவிக்கும் என்று கீதையில் கண்ணன் சொன்னதை விளக்கும் தேசிகஸூக்தியின் அர்த்தம்:

> நல்ல அறிவுரைகளை நாம் அனாதரிக்கக் காரணமாயிருப்பது ஒருவகை அகம்பாவம். எனக்கே எல்லாம் தெரியும் . நல்லதுகெட்டதை நானே அறிவேன். என்ற எண்ணத்தால் வரும் அகந்தை. கேட்காவிடில் அழிந்துபோவாய் என்ற கீதாவாக்யத்தில் கேட்காவிடில் என்பதற்குக் கேட்டபடி நடக்காவிடில் எனக்கருத்து. அழிந்துபோவாய் என்பதால் அநாதிகாலமாகத் தொடர்ந்துவரும் ஆத்மநாசம் இனியும் தொடரும் எனக் கூறவந்தார். இதையே கீதாபாஷ்யத்தில் நஷ்டோ பவிஷ்யஸி என்றார். புத்திநாசாத் ப்ரணஶ்யஸி என்று முன்பே கீதையில் சொன்னதை நினைவூட்டல் என்று கருத்து.

அஹங்காரத்தில் பலவகை உண்டு. அதிலொருவகை அறிஞர் சொல்லை அனாதரித்தலுக்குக் காரணமாகிறது. தனக்குத்தெரியாததையா உபதேசித்துவிடப்போகிறார்கள் என்று எண்ண வைக்கிறது. அறிவுரையைக் கேட்கவிடாமலும், கேட்டாலும் லட்சியம் பண்ணவிடாமலும் தடுக்கிறது. இந்த அகந்தையால் தனக்குத்தானே தீங்கு விளைவித்துக் கொள்ளும் நிலை ஏற்படுகிறது.

## 11.அனுதாபத்தால் வினைகுறைப்பீர்

தான் செய்த பாவங்களுக்குப் பச்சாத்தாபப்பட்டால் அந்தப்பாவங்கள் குறையும்.

**உளதான வல்வினைக்கு உள்ளம் வெருவி உலகளந்த**
**வளர்தாமரையிணை வன்சரணாக வரித்தவர் தாம்**
**களைதானெனவெழும் கன்மம் துறப்பர்.**

***---அதிகாரசங்கிரகம்***

தம்மிடம் உள்ள வல்வினைகளுக்கு மனம் நொந்துகொள்வது அந்த வினைகளை அழிப்பதற்கு முதல் படியாகும். இதைக்கூறும் தேசிகப்பிரபந்தப் பாடல் பகுதியின் அர்த்தம்:

> ஏற்கெனவே பண்ணின பாவங்களுக்கு அனுதாபபட்டு, பெருமாள் திருவடிகளைச் சரணம் அடைந்தவர் பயிருக்குக் களை போலிருக்கிற தீவினையைத் துறந்து விடுவார்கள்.

ஐயோ! தவறு செய்துவிட்டோமே, என்று உள்ளம் வெருவினாலே கால் பங்கு பாவம் கழிந்துவிடும். ஆனாலும் அதைத்திரும்பச் செய்யாமல் இருக்க வேண்டுமே, அதற்காகப் பெருமாள் திருவடியைப் பற்றிக்கொண்டால், அவனருளால் அக்கருமத்தைத் துறக்கலாம். இன்னொரு கால் பங்கும் கழியும். பிறகு பிராயச்சித்தம் பண்ண முயலலாம். இவ்வாறின்றி மனம் நொந்துகொள்ளாமல் பிராயச்சித்தத்தை மட்டும் பண்ணுவது முழுப்பயன் தராது. உள்ளம் வெருவுதல் என்கிற அனுதாபம் அவசியம். அதனால் தான் நம் முன்னோர் ஆஹ்நிகத்தில் தினமும் காலையில் நிர்வேதகாரிகைகளை அனுஸந்திக்க விதித்திருக்கிறார்கள்.

## 12.அழியா அறநெறி நின்றிடுவீர்.

தரும மார்க்கம் பொன்றாதது. அதில் நிலைபெறவேண்டும்.

**तदस्माभिरवस्थेयं धर्मवर्त्मनि शाश्वते।**

**बिभ्यद्भिरनघादेशात् वज्रादिव समुद्यतात्॥**

***——யாதவாப்யுதயம்.***

கண்ணன் எல்லா அரசர்களையும் அழைத்து அவர்களுக்கு அறிவுரைகள் வழங்குவதாக யாதவாப்யுதய காவியத்தின் இருபத்திரண்டாம் ஸர்க்கம் தொடங்குகிறது. அந்த அறிவுரைகளில் ஒன்று இது. அறநெறியில் நிலைபெறுதலை வலியுறுத்தும் இந்தச் சுலோகத்தின் அர்த்தம்:

> தருமத்தின் வழி தான் சாசுவதமானது. அதில் நாம் நிலையாக இருக்கவேண்டும். குற்றமற்ற கட்டளைக்கு நாம் அஞ்சவேண்டும். உயரத்தூக்கிய வஜ்ராயுதத்திற்குப் பயப்படுவது போல் அஞ்சவேண்டும்.

வலிமை கொண்ட அரசர்களுக்கு இந்த அறிவுரை இரண்டு காரணங்களால் அவசியமாகிறது. ஒன்று, அரசர் அறவழியில் நின்றால் தானே மக்களும் நிற்பார்கள்? அரசன் எவ்வழி மக்கள் அவ்வழி என்று பழமொழி. மற்றொன்று: மற்ற மக்கள் ராஜதண்டனைக்குப் பயந்து அறவழி நிற்பர். ஆனால் அரசர்கள் யாருக்குப் பயந்து அதர்மத்திலிருந்து விலகவேண்டும்? சாத்திரத்திற்குப்பயந்து தான். ராஜாக்கள் மாறி மாறி வருவர். ராஜாக்களுக்கு மட்டும் அஞ்சுபவரின் வழி மாறிக்கொண்டேயிருக்கும். ஆனால் சாத்திரத்திற்கு அஞ்சும் தர்மநெறி மாறாதது. ஒரே மாதிரியானது. நிலையானது. ஸநாதநமானது. அதிலிருந்து நாம் விலகாமல் இருக்கவேண்டும். ராஜாக்களின் ஆதேசங்களில் சில சமயம் குற்றங்கள் இருக்கலாம். ஆனால்

சாத்திரங்களின் ஆதேசங்களில் குற்றம் கிடையாது. ராஜாக்களின் கட்டளைகளுக்குச் சில சமயங்களில் அஞ்சவேண்டியிருக்காது. வேறு ராஜ்யத்திலிருந்தாலோ, மறைவாக இருந்தாலோ, தப்பித்து விடலாம். ஆனால் அநகனான பகவானின் கட்டளையான சாத்திரங்களுக்கு அஞ்சித்தானே ஆகவேண்டும்? இப்படி மூன்று பெரிய வித்தியாசங்கள் உண்டு , அரசக்கட்டளைக்கும் சாத்திரக்கட்டளைக்கும். இவற்றை சாச்வதே, அநக, பிப்யத்பி: என்ற மூன்று சொற்களால் குறிக்கிறார். தண்அனை உக்கிரமாக இருக்கும் என்பதாலும் அதிகம் பயப்பட வேண்டும் என்பதை வஜ்ராத் என்ற பதத்தால் சொல்கிறார்.

9 முதல் 12 வரை நாலு உபதேசங்களின் தொகுப்பு:

- அபகாரத்தை நினையாதே
- அஹங்காரத்தால் அழியாதே
- அனுதாபத்தால் வினை குறைப்பீர்
- அழியா அறநெறி நின்றிடுவீர்.

## 13.அபசாரத்தைத் தவிர்த்திடுக.

பகவதபசார பாகவதாபசாரங்கள் கொடியவை. அவை நேராமல் விழிப்புடன் இருக்கவேண்டும்.

**ராஜகுமாரனுக்கும் अवधानं பண்ணி நடக்கவேண்டுமாப்போலே**

**लघुप्रत्यवायமும் வாராகைக்காக அபசாரங்கள் दूरपरिहरणीयங்கள்.**

***——ரஹஸ்யரத்நாவளி***

ப்ரபத்தி பண்ணினவர்கள் பெருமாளுக்கு அந்தரங்கராகிவிட்டபடியால் பக்தவத்ஸலனான பெருமாளைச் சேர்ந்த அவர்கள் என்ன பண்ணினாலும் அபசாரம் ஆகாது என்று நினைத்து ஏமாறவேண்டாம். இங்கெடுத்த ஸ்ரீஸூக்தியின் அர்த்தம்:

> அபசாரங்களை நெருங்கவிடாதீர்கள். அவற்றை தூரத்தள்ளுங்கள். என்ன தான் பகவானுக்கு அந்தரங்கரானாலும் சில விஷயங்களில் கவனம் தேவை. ஒரு உதாரணம் பார்ப்போம். ராஜகுமாரன் ராஜாவுக்கு மிக நெருங்கினவன். ஆனாலும் அவன் கூட ஸாவதானமாக நடக்கவேண்டியிருப்பதைக் கண்கூடாகக் காண்கிறோமே. நமக்குச் சிறிதளவும் தீங்கு வரக்கூடாதென்று நினைத்தால் அபசாரங்களை அறவே விட்டொழிக்கவேண்டும்.

நாம் திருமாலடியார்களில் ஒருவராக இருப்பதால் நமக்கு விசேஷமான அனுக்கிரகம் கிடைக்குமானாலும் நாம் பெருமாளிடமும் பாகவதர்களிடமும் அபசாரப்படலாகாது. பெருமாளுக்கு அனுகூலராகிவிட்ட மாத்திரத்தால் நாம் பகவானிடமோ, அடியாரிடமோ, ஸ்வைரமாக (அதாவது, மனம் போனபடி) நடக்கலாகாது. அவர்கள் மனம் நோக எதையும்

செய்யக்கூடாது. இதற்கு ஒரு திருஷ்டாந்தம். ராஜகுமாரன் தவறு செய்தால் குமாரனிடம் உள்ள வாத்ஸல்யத்தால் ராஜா பெரும் தண்டனை தராதிருக்கலாம். ஆனாலும் ராஜகுமாரனும் கவனத்துடன் தான் நடக்கவேண்டும். பிழை நேர்ந்தால் சிறிதேனும் தண்டனை பெற்றே தீரவேண்டி வரும். சிறிய ப்ரத்யவாயமும் வரவேண்டாமெனக் கருதினால் நாம் எல்லாவித அபசாரங்களையும் தூரத்தள்ளிவிடவேண்டும். எந்த அபசாரத்திற்கும் இடம் கொடுக்கக்கூடாது. இடம் தந்தால் லகுவாகவேனும் சிக்ஷை கிடைக்கும். தண்டனையிலிருந்து தப்பமுடியாது.

## 14.அபசாரத்தை க்ஷமிப்பிப்பீர்.

தவிர்க்கமுடியாமல் அபசாரம் நேர்ந்துவிட்டால் நாம் பண்ணவேண்டியவை மூன்று உண்டு. 1.க்ஷமை கொள்ளல், அதாவது மன்னிப்பு கேட்டல். 2.மேலும் அபசாரங்கள் நேருமோ என்று அஞ்சி வர்த்தித்தல். 3.பிரம்மவித்யையின் பலன் கூட இதனால் தாமதிக்கும் என்று அறிந்து விளம்பஸஹனாயிருத்தல். இந்த மூன்றையும் முறையே 14, 15, 16 -வது அறிவுரைகளாகக் காணலாம்.

**भागवतापचारपरिहारங்களில் பாகவதரை முன்னிட்டே க்ஷமிப்பிக்குமது प्रधानम्**

***--- ப்ரதாநசதகம்.***

பாகவதாபசாரம் நேரிட்டுவிட்டால் நாம் பண்ணவேண்டியது குறித்த இந்த வாக்கியத்தின் அர்த்தம்:

> அடியார்களிடம் பட்ட அபசாரத்திற்குப் பரிஹாரம் பண்ண வேண்டும். பரிஹாரங்கள் பலவிதம். அவரிடமே சென்று மன்னிப்பு கேட்பது அவை எல்லாவற்றுள்ளும் முக்கியமானது. வேறு சில பாகவதர் முன்னிலையிலும் இது செய்வது தகும்.

மன்னிப்பு கேட்பதால் அவர் திருவுள்ளத்தில் சீற்றம் குறையும். அதன் வழியாகப் பெருமாளும் உகப்பார். அவர் மன்னித்தால் நம் பாவம் விலகும். இதை விட லகுவான வழி இல்லை என்பதாலும் இது முக்கியமாகிறது. இது தவிர, வைஷ்ணவஸ்வரூபத்திற்கு ஏற்றதாயிருத்தல், சாத்திரப்ரமாணங்களுக்கு ஒத்ததாயிருத்தல் முதலிய பல காரணங்களாலும் மன்னிப்பு கேட்பது முக்கியமாகிறது.

## 15.அபசாரத்திற்கஞ்சிடுவீர்.

மிகவும் பயப்படவேண்டிய விஷயங்களில் ஒன்றாகும் அபசாரப்படுவதென்பது.

**राजदारापराधம் போலே பாகவதாபசாரம்.**

**...ம்ருத்யுவின் கடைவாயிலே அகப்பட்டாற்போலே நடுங்கி**

***———ரஹஸ்யத்ரயஸாரம்***

அடியார்களிடம் பிழை புரிவதில் ஏன் பயப்படவேண்டும்? எவ்வளவு பயப்படவேண்டும்? என்பதைச் சொல்லும் இந்த (அபராதபரிஹாராதிகாரத்து) வாக்கியத்தின் அர்த்தம்:

> ராணியிடம் பிழை புரிவது போலாம் பாகவதர்களிடம் அபசாரப்படுவது. யமனுடைய பற்களிடையே சிக்கிக்கொண்ட ஜந்து போலே நடுங்கவேண்டும் அதற்கு.

ஒரே தவறை வெவ்வேறு இடங்களீல் பண்ணும்போது வெவ்வேறு அளவில் தண்டனை கிடைக்கிறது. தன் பக்கத்துவீட்டுச் சிறுமியிடம் அடிக்கடி வாலாட்டும் ஒருவன் அதே போல் ராஜவல்லபையான ராணியிடமும் ஒருநாள் நடந்து கொள்ள நேரிட்டால் அவனுக்கு என்ன நேரும்? ராமாயணத்தில் காகாஸுர விருத்தாந்தமும் இதுபோல் ஒன்று தானே? அது போலத்தான் மற்றவர்களிடம் பழகுவது போல் அலட்சியமாகப் பாகவதர்களிடம் பழகலாகாது. பாகவதர்கள் பெருமாளுக்கு அத்யந்தம் அணுக்கர்கள். அவர்களிடம் வெகு ஜாக்கிரதையாக, அபசாரங்களுக்குப் ப்ரஸக்தி இல்லாமல் கவனத்துடன் நடந்துகொள்ள வேண்டும். உலகில் பலிஷ்டர்களைச் சார்ந்தவரிடம் நமக்கு இருக்கும் முன்னெச்சரிக்கை ஸர்வசக்தனின் அன்பர்களிடமும் இருக்கவேண்டியது இயற்கை தானே? மரணம், சித்திரவதை, இவற்றுக்கு அஞ்சுவது போல் பாகவதாபசாரத்திற்கும் அஞ்சவேண்டும்.

## 16.அபசாரத்தால் பலவிளம்பம்.

பாகவதாபசாரத்தால் வரும் கேடுகளில் ஒன்று பிரம்மவித்யையின் நிஷ்பத்தியில் காலவிளம்பம் ஏற்படும் என்பது.

**अस्त्वन्यत्रान्तरायः प्रबलतममिदं सात्विकत्यागयुक्तम्**
**कर्म प्रोक्तं निवृत्त्याह्वयमिति सपदि ब्रह्मविद्यां विदध्यात् ।**
**मैवं तस्मात् बलीयान् यदि भवति परब्रह्मभक्तापराधः**
**तच्छान्तौ तत्प्रसूतिः स यदि न झटिति स्यात् परोपास्तिलाभः॥**

--- ***அதிகரணஸாராவளி***

மிகவும் ப்ரபலமான உபாஸனஹேதுவான செயல் பலனளிப்பதைக் கூடத் தாமதப்படுத்துமளவு கொடியது பாகவதாபசாரம் என்று சொல்லவந்த இந்தச் சுலோகத்தின் அர்த்தம்:

> நிவ்ருத்திகர்மம் வலிமை வாய்ந்தது. ஸாத்விகத்யாகத்துடன் கூடினால் அது மேலும் வலிமை பெற்றது. பிரம்மோபாஸநம் ஏற்படத்தேவையான அது முடிந்தபின் அதன் பலனுக்குத் தடங்கல்களே வர முடியுமோ? வேறிடங்களில் தடைகள் வரலாமே தவிர இங்கு வருவதற்குக்காரணமில்லை. உடனே

பிரம்மவித்யையைப் பண்ணக்கடவது அது. என்ற சங்கை எழுந்தால் பதில்: இப்படிக்கிடையாது. ப்ரபலமான இந்த நிவ்ருத்திகர்மத்தைக் காட்டிலும் மேலும் ப்ரபலமான பாகவதாபசாரம் ஏற்படுமானால் அந்த அபசாரம்(பலனளித்தோ, கழுவாய் செய்தோ)அடங்கும்போது அந்தப் பிரம்மவித்யையின் தோற்றம் ஏற்படும். அத்தகைய அபசாரம் எதுவும் ஏற்படாது போனால் உபாஸனம் விரைவிலேயே கிடைக்கும்.

உபாஸனம் என்னும் பலன் உண்டாவது பாகவதாபசாரத்தால் தாமதப்படும். அவ்வளவு கொடியது அபசாரம். ஸ்ரீபாஷ்யத்தில் முக்திபலாதிகரணத்தில் முடிவு பண்ணின விஷயம் இது.

இதுவரை அபசாரம் பற்றிச் சொன்ன நாலு உபதேசங்களின் தொகுப்பு:

- அபசாரத்தைத் தவிர்த்திடுவீர்.
- அபசாரத்தை க்ஷமிப்பிப்பீர்.
- அபசாரத்திற்கஞ்சிடுவீர்.
- அபசாரத்தால் பலவிளம்பம்.

## 17.அன்பாம் அறிவே முக்திவழி.

அடிக்கடி ஆவ்ருத்தி பண்ணும் பக்தி என்னும் அறிவுத்தொடர் தான் மோக்ஷத்திற்கு ஹேது. பக்தியோகத்தைப் பழிக்கவேண்டாம்.

**अथ को मोक्षहेतुः? भक्तिरूपापन्नोपासनवेदनध्यानादिशब्दवाच्यः असकृदावृत्तः आप्रयाणात् अन्वहमनुवर्तमानः ज्ञानविशेषः।**

--- ***ந்யாயஸித்தாஞ்ஜநம்***

சிலர் பக்தியோகத்தை ஸ்வரூபவிருத்தம் என்கிறார்கள். ஆனால் அது தான் மோக்ஷஹேது. ப்ரபத்தி கூட பக்தியின் ஸ்தானத்தில் பெருமாளை நிறுத்தித்தான் மோக்ஷஹேதுவாகிறது. இதைச் சொல்லும் மேலுள்ள பங்க்தியின் அர்த்தம்:

மோக்ஷத்துக்கு என்ன உபாயம்? பக்தியுருவை அடைந்த அறிவு தான். இதைத்தான் உபாஸனம், வேதநம், தியானம், முதலிய சொற்களால் உபநிஷத் ஓதியது. மரணம் வரை அடிக்கடி பண்ணப்படுவது. ஒவ்வொருநாளும் தொடரும் ஒருவகை ஜ்ஞானம்.

ஜ்ஞானத்தால் மோக்ஷம் என்கிறது வேதவாக்கியம். ஆகையால் தத்வஜ்ஞானம் பெறுவது தான் மோக்ஷஹேது என்பது அத்வைதிகள் முதலிய பலரது கருத்து. ஆனால் இங்கு சொன்ன

ஜ்ஞானம் பக்திரூபமானது என்பது நம் ஸம்பிரதாயக்கருத்து. பக்தியால் மட்டுமே மோக்ஷம் என்பது ஸாரம். ப்ரபந்நர்களான நாம் பக்தியோகம் செய்ய இயலாதவர்களாய் பக்திக்குப்பதில் பெருமாளையே இருக்கும்படி ப்ரார்த்திக்கிறோம் என்பது வேறு விஷயம். பக்தியையும் ரஸமாக அனுபவிக்கிறோம். பக்தியை முழுதாக விட்டுவிடவேண்டாம்.

## 18.அர்ச்சனைத் துதியால் பொழுது கழி.

பெருமாளை அருச்சிப்பதிலும் துதிப்பதிலும் நம் பொழுதைக் கழிக்கவேண்டும்.

**एष मे सर्वधर्माणां धर्मोऽधिकतमो मतः।**
**यत् भक्त्या पुण्डरीकाक्षं स्तवैरर्चेन्नरस्सदा॥**
**आदरेण यथा स्तौति धनवन्तं धनेच्छया।**
**एवं चेत् विश्वकर्तारं को न मुच्येत बन्धनात्॥**
**सा जिह्वा या हरिं स्तौति**
**इत्यादिषु प्रसिद्धां स्वशक्यां वाचिकां परिचर्यां करिष्यामीत्याह - स्तोष्यामीति।**

***——ஸ்தோத்ரரத்நபாஷ்யம்.***

ஆளவந்தார் ஸ்தோத்ரத்தில் ஸ்தோஷ்யாமி ந: குலதநம் என்னும் பகுதிக்கு உரையில் ஸ்வாமி தேசிகன் அருளிய வாக்கியமிது. ஸ்தோத்திரங்களைச் சொல்வதென்னும் பணியின் சிறப்பைச் சில ப்ரமாணங்களைக்கொண்டு விளக்கும் இந்த ஸூக்தியின் அர்த்தம்:

> 1.எல்லாத் தருமங்களிலும் மிகவும் உயர்ந்த தருமம் எதுவென்றால் பக்தியோடு புண்டரீகாக்ஷனைத் தோத்திரங்களால் எப்பொழுதும் அருச்சிப்பது தான். என்று என் கருத்து. (பீஷ்மர் தருமபுத்திரருக்குச் சொன்னது.) 2.பணக்காரனிடம் பணம் வேண்டி மனமாரத் துதிப்பது போல் உலகைப்படைத்தவனைத் துதித்தால் எவன் தான் தளையிலிருந்து விடுபடமாட்டான்? 3.ஹரியைத் துதிக்கும் நாக்கே நாக்கு. இது முதலானவற்றில் பிரசித்தமான தன்னாலியன்ற வாசிக கைங்கரியத்தைப் பண்ணப்போகிறேன் என்கிறார் ஸ்தோஷ்யாமி என்பதால்.

நாம் பெருமாளுக்குப் பண்ணக்கூடிய கைங்கரியங்கள் பலவுண்டு. அவற்றுள் ஒன்று வாசிக கைங்கரியம். அதாவது வாயால் தோத்திரங்களைச் சொல்லுவது. இது தான் தருமங்களில் தலையானது.இது நம்மைக் கட்டுகளிலிருந்து விடுவிக்கும். இதற்காகத்தான் நமக்கு நாக்கு இருக்கிறது.

## 19.அள்ளித்தருவது குருவின் விழி.

ஆசார்யகடாட்சத்தால் அதிகப் பலன் கிடைக்கும். அதைப் பெறுங்கள்.

**एकयैव गुरोर्दृष्ट्या द्वाभ्यां वाऽपि लभेत यत्।**
**न तत् तिसृभिरष्टाभिस्सहस्रेणाऽपि कस्यचित्॥**

--- ***ஸங்கல்பஸூர்யோதயம்.***

இந்தச் சுலோகம் ஸுபாஷித நீவியிலும் உள்ளது. தேவர்களின் அருளால் கிடைக்காத தெல்லாம் குருவின் அருட்பார்வையால் கிடைக்கும். இதைச் சொல்லும் இந்தச் சுலோகத்தின் அர்த்தம்:

> குருவின் ஒரே ஒரு பார்வையால், அல்லது இரண்டே இரண்டு விழிகளால் என்ன கிடைக்குமோ அது முக்கண்ணன் பார்வையாலோ, எண்கண்ணன் பார்வையாலோ, ஆயிரங்கண்ணன் பார்வையாலோ எவருக்கும் கிடைக்காது.

சிவனோ, பிரமனோ, இந்திரனோ, தராத லாபத்தைக் குருகடாக்ஷம் தரும். நிறைய கண்கள் இருந்தால் என்ன? பெரிய தேவர் ஆனால் என்ன? அவர்கள் பார்வை ஆசார்ய கடாக்ஷத்திற்கு ஈடாகுமா? ஆகாது.

## 20.அரிகள் அறுவரை அடக்கியழி.

காமம், குரோதம் முதலிய ஆறு உட்பகைவர்களை அழிக்கவேண்டும்.

**अरातिगणकूटस्थान् आदौ जयत दुर्जयान्।**
**अपदक्रोधलोभादीन् अशेषार्थविरोधिनः॥**

--- ***யாதவாப்யுதயம்.***

காமம், கோபம், லோபம், மோஹம், மதம், மாச்சரியம், என்ற ஆறு தீய குணங்கள் நமக்குப் பகைவர்கள். அவற்றை வெல்லவேண்டும் என்று கண்ணன் அரசர்களுக்கு அறிவுரை வழங்குகிறார்.

> அரசர்களே! பகைவர் கூட்டத்தில் முதன்மை பெற்றவை சில உண்டு. அவை எளிதில் வெல்லமுடியாதவை. தகாத இடத்தில் கோபம், பேராசை, முதலியவை அவை. எல்லாக் காரியங்களையும் கெடுத்துவிடுபவை. அவற்றை முதலில் வெல்லுங்கள்.

பகையரசர்களை ஜயிப்பது அப்புறம் கிடக்கட்டும். அதற்கு முன் ஜயிக்கவேண்டியவை இந்த ஆறு உட்பகைவர்கள். அவற்றை ஜயிப்பது கஷ்டம் தான். ஆனால் ஜயிக்காவிட்டால் எல்லா

லட்சியங்களும் வீணாகிவிடும். உங்கள் எண்ணங்கள் ஈடேறவேண்டுமானால் நீங்கள் முதலில் வெல்ல வேண்டியது இந்த ஆறு சத்துருக்களைத்தான்.

16 முதல் 20 வரை சொன்ன நாலு அறிவுரைகளாவன:

- அன்பாம் அறிவே முக்திவழி.
- அர்ச்சனைத் துதியால் பொழுது கழி.
- அள்ளித் தருவது குருவின் விழி.
- அரிகள் அறுவரை அடக்கி அழி.

## 21.அன்னைக்கென்றும் பணிவிடை செய்.

தன்னைப் பெற்றெடுத்த தாய்க்குத் தொண்டு செய்யவேண்டும்.

१ माता पुत्रस्य भूयांसि कर्माण्यारभते ततः ।

तस्यां तु शुश्रूषा नित्या पतितायामपि

२ आचार्यश्श्रेष्ठो गुरूणां मातेत्येके

३ पितुश्शतगुणं माता गौरवेणातिरिच्यते

इत्यादिषु मातुर्गौरवं प्रतिपादितम्

--- ***ஸ்தோத்ரரத்நபாஷ்யம்.***

தந்தையை விடவும் குருவை விடவும் தாய் போற்றற்குரியவள். இதைச்சொல்லும் மேலுள்ள ஸூக்தியின் அர்த்தம் :

> 1.அன்னை தன் பிள்ளைக்கு ஏராளமான உதவிகள் செய்துள்ளாள். ஆகையால் அவளுக்குப் பணிவிடைகள் புரிவது புத்திரனின் கடமை. அவள் பதிதை என்னலாம்படி குற்றங்கள் புரிந்தவளானாலும், பிள்ளையின் இந்தக் கடமை விட்டுப்போகாது. அவளுக்கு இவன் சிசுரூஷை பண்ணியே தீரவேண்டும். 2. பெரியோர்களுக்குள் சிறந்தவர் ஆசாரியன் என்று சிலர் கருதுகிறார்கள். அம்மா தான் என்று வேறு சில மஹான்களின் கருத்து. 3. தந்தையைக் காட்டிலும் நூறு மடங்கு மேன்மை கொண்டவள் தாய். இத்யாதிப் பிரமாணங்களில் தாயின் கௌரவம் பறைசாற்றப் படுகிறது.

நம் குழந்தைப்பருவத்தில் நமக்குத் தாய் செய்துள்ள உதவிகள் எண்ணிலடங்கா. அத்தகைய அன்னைக்குச் சேவை செய்வது பிள்ளையின் தலையாய கடமை. அவள் நெறிதவறிப்போனால் கூட அவளுக்குப் பணிவிடைகள் புரிவது அவசியம்.

## 22.அன்பை வைக்கும் இடத்தில் வை.

பெருமாளிடம் காதல் கொள். மற்றவற்றில் விரக்தி கொள். மோக்ஷத்தில் ஆசை வை. ஸம்ஸாரத்தில் ஆசை வேண்டாம்.

**கடுநரகன்பு கழற்றி மற்றொரு கதிபெறும் அன்பில் எமைப்பொருத்தினர்.**

***———பரமதபங்கம்.***

எதில் அன்பை வைக்கலாம்? எதில் வைக்கக்கூடாது? என்பதைச் சொல்வது இந்தப் பாசுரப்பகுதி. இதன் அர்த்தம்:

> நரகம் கொடியது. நரகஹேதுவான ஸம்ஸாரமும் கொடியது. அறியாதார் இதில் அன்பு வைக்கிறார்கள். இந்த அன்பைக் கழற்றுகிறார்கள் ஆசார்யர்கள். இதற்கு எதிரானதொரு கதி இருக்கிறது, மோக்ஷமார்க்கமென்று. அதில் நம்மை அன்பு கொள்ளச் செய்கிறார்கள். நம்மை முமுக்ஷுவாக்கிறார்கள்.

அன்பு என்பது மனிதகுணம். அதை அறவே ஒழிக்க இயலாது. நீக்கவேண்டிய இடத்திலிருந்து நீக்கி, வைக்கவேண்டிய இடத்தில் வைக்க வேண்டுமதை. குடியிலும் போதைப்பொருளிலும் அதனால் வரும் ஆபத்துகளை அறிந்தும் சிலர் ஆசை வைப்பது போல், பலர் ஸம்ஸாரத்தில் ஆசை வைக்கிறார்கள். அது நல்லதில்லை. அந்த அன்பைக் கழற்றி மோக்ஷவழியில் வைக்கவேண்டும். இந்த மாற்றம் ஆசாரியனின் துணையால் ஏற்படும்.

## 23. அனைத்தும் பெருமாள் சேஷம் துய்.

நாம் அனுபவிக்கும் எல்லாப்போகங்களையும் பெருமாளுக்கு ஸமர்ப்பித்த சேஷமாக நுகரவேண்டும்.

**अन्योपभोगविरहात् अनघः प्रपन्नः**

**भुङ्क्ते स्वभोगमखिलं परभोगशेषम्॥**

--- ***நிக்ஷேபரக்ஷா.***

ப்ரபந்நன் உலக இன்பங்களை நுகர்வதற்கும் மற்றவர் நுகர்வதற்கும் அடிப்படைவேறுபாட்டைச் சொல்கிறார்:

> பெருமாளுக்கு ஸமர்ப்பிக்காத போகப்பொருள்களை அனுபவிப்பது குற்றம். அந்தக் குற்றத்தைச் செய்யாதவன் அநகன். தான் துய்க்கும் எல்லாப்

போகங்களையும் பெருமாளுக்கு ஸமர்ப்பித்த மிச்சமாக ஆக்கியபின் துய்க்கிறான்.

மாலமுது செய்யாமல் வந்ததைச் சாப்பிடுவதில்லை. உடுத்துக்களைந்தநின் பீதகவாடை உடுத்துக் கலத்ததுண்டு தொடுத்த துழாய் மலர் சூடிக் களைந்தன சூடும் இத்தொண்டர்களோம் என்று ஆழ்வார் பேசியபடி வர்த்திக்கிறான். உணவு, உடை, சந்தனம், மாலை, ஆபரணம், எதுவானாலும் பெருமாளுக்குச் சமர்ப்பித்த சேஷத்தைத்தான் துய்க்கிறான். நாம் இப்படித்தான் இன்பங்களை அனுபவிக்கவேண்டும்.

## 24.அருவருப்பழுக்குக் குவியல் மெய்.

நம் உடல், அழகியின் உடல் உட்பட எல்லா ஜந்துசரீரங்களிலும் அருவருப்படைய வேண்டும். இதனால் வைராக்கியம் பெருகும். கெட்ட பழக்கங்கள் குறையும்.

**स्व-पर-शरीर-वर्गं நிபுண னுக்குக் कुणपादि-बुद्धि-योग्यமாய்,**

**अत्यन्तदुःखमय மாய் , अत्यन्तहेयமுமாய் , तटित्-चञ्चल-जीवितமுமாய்**

**இருக்கும் என்னுமிடம்**
**सप्तधातुमयं त्रिमलं शुक्ल-शोणित-संभवम्**

**என்றாற்போலே சொல்லுகிற ஶ்ருதிகளிலும்**
**अस्थि-स्थूणं स्नायु-बद्धं, मांसासृक्-पूय-**

**विण्मूत्र, अनित्यमसुखं लोकं, गन्त्री वसुमती नाशं,**

**मानुष्ये कदली-स्तम्भे, यामेव रात्रिं प्रथमां, आसन्नतरतां याति,**

**मस्तक-स्थायिनं मृत्युं, प्रातर्मूत्र-पुरीषाभ्यां ,**

**ஊனிடைச் சுவர் வைத்து, பொல்லாவாக்கை, புண்ணாராக்கை,**
**மின்னின் நிலையில மன்னுயிர் ஆக்கைகள், வேதநூல் பிராயம் நூறு,**
**இத்யாதிகளிலும் விளங்கக் காணலாம்.**

***———பரமபதஸோபாநம், விரக்திபர்வம்.***

பதினைந்து மேற்கோள்கள் காட்டி ஒரே அர்த்தத்தை விளக்கவந்த இந்த வாக்கியத்தின் ஒரு பகுதிக்கு மட்டும் விவரமான அர்த்தம்:

தன் சரீரமானாலும் சரி, பிறர் சரீரம் ஆனாலும் சரி, ஆராய்பவனுக்கு அது பிணம் என்று அறியலாம்படியும், மிகவும் துக்கமயமாகவும், மிகவும் இழிந்ததாகவும், மின்னல் போல் நிலையற்ற ஜீவிதம் உடையதாகவும்,

> இருக்கிறது. எலும்புத்தூண் நாட்டி, நரம்புக்கயிரால் கட்டி, மாமிசரத்தத்தால் மெழுகி தோலினால் மூடி, மலமூத்திரங்களை உள்ளே நிரப்பி, துர்நாற்றம் சேர்த்து, வியாதிகளுக்கு இருப்பிடம் ஆக்கி, சீச்சீ என்று அருவருக்கத்தகும்படி பண்ணப்பட்டது உடல்.

பொல்லாவொழுக்கும் அழுக்குடம்பும் என்று ஆழ்வார் பாடினபடி அழுக்குக்குவியல் அல்லவா இந்த மெய் (உடல்)? இதைக்கூட விரும்பலாமோ?

21 முதல் 24 வரை சொன்ன நான்கு அறிவுரைகள்:

- அன்னைக்கென்றும் பணிவிடை செய்.
- அன்பை வைக்கும் இடத்தில் வை.
- அனைத்தும் பெருமாள் சேஷம் துய்.
- அருவருப்பழுக்குக் குவியல் மெய்.

## 25. அரிமுகன் அன்றிக் காப்பார் ஆர்?

பெருமாளைவிட்டால் நமக்கு ரக்ஷகர் யாரும் கிடையாது. அரசர்களிடமோ மற்ற தெய்வங்களிடமோ சென்று சீரழிய வேண்டாம்.

**त्वयि रक्षति रक्षकैः किमन्यैः**
**त्वयि चारक्षति रक्षकैः किमन्यैः।**
**इति निश्चितधीः श्रयामि नित्यम्**
**नृहरे वेगवतीतटाश्रयं त्वाम्॥**

***--- காமாஸிகாஷ்டகம்.***

காஞ்சி நகரத்தில் திருவேளுக்கை என்னும் திவ்யதேசத்திலுள்ள நரசிங்கப்பெருமாளைப் போற்றும் காமாஸிகாஷ்டகத்தில் உள்ளது இந்தச் சுலோகம்.

> நரஹரிப் பெருமானே! நீ காப்பாற்றுகையில் வேறு ரக்ஷகர்களால் என்ன பயன்? (உன்னை விட நன்றாகவா காப்பாற்றுவார்கள்?) நீ காப்பாற்றாத பொழுதும் வேறு ரக்ஷகர்களால் என்ன பயன்? (உன்னை மீறிக் காப்பாற்ற அவர்களால் முடியுமா?) என்று தீர்மானம் பண்ணி வேகவதிநதிக்கரையில் உள்ள உன்னையே ஆச்ரயிக்கிறேன்.

அரிமுகப்பெருமாள் நரசிங்கர். அவர் ஒருவரே நமக்கு ரக்ஷகர். பிறரை நம்பி ஏமாறவேண்டாம்.

## 26. அயன் பதவியிலும் அல்லல் பார்.

பிரம்மபதவி முதலிய உயர்பதவிகள் கூட விரும்பத்தக்கவை அல்ல. அவற்றில் ஆசை வேண்டாம்.

> **प्राजापत्य-प्रभृति-विभवं प्रेक्ष्य पर्यायदुःखम्**
>
> --- ***தயாசதகம்***

திருமலையில் ஏதேனுமொன்றாகப் பிறவியெடுக்கத் திருமாலருள் பெற்றார் விரும்புவது ஏன்? இந்தச் சுலோகபாதத்தின் அர்த்தம்:

> பிரம்மாவுக்குக் கிடைத்த விபவம் அதிகமாக இருக்கலாம். ஆனாலும் அதிலும் துக்கத்திற்குக் குறை இல்லை.

வேதாபஹாரக்கதை, தலை கிள்ளப்பட்ட கதை, முதலியவற்றிலிருந்து தெரிகிறது, அயன் பதவியிலும் அல்லல் தான் என்று. அதை எதற்கு நாம் நாடவேண்டும்? அதைவிட உயரிய வரம் பெறலாமே, திருவேங்கடமலையில் பிறவி எடுத்தால் புண்ணியமாகுமே. குலசேகராழ்வார் ஊனேறுசெல்வத்து என்ற பதிகத்தில் அருளிச்செய்ததை எண்ணித் தயாதேவியின் அணைப்பு கலந்த அருட்பார்வை அன்றோ அவர்களை இப்படி நினைக்கவைத்தது என்கிறார். இதிலிருந்து நமக்கு இன்னொரு நீதியும் கிடைக்கிறது. பிரம்மா முதலியவர்களைச் சரணடைய வேண்டாம் என்று. தானே தண்ணீரில் விழுந்து தத்தளிப்பவர்கள் பிறரைக் கரையேற்றுவரோ?

## 27.அழிவார் அடியார்க்குறை காண்பார்.

திருமாலடியவர்களிடம் குறைகாணக்கூடாது.

> **अच्चासण्णविणासा अच्चुय पच्चन्ति तावये भत्तयने।**
>
> **मोक्करुईणसुमग्गे मूढा दियहयर मण्डलम्मिव छिद्दम्**
>
> --- ***அச்யுதசதகம்.***

அச்சுதன் அடியார்களைப் பற்றிய அனேகச் சுலோகங்களில் இது ஒன்று. பிராகிருத மொழியில் உள்ள இதன் அர்த்தம்:

> அச்சுதனே! உன் பக்தரிடம் தோஷங்கள் சொல்கிறவர்கள் விநாசகாலத்தை நெருங்குகிறார்கள். (இதைச் சொல்விளையாட்டு மூலம் விளக்குகிறார்.) அந்த பக்தர்கள் சூரியனை ஒத்தவர். இதற்கு மூன்று காரணங்கள் சொல்லலாம். முதலாவதாக, பக்தன், சூரியன் என்கிற இருவருமே மோக்ஷமார்க்கத்தில்

உள்ளவர். (சூரியமண்டலத்தைப் பிளந்துகொண்டு அதன்வழியாக மோக்ஷம் செல்வதாக உபநிஷத்து.) இரண்டாவதாக, பக்தனிடம் சித்ரம் பார்ப்பவர்களுக்கு விநாசகாலம் நெருங்குகிறது. இது போலவே மரணகாலத்துக்கு நெருங்கிய காலத்தில் சூரியனின் சித்ரம் காணலாம். (சித்ரம் என்றால் பிளவு என்றும் குறை என்றும் இரண்டு அர்த்தங்கள்.) (பெருந்தவறைச் செய்வதால்,) அவர்கள் மூடர்கள். மூன்றாவதாக, அழிவுக்காலமும், அடியாரிடம் குறைகாணும் காலமும் ஒன்றுக்கொன்று தூரத்திலில்லை. மோக்ஷம் போகிறவனுக்கு மரணகாலமும், சூரியமண்டலம் பிளக்கும் காலமும் நெருங்கியவை.

இவ்வாறாகச் சிலேடையால் சொன்ன நீதி என்னவென்றால், பாகவதர்களிடம் குறைதேடிக் கண்டுபிடிக்கும் விபரீதபுத்தி விநாசகாலத்தில் தான் வரும். விநாசத்தை விரும்பாத நாம் பாகவததோஷங்களைப் பார்க்கவே கூடாது.

## 28.அலர்மேல் மங்கை சார்வால் சார்.

தாயாரிடம் ப்ரபத்தி பண்ணி அவள் மூலமாகப் பெருமாளிடம் ப்ரபத்தி பண்ணவேண்டும்.

**व्यासार्यैश्चोक्तम् । प्रतापोष्मल-पितृत्व-दुरासद -भगवत्-समाश्रयण-सिद्धये**
**पुरुषकारानुप्रविष्ट-वात्सल्य-निर्भर- लक्ष्मी-समाश्रयणं**
**श्रीमत्-शब्द-विवरण-मुखेन अभिधीयते इति**

***--- சதுச்லோகீபாஷ்யம்***

சதுச்லோகீஸ்தோத்ரத்தின் இரண்டாம் சுலோக உரைமுடிவில் அருளுகிறார். பெருமாளிடம் சரணாகதி பண்ணுவதற்கு முன் லக்ஷ்மியிடம் ப்ரபத்தி பண்ணும் வழக்கம் ஓராண்வழியாக இருக்கிறதே, அது எப்படிப் பொருத்தமாகிறது என்பது குறித்து.

நடாதூரம்மாளிடம் கேட்டு எழுதும் வ்யாஸார்யர் சொல்கிறார்: பெருமாள் நமக்கெல்லாம் பிதா. பராக்கிரமச்சூடு கொண்டவராதலால் எளிதில் அணுகமுடியாதவர். அவரிடம் நாம் புகலடைவது கைகூடுவதற்காகத் தாயாரின் பரிந்துரை(சிபாரிசு) தேவையாகிறது. அவள் வாத்ஸல்யம் மட்டுமே நிரம்பியவள். அவளைப் புகலடைய வேண்டும். துவயமந்திரத்தில் ஸ்ரீமத் என்ற சொல்லை விவரிப்பதன் மூலம் இது சொல்லப்படுகிறது.

சார்வு நமக்கென்றும் திரு என்கிறார் முதலாழ்வார்களில் ஒருவர். அவளைச் சார்ந்த பிறகு தான் பெருமாளிடம் சரணடைவது என்று ஸம்பிரதாயம். பிராட்டியின் புருஷகாரம் இல்லாமல் நேரடியாகப் பெருமாளிடம் போய்ச் சரணடைய வேண்டாம்.

25 முதல் 28 வரையிலான நாலு அறிவுரைகளையும் ஒருசேரப் பார்ப்போம்.

- அரிமுகனன்றிக் காப்பாரார்?
- அயன் பதவியிலும் அல்லல் பார்.
- அழிவார் அடியார்க்குறை காண்பார்.
- அலர்மேல் மங்கை சார்வால் சார்.

## 29. அற்பரை அரசரை அண்டாதே.

பண்புகெட்ட அரசரிடம் போய்ப் பல்லிளிக்கவேண்டாம்.

**भजन्ति विबुधा मुधा ह्यहह कुक्षितः कुक्षितः**

***---வைராக்யபஞ்சகம்***

தனிகர்களிடம் கெஞ்சுவது புலவனுக்கு அழகன்று. விஜயநகரஸாம்ராஜ்யத்துக்கு வந்து ஸம்மானத்தை ஏற்கும்படி வித்யாரண்யர் அழைத்தபொழுது அதை மறுக்கும் வகையில் தேசிகன் அருளிய சுலோகத்தின் கடைசிப் பாதம் இது:

> அற்ப அரசர்களை அறிஞர்கள் அண்டிவாழ அவசியமில்லை. ஆயினும் புலவர்கள் தங்கள் வயிற்றுப்பாட்டுக்காக வீணே அற்பரை நாடுகிறார்கள். அந்தோ பரிதாபம்.

இங்கு குக்ஷித: என்ற சொல்லை இரண்டு அர்த்தங்களில் கையாண்டிருக்கிறார். குக்ஷி-த: என்று பிரித்தால் வயிறு காரணமாக எனப்பொருள். கு-க்ஷித: என்று பிரித்தால் கெட்ட அரசர்களை என்று அர்த்தம். கெட்ட அரசர்களை வயிறு காரணமாக அடைகிறார்கள் என்பது குக்ஷித: குக்ஷித: என்று வேடிக்கையாக வந்தது. அரசர்க்கு அடிமைப்பட்டு வாழ்வானேன்?

## 30.அன்னியதெய்வம் அணுகாதே.

பிரம்மா, சிவன் முதலிய தேவதாந்தரங்களை விலக்கவேண்டும்.

**ब्रह्मा गिरीश इतरेऽप्यमरा य एते**

**निर्धूय तान् निरय-तुल्य-फल-प्रसूतीन्।**

प्राप्तुं तवैव पद-पद्म-युगं प्रतीताः
पातिव्रतीं त्वयि वहन्ति परावरज्ञाः॥

--- ***சரணாகதிதீபிகா.***

யார் தேவதாந்தரங்களை விலக்குகிறார்கள்? ஏன் விலக்குகிறார்கள்? விடை உள்ளது இந்தச் சுலோகத்தில்:

> பெருமாளே! உயர்வு தாழ்வு தெரிந்த தத்வஜ்ஞானிகள் உன் அடியிணையை மட்டும் பெற விரும்புகிறார்கள். பிரம்மாவையும், சிவனையும், மற்ற தேவர்களையும், ஒதுக்குகிறார்கள். அவர்கள் தரும் (ஸ்வர்க்கம் முதலிய) பலன்கள் நரகத்திற்குச் சமமே. அவை வேண்டாம். பதிவ்ரதைப்பெண் போல் உன்னிடம் மட்டுமே பக்தி பூணுகிறார்கள்.

இரண்டு காரணங்கள் வேற்றுத் தேவதைகளை விலக்குவதற்கு. ஒன்று அவர்கள் தரவல்ல பலன் நமக்கு வேண்டாம். நாம் விரும்பும் பலனை அவர்கள் தர முடியாது. இரண்டாவது, பெண்ணின் கற்பு நெறி போன்றது ப்ரபந்நனின் நெறி. பெருமாளுக்கு வாழ்க்கைப் பட்டபின் மற்ற தெய்வங்களை ஏறெடுத்தும் பார்ப்பதற்கில்லை.

## 31.அயலார்க்கல்லல் பண்ணாதே.

பிறரைத் துன்புறுத்தக் கூடாது.

श्रूयतां धर्मसर्वस्व ...इत्यादिகளிற்படியே ...
निषिद्धवर्जनं प्राचुर्येण प्रधानम्

--- ***ப்ரதாநசதகம்.***

இந்த வாக்கியத்தில் ஒரு ப்ரமாணச் சுலோகத்தை மேற்கோள் காட்டி அறிவுரை வழங்குகிறார். அந்தச் சுலோகம் பஞ்சதந்திரத்திலும் மேற்கோள் காட்டப்பட்டுள்ளது. அந்த முழுச் சுலோகத்தின் பொருளுடன் இந்த வாக்கியத்தின் அர்த்தம்:

> அறத்தின் மொத்தப்பொருளைச் சொல்லுகிறேன் கேளுங்கள். மனதில் நன்றாகப் பதிய வைத்துக் கொள்ளுங்கள். தனக்கு எதுஎது வேண்டாததோ அதையெல்லாம் பிறருக்கும் பண்ணக்கூடாது. இது முதலான பிரமாணங்களில் தவிர்க்கச் சொன்னவற்றைத் தவிர்ப்பது முக்கியம்.

செய்ய விதித்தவற்றைச் செய்வதைக் காட்டிலும் நிஷேதித்ததைச் செய்யாமலிருப்பது பிரதானம். தனக்குப் பிரதிகூலமானதைப் பிறருக்கும் பண்ணக்கூடாது. இதில் பிறரையும் தன் போல் பாவிக்கவேண்டும்.

## 32.அள்ளலில் விழுந்தே அழுந்தாதே.

பிரகிருதி என்னும் பெருஞ்சேற்றில் விரும்பி விழுந்து அழுந்திப்போகாதே.

**கள்ள மனத்துடன் கண்டு முயன்ற கடுவினையால்**
**நள்ளிருளாழியில் நற்சுவை ஐந்தென நாடியதோர்**
**அள்ளலில் நாளும் விழுந்தழியாவகை ஆரணநூல்**
**வள்ளல் வழங்கிய வான்படியான வழி இதுவே.**

***--- பரமபதஸோபானம்.***

விவேகத்தின் சிறப்பைச் சொல்லவந்த இந்தப் பாடலின் கருத்து:

நாம் ஒரு பெரிய சேற்றில் விழுந்து மாட்டிக்கொண்டிருக்கிறோம். வெளியே வருவதற்குக் கஷ்டமான புதைசேறு. கள்ளமனம் என்றும் கடுவினை என்றும் இருவர் நம்முடன். நம்மை மேன்மேலும் இந்தச் சேற்றுக்குள் அழுத்துகின்றனர். எந்த வழியால் வெளிவரலாமெனத் திசைதெரியாதபடி மிகுந்த இருட்டு(நம் அறியாமை). போதாக்குறைக்கு சேற்றூக்குள்ளேயே ஐந்து(புலன்கள் என்னும் ) கவர்ச்சிகள் இழுக்கின்றன. இந்நிலையில் வேதமெனும் வள்ளல் நமக்கு வெளிவரப் படிக்கட்டு (விவேகமென்பது)கட்டுகிறது.

இன்னுமா நாம் அந்த அள்ளலிலேயே உழலவேண்டும்? வேண்டாமிந்தப் பாழும் பிரகிருதி. பரமபதத்திற்கான ஸோபானம் தான் வேண்டும். அதையே பிடித்துக்கொண்டு ஏறுவோம்.

29 முதல் 32 வரை நாம் செய்யக்கூடாததாகச் சொன்ன நாலு என்னவென்றால்:

- அற்பரை அரசரை வேண்டாதே.
- அன்னிய தெய்வம் அணுகாதே.
- அயலார்க்கல்லல் பண்ணாதே.
- அள்ளலில் விழுந்தே அழுந்தாதே.

## 33.அதுவாய் வருவதை ஏற்றுக்கொள்.

நம் முயற்சி இல்லாமல் கிடைக்கும் போகங்களை ஒதுக்காமல் ஏற்கலாம்.

**स्मरन्ति च मन्वादयः।**

अक्लेशेन शरीरस्य कुर्वीत धनसञ्चयम्।

अप्रयत्नागतास्सेव्या गृहस्थैर्विषयास्सदा॥

--- *பாஞ்சராத்ரரக்ஷா*

இல்லறத்தவன் விஷயசுகங்களைத் துய்க்கலாமா? பணம் சம்பாதிப்பது தவறா? பதிலளிக்கிறார்:

> மநு முதலிய மஹர்ஷிகள் சொல்கிறார்கள்: உடலை வருத்தாமல் பணத்தைச் சேமிக்க வேண்டும். பெருமுயற்சி செய்யாமலே வந்த இன்பங்களை மட்டும் கிருஹஸ்தர்கள் நுகரவேண்டும்.

பணத்திற்காக நாய்ப்பாடு படவேண்டாம். பேயலைச்சல் அலைய வேண்டாம். ஓடாய்த்தேய வேண்டாம். தானாகவே எளிதாகக்கிடைத்த பணத்தையோ இன்பத்தையோ திரஸ்காரம் பண்ணவும் வேண்டாம். அப்படிக் கிடைக்கும் பணமே போதும். உடலுழைப்பெல்லாம் வேறு ஸத்காரியங்களுக்குச் செய்யலாம். கிருஹஸ்தர்கள் இப்படி விஷயாநுபவம் பண்ணலாம். ஸந்யாஸிகள் அதுவும் பண்ணலாகாது என்பது வேறு விஷயம்.

## 34.அன்னப்புள் போல் ஸாரம் கொள்.

ஸாரமான விஷயங்களை மட்டும் ஏற்றுக்கொள்ளவேண்டும்.

अनन्तपारं बहु वेदितव्यम् अल्पश्च कालो बहवश्च विघ्नाः।

यत् सारभूतं तदुपाददीत हंसो यथा क्षीरमिवाम्बुमिश्रम्॥

**என்கிற ச்லோகத்தில் सारभूतं என்கிற பதத்தாலே ப்ரதிபந்நமான**

**निरुपाधिकसारத்தை**

***——முநிவாஹநபோகம்***

தெரிந்துகொள்ளவேண்டியவற்றில் மிகத்தேவையானதை மட்டும் கிரகிப்பது நல்லது. இதைச் சொல்லும் உத்தரகீதைச் சுலோகம் ஒன்றை மேற்கோளாகக் காட்டி அருளிய வாக்கியம்:

> அறியவேண்டியதோ கரைகாணாதபடி ஏராளமானது. காலமோ மிகக் குறைவு. தடங்கல்களோ நிறைய. எது ஸாரமானதோ அதைக் கிரகிக்கவேண்டும். ஹம்ஸபக்ஷி நீர்கலந்த பாலிலிருந்து பாலை மட்டும் கிரகிப்பது போல.

அன்னப்பறவைக்கு ஒரு தனித்திறமை இருக்கிறது. பாலையும் நீரையும் கலந்துவைத்தால் பாலைமட்டும் பிரித்தெடுத்துப் பருக அதனால் முடிகிறது. நீரை மிச்சம் வைத்துவிடுகிறது.

நமக்கு வேறோரிடத்தில் இந்தமாதிரித் திறமை தேவை. அஸாரமான பல வித்யைகளின் நடுவே ஸாரதமமான பகுதியும் கலந்து கிடக்கும்போது மற்றவற்றை ஒதுக்கிவிட்டுத் தேவையான ஸாரதமத்தை மட்டும் எடுத்துக் கொள்ளவேண்டும். மொத்தக்கல்வியையும் கற்க முயல்வது வீண். அது ஸாத்தியமில்லை. குவிந்துள்ள பாடங்கள். குறுகிய காலம். இடையிடையே இடைஞ்சல்கள். அல்பஸாரங்களையெல்லாம் வேண்டாமென்று தள்ளுங்கள். மிக மிக ஸாரமானதை மட்டும் கொள்ளுங்கள்.

## 35. அண்டினவரிடம் பரிவைக்கொள்.

நம்மைப் புகலாக அடைந்தவரை நாம் பரிவுடன் ரக்ஷிக்கவேண்டும்.

**शिबिप्रभृतिகள் அறுதியிட்டபடியே சரணாகத-ரக்ஷணமே**

**தர்மங்கள் எல்லாவற்றுக்கும் முடிசூடின தர்மம்**

*--அபயப்ரதாநஸாரம்*

இதிஹாஸ ஸமுச்சயத்திலிருந்து இரண்டு ச்லோகங்களை மேற்கோள் காட்டிச் சொல்கிறார். புகலடைந்தவரைக் காத்தலே பரமதர்மம் என்பதை. அந்த ச்லோகங்களின் பொருள்களுடன் இந்த வாக்கியத்தின் அர்த்தம்:

> அறங்கள் பல உண்டு. அவற்றுள் தலையாயது சரணாகத-ரக்ஷணம் என்பது. அடைக்கலமாக அடைந்தவரைக் காப்பாற்றுவது எல்லா தர்மங்களுக்கும் ராஜா. இது குறித்து சிபிசக்ரவர்த்தி சொன்னது: பக்ஷியே! பயபீதியுடன் நம்மை அடைந்த பிராணிகளுக்கு அபயம் அளிப்பது என்கிற தர்மத்தைக் காட்டிலும் பெரியதொரு தர்மம் கிடையாது.

இது மஹாதர்மம். சரணடைந்தவனைக் காப்பாற்றுவதால் அக்ஷயபலன் ஏற்படும். தர்மநிச்சயதத்துவம் அறிந்த பண்டிதர்கள் இப்படிச் சொல்கிறார்கள். அடைக்கலமாக அடைந்தவரை உதாஸீநப்படுத்தக் கூடாது. காட்டிக்கொடுக்கக்கூடாது. வேறொரு தர்மத்தைச் சாக்கிட்டு விட்டுக்கொடுக்கக்கூடாது. பரிவுடன் காக்கவேண்டும்.

## 36.அகிலைச்வர்யம் புல் போல் கொள்.

உலகத்திலுள்ள மற்றெல்லா விபவங்களையும் புல் போல் பயனற்றதாகக் கருது.

जाताकांक्षा जननि युवयोरेकसेवाधिकारे

मायालीढं विभवमखिलं मन्यमानास्तृणाय।

---***ஸ்ரீஸ்துதி.***

எல்லா ஐச்வர்யங்களும் புல்லுக்குச் சமம் என்று சொல்லும் இந்தச் ச்லோகத்தின் அர்த்தம்:

> தாயே! உங்கள் இருவருக்கு மட்டுமே தொண்டு புரியும் உரிமையில் ஆவல் கொண்டவர்கள் மாயைவசமான விபவம் அனைத்தையும் புல் போல் மதிப்பவர்கள்.

புல்லை நாம் மதிக்காதது போல் தான் ராஜ்ஜியம், பணம், பதவி, எல்லாமே. தாயாரையும் பெருமாளையும் ஸேவித்துக் கைங்கரியம் பண்ணுபவர்களுக்கு இதிலெல்லாம் கண்ணோட்டமே இருக்காது. இதெல்லாம் மாயாலீடமான விபவங்கள். மோக்ஷவிபவம் தான் மாயைக்கடங்காத விபவம்.

கடந்த நாலு உபதேசங்களாவன :

- அதுவாய் வருவதை ஏற்றுக்கொள்.
- அன்னப்புள் போல் ஸாரம் கொள்.
- அண்டினவரிடம் பரிவைக்கொள்.
- அகிலைச்வரியம் புல் போல் கொள்.

## 37.அஞ்சுக வீணர் குழுவுக்கு.

கூட்டங்களில் பங்குகொள்ளப் பயப்படு.

**अहेरिव गणात् भीतः सम्मानान्मरणादिव।**

**कुणपादिव यः स्त्रीभ्यः तं देवा ब्राह्मणं विदुः॥**

**இத்யாதிகளிற்படியே தேவர்களுக்கும் பஹுமாந-விஷயனாம்.**

***––– ரஹஸ்ய-ரத்நாவளி-ஹ்ருதயம்***

மஹாபாரதத்திலிருந்து எடுத்த இந்தமேற்கோளுக்கு அர்த்தம்:

> எவன் பாம்பிடம் போல் கூட்டத்திடம் பயப்படுகிறானோ, மரணத்திடம் போல் ஸம்மானத்திடம் பயப்படுகிறானோ, பிணத்திடம் போல் பெண்களிடம் பயந்து விலக்குகிறானோ, அவனைத் தேவர்களும் அந்தணனென்று கௌரவிக்கிறார்கள்.

ப்ரபந்நனுடைய வ்ருத்திக்கு ஒவ்வாதது குழுக்களும் கூட்டங்களும். விவிக்ததேசஸேவித்வம் அரதிர் ஜநஸம்ஸதி என்று கீதையிலும் சொன்ன விஷயம் இது.

## 38.அஞ்சுக நரகத் துயருக்கு.

நரகயாதனைகளுக்குப் பயப்படு.

**“நமன் தமர் பாசம் விட்டால் அலைப்பூணுண்ணும்” அவ்வல்லல்களையும் வெஞ்சொலாளரான நமன் தமர் செய்யும் வேத னைகளையும் தீரனான தர்மபுத்ரன் கேட்டு மோஹித்து விழும்படியான நரகமார்க்கத்தின் படிகளையும் அதி-துஸ்ஸஹ-அநந்த-நரக-யாதனைகளையும் தாபத்ரயாத்யாயாதிகளிலே பரக்கக்கேட்டு “ अहं भीतोस्मि”, “தெளிதொறும் நன்றும் அஞ்சுவன் நரகம் நான் அடைதல்” என்னும் தீவ்ரபீதியாலே**

***—— பரமபதஸோபாநம்***

நரகத்துக்குப் பயப்படுபவன் பாவங்கள் செய்யமாட்டான். நரகத் துன்பங்கள் கோரமானவை. திருவாய்மொழியிலிருந்தும் ஜிதந்தேஸ்தோத்ரத்திலிருந்தும் மேற்கோள் காட்டி இதை விளக்குகிறார்.

> யமதூதர்கள் பாசக்கயிற்றை நம்மீது போட்டால் உண்டாகும் துன்பங்களையும், கடுஞ்சொல் பேசும் அந்த யமதூதர்கள் செய்யும் சித்திரவதைகளையும், அஞ்சாநெஞ்சம் கொண்ட தர்மபுத்ரனையே பயமுறுத்துமளவுக்குக் கொடியதான நரகவழிகளையும், தாங்கொண்ணாத எண்ணற்ற நரகயாதனைகளையும் தாபத்ரயாத்யாயம் முதலியவற்றில் விரிவாகக்கேட்டு ‘‘நான் இந்தப் பயங்கரமான ஸம்ஸாரத்தில் பயந்து கிடக்கிறேன்’’ ‘‘நரகமடைதலை நான் மிகவும் அஞ்சுகிறேன்’’ என்றும் சொன்னபடி தீவிரபயத்தாலே.

புராணங்களில் நரகவருணனைகளைக் கேட்டாலே பயமாயிருக்கிறது. இவ்வாறு பயப்படுவது நல்லது. நம்மை நல்வழிச்செலுத்த இந்தப்பயம் உதவும்.

## 39.அஞ்சுடன் ஆறாம் புலனடக்கு.

எல்லா இந்திரியங்களையும் அடக்கவேண்டும்.

**அடங்காக் கரணங்கள் ஐந்துடன் ஆறும் அடக்கி முன்னம்**

***——— ஹஸ்திகிரிமாஹாத்ம்யம்***

பிரம்மா இத்தனை நாள் வீணாகக் காயக்கிலேசப்பட்டோம் என்று தன்னைத் தானே வெறுத்துக் கொள்கிறார். இதைக்கூறிய பின் அதையடுத்த ஒரு பாசுரத்தில் வரும் இந்த வரியின் அர்த்தம்:

> கரணங்கள் ஒவ்வொருவருக்கும் பதினொன்று இருக்கின்றன. அவை இரண்டு விதமானவை. ஐந்து ஜ்ஞானேந்த்ரியங்கள். ஆறு கர்மேந்த்ரியங்கள். இந்த ஐந்தும் ஆறும் நமக்கு எளிதில் அடங்காதவை. இவற்றை அடக்கவேண்டும்.

மெய், நா, கண், மூக்கு, செவி என்கிற ஐந்தும் ஞானேந்திரியங்கள். இத்துடன் மனமும் சேர்ந்து ஆறாகும். கை, கால், வாய், பாயு, உபஸ்தம், என்னும் ஐந்தும் கர்மேந்திரியங்கள். இந்தப் பதினோரு இந்திரியங்களையும் நம் வசத்திற்குக் கொண்டுவர வேண்டும்.

## 40.அஞ்சலி செய் பெருமாளுக்கு.

பெருமாளுக்குக் கை கூப்பி அஞ்சலி செய்யவேண்டும்.

**கண்ணன் கழலிணை கூப்பிய கையின் பெருமை தனை**
**எண்ணம் கடக்க எழுமைனத் துறைவர் இயம்புதலால்**

***—— அம்ருதாஸ்வாதினி.***

ஆளவந்தாரின் ஸ்தோத்ரரத்நத்தில் ஒரு ச்லோகத்தில் அஞ்சலியின் வைபவம் பேசப்படுகிறது. அதற்கு உரையாக அமைந்தது ஸ்வாமி தேசிகனின் அஞ்ஜலிவைபவம். அதன் கடைசிப் பாசுரப்பகுதி மேலே தரப்பட்டுள்ளது. இதன் அர்த்தம்:

> கையைக் கூப்புவது அஞ்ஜலி. இதைக் கண்ணன் திருவடிகளுக்குச் செய்யவேண்டும். அப்போது அதன் பெருமை எண்ணற்கரியதாக ஆகும். இவ்வாறு யாமுநார்யர் அருளுகிறார்.

என்னென்ன பெருமை தெரியுமா? 1.விரைவில் பலன் தருதல். 2.எல்லாப் பாவங்களையும் போக்குதல். 3.எல்லா மங்களங்களையும் உண்டாக்குதல். 4.தன் தொடர்புள்ளவரையும் காப்பாற்றுதல். 5. அழியாப்பலன் தருதல் என்று எத்தனையோ. இதெல்லாம் அந்த ச்லோகத்தில் ஆளவந்தார் சொன்னவை.

கடந்த நாலு அறிவுரைகளைச் சேர்த்துப்பார்ப்போம்.

- அஞ்சுக வீணர் குழுவுக்கு.
- அஞ்சுக நரகத் துயருக்கு.
- அஞ்சுடன் ஆறாம் புலனடக்கு.
- அஞ்சலி செய்பெரு மாளுக்கு.

## 41.அபராதமிலாப் பணிகள் செய்.

கைங்கரியங்களில் அபராதம் புகாதபடி ஜாக்கிரதையாக இருக்கவேண்டும்.

देवी-भूषण-हेत्यादि-जुष्टस्य भगवंस्तव ।
नित्यं निरपराधेषु कैंकर्येषु नियुंक्ष्व माम्॥

--- *ந்யாஸதசகம்*

வழுவிலா அடிமை செய்யவேண்டும் நாம் என்று ஆழ்வார் கூறுவது போல் குற்றம் இல்லாத கைங்கரியங்களைப் பண்ணுவது குறித்த இந்த ச்லோகத்தின் அர்த்தம்:

> பகவானே!, பிராட்டி, திருவாபரணங்கள், திருவாயுதங்கள், இவற்றுடன் கூடிய உனக்கு எப்பொழுதும் குற்றம் கலவாத திருப்பணிகளில் என்னை நியமிக்க வேணும்.

கைங்கரியங்கள் பண்ணுவது எளிதன்று. அதில் எத்தனையோ தோஷங்கள் ஸம்பாவிதங்கள். குற்றங்களுடன் பணிகள் செய்தால் தீங்கு நேரும். அவை நேராதபடி நாம் ஸாவதாநராக இருக்கவேண்டும். அதற்காகப் பெருமாளையே பிரார்த்திக்கிறோம். நம்மாலானதென்ன?

## 42.அற்பப் பகையை அலக்ஷ்யம் செய்.

பகைவர்களில் பலஹீனரை அலட்சியப் படுத்து.

विपक्ष-जाति-भाजोऽपि क्षुद्रान् अनपकुर्वतः ।
सुपर्ण इव भूनागान् उपेक्षध्वं तरस्विनः॥

***---யாதவாப்யுதயம்***

நம் பலத்தைப் பலஹீனரிடம் காண்பிப்பது அழகன்று எனச் சொல்ல வந்த கிருஷ்ணர் கூறுவது என்னவென்றால்:

> ஏ பலசாலிகளே! உங்கள் பகைவர் கூட்டத்தைச் சேர்ந்தவராயினும் அற்பவீர்யரும், அபகாரம் பண்ணாமல் ஒதுங்கியவருமாயிருப்போரை உபேக்ஷித்துவிடுங்கள். கருடன் மண்பாம்புகளை உபேக்ஷிப்பது போல.

நமக்குச் சமமான பலம் கொண்டவரோடு மோதி ஜயிப்பது அழகு. நம்மோடு பகைபாராட்டும் எல்லாரோடும் யுத்தம் செய்யாதீர். பலஹீனரை ஒருபொருட்டாக நினைத்துப் போர் புரிவது கூட இழுக்கு. இன்னொன்று. நம் வம்புக்கு வராதவரிடம் நம் பலத்தைக் காண்பிக்கவேண்டாம்.

பெரியபெரிய பாம்புகளை உண்ணும் கருடன் மண்புழுக்களை லட்சியம் பண்ணுவதில்லை. அவற்றுக்கும் மண்பாம்புகள் என்று தான் பெயர். அம்மாத்திரத்தாலேயே கருடன் அவற்றைச் சீந்துகிறதோ? பெரும்பாம்புகள் தான் மக்களுக்குத் தீங்கு செய்பவை. மண்புழுக்களால் ஒரு அபகாரமும் கிடையாது. அவற்றை ஏன் கொல்லவேண்டும்? அரசர்களுக்குச் சொல்லும் இந்த உபதேசத்தில் நமக்கும் இரண்டு அறிவுரைகள் அடங்கியுள்ளன. சண்டை, சாஸ்த்ரவாதம், எதுவானாலும் சரி, வல்லமை குறைந்தவரை அலட்சியம் பண்ணுவோம். வம்புக்கு வராதவரையும் வலிய இழுக்கமாட்டோம். நம்மை வலிமையுடன் எதிர்ப்போருடன் மட்டும் மோதுவோம்.

## 43.அனுகரணத்தை அளவாய்ச் செய்.

பெரியவர்களை அனுகரிப்பது, அவர்கள் போலவே நடையுடை கொள்வது, நல்லது தான். ஆனால் அதை அளவு மீறிச் செய்யக் கூடாது.

**अपि सत्पथ-निष्ठानां आशाः पूरयतामपि।**
**अगस्त्य-वृत्तिर्मेघानां हन्त मालिन्य-कारणम्॥**

***---ஸுபாஷிதநீவீ***

தகுதியில்லாமலே பெரியோர் போலச் சில அனுகரணங்களை மட்டும் பண்ணுவது சரியன்று. அதிகம் பண்ணினால் விபரீதம் கூட. இதைச் சொல்லும் ச்லோகத்தின் அர்த்தம்:

> அகஸ்தியரை அனுகரணம் பண்ணுகின்றன மேகங்கள். அவர் ஸத்பதத்தில்(நல்வழியில்) நிஷ்டை கொண்டவர். அவரைப்போல் மேகங்களும் ஸத்பதத்தில்(ஆகாயமார்க்கத்தில்) நிற்கின்றன. அவர் ஆசைகளைப் பூர்த்தி செய்பவர்.(அனுக்கிரகத்தால் மனோரதங்களை நிறைவேற்றுபவர்.) அவரைப்போல் மேகங்களும் ஆசைகளை(திசைகளை)ப் பூர்த்தி செய்கின்றன(நிரப்புகின்றன.) (இது வரை அனுகரணம் வரம்புக்குள் இருப்பதால் சரி தான்.) அவர் கடல் நீரை முழுதும் குடித்தவர். அவரைப்போல் மேகங்களும் கடல்நீரைக் குடிக்கின்றன. ஆனால் முழுதும் குடிக்க முடியவில்லை. அதோடு, குடித்தவுடன் கருத்துவிடுகிறது. ஐயோ பாவம்!

(போட்டி போடுவானேன், அவமானப்படுவானேன்?) இங்கு மாலிந்யம் என்ற சொல்லுக்கு, அழுக்கு என்றும், கருமை என்றும், இரண்டு அர்த்தங்கள். மேகத்திற்கு ஏற்பட்ட கருமையை மாசாகக் கருதி வேடிக்கை பண்ணுகிறார். அந்த மாசு அகஸ்தியரை அளவுக்கு மீறி அனுகரிக்க முயன்றதால் வந்ததாக உத்ப்ரேக்ஷிக்கிறார். நமக்கு நீதி: மிகப்பெரியோருடன் போட்டி போடக் கூடாது. அவர்கள் போல் ஓரளவு ஆசரிக்கலாம். அளவுக்கு மேல் அனுகரித்தால் விபரீதத்தில் முடியும்.

## 44.அனுதினம் ஆராதனத்தைச் செய்.

பெருமாள் திருவாராதனத்தை நித்தியம் பண்ணவேண்டும்.

नित्यं चैतत् वैश्वदेववत् भगवत्समाराधनम्
नित्यं आराधयेत् हरिं इति वचनात्

*---பாஞ்சராத்ரரக்ஷா*

வெளியூருக்குப் போகும்போது கூட விட்டுப்போகாமல் திருவாராதனம் பண்ணுவது தேவை தானா என்றால்:

> வைச்வதேவம் போலே திருவாராதனமும் பிரதி தினமும் பண்ணவேண்டும். தினமும் ஹரியை ஆராதிக்கவேண்டும் என்று சாஸ்த்ரவசனம் இருப்பதால்.

இஜ்யை என்னும் கர்மமும் வைச்வதேவம் என்னும் கர்மம் போல் நித்யமானது தான். அதைச் சில நாட்கள் பண்ணியும் சில நாட்கள் பண்ணாமலிருப்பது கௌணபக்ஷம் தான்.

சென்ற நாலு அறிவுரைகளாவன:

- அபராதமிலாப் பணிகள் செய்.
- அற்பப்பகையை அலக்ஷ்யம் செய்.
- அனுகரணத்தை அளவாய்ச் செய்.
- அனுதினம் ஆராதனத்தைச் செய்.

## 45.அநிவேதிதமாய் உண்ணாதே.

பெருமாளுக்கு நிவேதனம் பண்ணாத உணவை உண்ணக்கூடாது.

**மாலமுது செய்யாமல் வந்தவெல்லாம்**
**... தின்னார் தாமே**

***–– ஆஹாரநியமம்***

நாம் சாப்பிடும் எந்த வஸ்துவையும் முதலில் பெருமாளுக்கு அமுதுசெய்வித்த பின் அவருடைய பிரசாதமாக உட்கொள்ளவேண்டும். ஆஹாரங்களில் என்னென்ன நியமங்கள் தேவை என்பதைச் சொல்லும் ஆஹாரநியமம் என்னும் நூலில் இதை இப்படிச் சொல்கிறார்:

> பெருமாள் அமுது செய்யாமல் வந்த எல்லாப் பண்டங்களையும் பெரியோர் தாமும் உட்கொள்ள மாட்டார்கள்.

ப்ரதானஹவிஸ்ஸை மட்டும் சமர்ப்பித்து விட்டு, மற்றவற்றைச் சமர்ப்பியாதிருத்தல், மாலையுணவு, இரவுணவு, இவற்றைச் சமர்ப்பியாது கொள்ளுதல், சமர்ப்பிக்க யோக்கியம் இல்லாதவற்றைச் சாப்பிடல், பால்,பழம்,முதலிய சிறு வஸ்துக்களைச் சமர்ப்பிக்காமை, பிறர் வீட்டிலோ பொது இடத்திலோ ஸமர்ப்பிக்காமலே சாப்பிடல், இது மாதிரியான பழக்கங்களைத் தவிர்க்க வேண்டும். **இது எல்லாம் என்ற பதத்தின் கருத்தாம்**.

## 46.அன்பரை அதிசங்கிக்காதே.

நண்பரை அதியாகச் சந்தேகிக்கக்கூடாது

**अप्रशान्तेषु विस्रम्भं अतिशङ्कां सुहृत्सु च।**
**नीतिसन्दंशिना ऋद्धेः समुद्धरत कण्टकौ॥**

***---யாதவாப்யுதயம்***

கிருஷ்ணன் அரசர்களுக்குச் செய்யும் உபதேசங்களில் இதுவும் ஒன்று:

> நம் செல்வச் செழிப்புக்குத் தடைமுள்ளாக இருப்பவை இரண்டு. அடங்காதவர்களை நம்புவதும், நண்பர்களை மிகவும் சந்தேகிப்பதும் என்ற இரண்டு. நீதி என்ற இடுக்கியைக் கொண்டு இவ்விரு முட்களையும் அகற்றி விடுங்கள்.

யாரை நம்புவது, யாரை நம்பாமல் இருப்பது, என்பது ராஜநீதியில் முக்கியம். சிலர் நமக்கு அடங்காதவர்கள். நம்மை மீறிச்செல்ல நினைப்பவர்கள். அத்தகையோரை நம்பலாகாது. சிலர் நம் வளர்ச்சியை விரும்பும் நண்பர்கள். அவர்களின் மேல் அனாவசியச் சந்தேகம் கொண்டாலும் நம் காரியம் கெட்டுப்போகும். முள்வாங்கியால் முள்ளைக் களைந்தெறிவது போல, நம்பத்தகாதோரை நம்புதல், நம்பிக்கைக்குரியவரை நம்பாதிருத்தல் என்ற இரு முட்களையும் நீதியால் அகற்றவேண்டும். இல்லையேல், முள் குத்தும் வலி போல அவர்களால் தொல்லை தொடரும்.

## 47.அருமறைநெறியில் வழுவாதே.

வேதநெறியிலிருந்து விலகக்கூடாது.

**प्रियाय मम विष्णोश्च देवदेवस्य शार्ङ्गिणः।**
**मनीषी वैदिकाचारं मनसाऽपि न लङ्घयेत्॥**
**என்று ப்ரபத்தியத்தியாயத்திலே ப்ரஸித்தம்**

***--ரஹஸ்யத்ரயஸாரம்.***

சரணாகதி பண்ணிக்கொண்ட பிறகும் கூட, வேதநெறியில் நிற்பதால் பலன் தேவையில்லாவிட்டால் கூட, சாஸ்த்ரப்படி நடந்தாகத்தான் வேண்டும் என்று வலியுறுத்துவது இந்த சாஸ்த்ரீய நியமநாதிகாரத்தின் நோக்கம். இங்கெடுத்த வாக்கியம் லக்ஷ்மி தந்த்ரத்திலுள்ளது. லக்ஷ்மியின் திருவாக்காக அமைந்தது. இதன் அர்த்தம்:

> வேதத்தில் சொன்ன ஆசாரம், ஒழுக்கநெறி, இருக்கிறதே, அதை புத்தியுள்ள எவனும் மனதால் கூட மீறமாட்டான். என்னுடைய ப்ரீதிக்காகவும், தேவதேவனான விஷ்ணுவின் ப்ரீதிக்காகவும். வைதிக ஆசாரத்தை மீறலாம் என்று மனதால் நினைப்பது கூட மடமை.

பெருமாளுக்கும் தாயாருக்கும் உகப்பானதைத்தானே அறிவாளி பண்ணுவான்? அவர்கள் உகப்பு வைதிக ஆசாரத்தில் தான் உண்டாகும். தாயாரே இப்படி அருளியிருக்கிறாள். வைதிக ஆசாரம் என்பது ஸ்நான ஸந்த்யைகள், ஜபஹோமங்கள், வர்ணாச்ரமதர்மங்கள் எல்லாம் அடங்கியது.

## 48.அறிவன்பல்லது கேட்காதே.

அறிவையும் பக்தியையும் தவிர வேறெதையும் பெருமாளிடம் யாசிக்கக்கூடாது.

**பகவத்-அபசாராதிகள் எல்லாவற்றுக்கும் நிதானம்**
**தத்வஜ்ஞானாதி-வைகல்யம் ஆகையாலே**
**तत्पाद-भक्ति-ज्ञानाभ्यां फलं अन्यत् कदाचन।**

**न याचेत् पुरुषो विष्णुं याचनात् नश्यति ध्रुवम्॥**

**இத்யாதிகளிற்படியே அநந்யப்ரயோஜநனாய் தத்வஜ்ஞாநாதி வ்ருத்தியை அபேக்ஷித்து**

***--- ரஹஸ்ய-ரத்நாவளி-ஹ்ருதயம்***

மனிதன் பெருமாளிடம் என்ன யாசிக்கலாம்? என்ன யாசிக்கக்கூடாது? இது குறித்துப் பாஞ்சராத்ர ஸம்ஹிதையிலிருந்து மேற்கோள் எடுத்து விளக்குகிறார்.

> பெருமாளிடம் அபசாரம் முதலிய தோஷங்கள் நமக்கு வரக் காரணம் என்னவென்றால், நம் தத்வஜ்ஞானத்திலுள்ள குறையே. அதனால் இந்த வைகல்யம்(குறைபாடு) நீங்குவதற்காக நாம் பெருமாளிடம் யாசிக்கக்கூடியது இரண்டு. அவன் திருவடியில் பக்தியும் அறிவும். இவ்விரண்டைத் தவிர வேறெதையும் விஷ்ணுவிடம் யாசிக்கக்கூடாது. யாசித்தால் அழிவது நிச்சயம்.

என்னுடைய பக்தியை விருத்திபண்ணு (வளரச்செய்). எனக்கு நல்லறிவை நிறையக்கொடு. என்று விஷ்ணுவிடம் பிரார்த்திக்கலாம். இதையொழிய மற்ற பிரார்த்தனைகள் கூடாது. பரிசுச்சீட்டில் பணம் கொடு. பசுமாட்டிற்குப் பால் கொடு. என்றெல்லாம் அற்பமான

பிரார்த்தனைகள் பண்ணுவது தவறு. தீங்கு விளைவிப்பதும் கூட. நம்முடைய நிஷ்டைக்கும் இழுக்கு. அவனுடைய மஹாப்ரபாவத்திற்கும் இணங்காதது. மற்றை நம் காமங்கள் மாற்று என்று ஆண்டாள் பிரார்த்தித்தது காண்க.

சென்ற நாலு அறிவுரைகளில் பண்ணக்கூடாததாகச் சொன்னவை நாலு :

- அநிவேதிதமாய் உண்ணாதே.
- அன்பரை அதிசங்கிக்காதே.
- அருமறைநெறியில் வழுவாதே.
- அறிவன்பல்லது கேட்காதே.

## 49.அடைக்கலம் மூன்றை வையுங்கள்.

சரணாகதி பண்ணும்போது ஆத்மாவை மட்டுமின்றி பொறுப்பையும் பலனையும் கூட பெருமாளிடம் ஒப்படைத்துவிட வேண்டும்.

अहं मद्रक्षणभरो मद्रक्षणफलं तथा ।
न मम श्रीपतेरेवेति आत्मानं निक्षिपेत् बुधः॥

***---ந்யாஸதசகம்***

சரணாகதிக் கோட்பாட்டை எளிமையாக விவரிக்கும் ந்யாஸதசகத்தில் முதல் ச்லோகமே இது தான்.

> நான், என்னைக் காப்பாற்றும் பொறுப்பு, அதனால் வரும் பலன், இந்த மூன்றையுமே "எனக்கன்று; ஶ்ரிய:பதிக்குத்தான்" என்று அறிவாளியானவன் அடைக்கலமாக வைக்கவேண்டும்.

சரணாகதிக்கு ஆத்மஸமர்ப்பணம் என்றும் பரந்யாஸம் என்றும் பெயர்கள் பிரசித்தமானவை. இந்தப் பெயர்களிலிருந்தே தெரிகிறது, நம் ஆத்மாவையும், அதைக் காக்கும் பரத்தையும் நாம் பெருமாளுக்கு ஸமர்ப்பித்துவிடுகிறோம் என்பது. அதனால் வரும் பலனும் அவனுக்கே என்பது நாம் பண்ணும் ஸாத்விகத் தியாகத்தால் தெரிகிறது. இந்த மூன்று ஸமர்ப்பணங்களும் பிரபத்தி (சரணாகதி) என்னும் கருமத்தில் அடங்கியவை. மூன்றையுமே அடைக்கலமாக வைப்போம் நாம். இதுவே ஓராண்வழியாக நமக்கு வந்துள்ள நெறி.

## 50.அர்ச்சையின் அழகில் மகிழுங்கள்.

விக்கிரகவடிவில் உள்ள பெருமாளின் அழகை அனுபவியுங்கள்.

तुरग-विहग-राज-स्यन्दन-आन्दोळिकादिषु
अधिकं अधिकं अन्यां आत्मशोभां दधानम्।
अनवधिक-विभूतिं हस्ति-शैलेश्वरं त्वां
अनुदिनं अनिमेषैः लोचनैः निर्विशेयम्॥

***---வரதராஜபஞ்சாசத்.***

வரதனின் வடிவழகை வாரிப்பருக விழைகிறார்:

> ஹஸ்திகிரிநாதனே! குதிரைவாகனம், கருடவாகனம், தேர், பல்லக்கு, முதலியவற்றில் மேன்மேலும் அழகு மிளிர்பவனும் அளவிலாச் செல்வம் உடையவனுமான உன்னைத் தினந்தோறும் கண்கொட்டாமல் பார்த்து மகிழ்வேனாக.

அர்சாவதாரத்தின் அழகைக் கண்டு ஆனந்தியுங்கள். இதனால் ஏராளமான நற்பலன்கள் உண்டு.

## 51.அஞ்சர்த்தங்கள் அறியுங்கள்.

அர்த்தபஞ்சகம் எனப்படும் ஐந்து அர்த்தங்களைத் தெரிந்துகொள்ளுங்கள்

**பொருள் ஒன்றென நின்ற பூமகள் நாதன் அவனடி சேர்ந்து**
**அருளொன்றும் அன்பன் அவன் கொள் உபாயம் அமைந்த பயன்**
**மருளொன்றிய வினை வல்விலங்கு என்றிவை ஐந்தறிவார்**
**இருளொன்றிலாவகை என் மனம் தேற இயம்பினரே**

***—— அதிகார சங்கிரகம்***

ஆசார்யர்கள் நமக்குப் பண்ணும் உபதேசங்கள் ஐந்து என்னவெனச் சுருக்கமாக அருளுகிறார்:

> பரமன், ஜீவன், உபாயம், மோக்ஷம், புண்யபாபம், என்ற ஐந்தையும் இருளே இல்லாமல் என் மனம் தெளியும்படியாக ஆசாரியர்கள் சொன்னார்கள். 1.பரமன் ஒருவனே.அவன் பூமகள் நாதன். 2.ஜீவன் அவனுக்கு இயற்கையிலேயே அடிமையானவன். 3.பக்தியும் பிரபத்தியும் உய்யும் வழி. 4.பயன்களில் சிறந்தது மோக்ஷம் எனும் அந் பேரின்பம். 5.இதற்குத் தடையாக இருப்பது கொடிய வினை. இந்த ஐந்தில் அடங்கிவிட்டது ஆசார்யோபதேசத்தின் ஸாரம்.

இதில் தெளிவு ஏற்பட்டால் தேவையான தெல்லாம் அறிந்ததாகும்.

## 52.அறிஞர் வழியில் செல்லுங்கள்.

அறிவாளிகள் காட்டும் வழியில் அவர்களைப் பின்பற்றி நடப்பது நல்லது.

पण्डित-प्रहतेनैव सत्पथेन सहोदिताः ।
विषमेषु स्खलन्तोऽपि न दुर्गतिं अवाप्स्यथ॥

***---யாதவாப்யுதயம்***

வாழ்க்கையையும் வழிநடையையும் ஒப்பிட்டுப் பேசுகிறார்.

> வழியறிந்தவர் நடந்து நடந்து தேய்ந்த வழி ராஜபாட்டையாக இருக்கிறதே, அந்த வழியோடேயே செல்லுங்கள். மேடுபள்ளங்களில் தடுமாற்றம் ஏற்பட்டாலும், வழிதப்பி வேற்றிடம் போகாமல் இருப்பீர்கள்.

என்பது முதல் அர்த்தம்.

> அறிஞர்கள் பலர் நடந்த நல்வழியையே நீங்களும் பின்பற்றுங்கள். சில சங்கடங்களில் பிறழ்ந்துபோனாலும் நரகம் அடையாமல் இருப்பீர்.

இது இரண்டாவது அர்த்தம்.

துர்க்கதி என்ற பதத்திற்கு நரகம் என்றும் தப்பான போக்கிடம் என்றும் இரண்டு அர்த்தங்கள். விஷமம் என்பதற்கு மேடுபள்ளம் என்றும் சங்கட நிலை என்றும் இரண்டு அர்த்தங்கள். இதைக் கொண்டு ஒரே வாக்கியத்தால் இரண்டு கருத்துகளைச் சொல்லிவிட்டார். ஒன்று இப்போது உபதேசிக்க வந்தகருத்து. இன்னொன்று அதற்குத் திருஷ்டாந்தமாக அமைந்த கருத்து. இரண்டும் ஒருசேரச் சொல்லப்பட்டன. வழியில்லா வழியில் போய் முள்ளிலும் கல்லிலும் மாட்டிக்கொண்டு திக்குத்தெரியாமல் அவஸ்தைப் படக்கூடாது. அது போல, அறிஞர்கள் நடந்து காட்டிய நல்வழியை விட்டு, தீயோர் வழியிலோ, விளங்கா வழியிலோ போய், நரகத்தைச் சென்றடையவும் கூடாது.

கடந்த நான்கு உபதேசங்களாவன:

- அடைக்கலம் மூன்றை வையுங்கள்.
- அர்ச்சையின் அழகில் மகிழுங்கள்.
- அஞ்சர்த்தங்கள் அறியுங்கள்.
- அறிஞர் வழியில் செல்லுங்கள்.

## 53.அயல் நாடுகளில் கருமம் வீண்.

பாரத தேசத்திலேயே கருமங்களைப் பண்ணுங்கள்.

**பூமி தன்னில் ஜம்பூத்வீபம் ஒழிந்த மஹாத்வீபங்கள் ஆறும் ஜம்பூத்வீபம் தன்னில் பாரதவர்ஷம் ஒழிந்த வர்ஷங்கள் எட்டும் போகபூமிகள் ஆகையாலே புண்யகர்ம விசேஷ அனுஷ்டானத்திற்கு உசித க்ஷேத்ரங்கள் அன்று என்று உபேக்ஷித்து ஸர்வதக்ஷிணமுமாய் ஸர்வதர்மானுஷ்டான யோக்யமுமான பாரதவர்ஷத்தில் வந்து புகுந்தான்.**

***--- ஹஸ்திகிரி மாஹாத்ம்யம்***

பிரம்மா தவம் செய்ய ஏற்ற இடம் எது என்று யோசித்துப் பண்ணும் முடிவு:

> பூமியை ஏழு பெருந்தீவுகளாகப் பிரித்திருக்கிறார்கள். அதில் ஜம்பூத்விபம் ஒன்று. மற்ற ஆறு த்வீபங்களும் தக்கவை அன்று என்று தள்ளிவிட்டார். இந்த ஜம்பூத்வீபத்தை ஒன்பது வர்ஷங்களாகப் பிரித்திருக்கிறார்கள். இதில் நமது பாரதவர்ஷம் ஒன்று. மற்ற எட்டு வர்ஷங்களும் தக்கவை அன்று என்று ஒதுக்கி விட்டார். இப்படி ஒதுக்கியதற்குக் காரணம் அவையெல்லாம் போகபூமிகளே அன்றிக் கர்மங்கள் சித்திக்கும் நிலமன்று என்பது. பாரதவர்ஷம் தான் அனுஷ்டானத்திற்கு யோக்யமானது என்று இங்கு வந்தார் பிரமன்.

எல்லா இடங்களும் சமமன்று. கர்மங்களுக்குப் பலன் அளிக்கும் திறத்தில் இடத்திற்கிடம் வேறுபாடு உண்டு. சில இடங்களில் அதிகப் பலன் கிடைக்கும். சில காலங்களில் பண்ணினால் அதிகப்பலன் கிடைப்பது போல். பாரதவர்ஷம் தவிர்ந்த மற்ற இடங்களில் எல்லாம் விசேஷமான புண்ணிய கர்மங்களுக்குப் பலன் கிடையாது.

## 54.அடங்கா மனத்தார் கற்றது வீண்.

மனதை அடக்கி நிம்மதி அடையவேண்டும்.

**शमार्थं सर्वशास्त्राणि विहितानि मनीषिभिः।**

**तस्मात्स सर्वशास्त्रज्ञो यस्य शान्तं मनस्सदा॥**

**என்கிற ச்ருதபல த்தையும் இழந்து**

***--- ரஹஸ்யத்ரயஸாரம், முமுக்ஷுத்வாதிகாரம்***

இதிஹாஸ ஸமுச்சயத்திலிருந்து மேற்கோள் காட்டி மன அடக்கத்தின் முக்கியத்துவத்தை உணர்த்துகிறார்:

எல்லாச் சாத்திரங்களும் ஶமம் (மனதை அடக்குதல்) என்ற பண்புக்காக ஏற்பட்டவை. ஆகையால் எவன் தன் மனதை அமைதியாகக் கொண்டவனோ அவனே ஸர்வஶாஸ்த்ரமறிந்தவன். என்கிற ப்ரமாணத்தில் கல்வியின் பலனாகச் சொன்ன ஶமகுணத்தை இழத்தலாகாது.

ஒரே குறிக்கோள் தான் கல்வி முழுதுக்கும். மனதை அடக்கி அமைதிப்படுத்துக என்பது. இதைச் செய்யாதவன் கற்றதெல்லாம் வீண் தான். தன் மனத்தை அடக்கி நிம்மதி அடைய முடியாதவன் எவ்வளவு கற்று என்ன பயன்? கல்வியின் பயனே ஶமம் தானே? மனச்சாந்தி பெற முயலுங்கள்.

## 55.அறப்பண்பில்லார் புலமை வீண்.

பாண்டித்யம் இருந்து அறநெறி இல்லாமல் போனால் பயனில்லை.

**नाच्छादयति कौपीनं न दंशमशकापहम्।**

**शुनः पुच्छमिवानर्थं पाण्डित्यं धर्मवर्जितम्॥**

**என்கிறபடியே ஹாஸ்யனாம்.**

***–––ரஹஸ்யத்ரயஸாரம், முமுக்ஷுத்வாதிகாரம்***

பண்டிதனொருவன் தருமமற்று நடந்தால் அவனுடைய பாண்டித்யத்தால் என்ன பயன்? ஏளனத்துக்கு உரியவன் தருமம் வழுவிய பண்டிதன். இதை ஒரு வேடிக்கைச் ச்லோகம் கொண்டு விளக்குகிறார்:

தருமம் இல்லாமல் பாண்டித்யம் என்பது வ்யர்த்தமானது. நாய் வால் போல் பயனற்றது. குதஸ்தானத்தை மறைப்பதில்லை. ஈ கொசுவை விரட்டுவதில்லை.

நாய்க்கு வாலால் பயனில்லை. அதுபோல் அதர்மிஷ்டனுக்குப் புலமையால் பலனில்லை. பசு முதலிய விலங்குகளுக்கு வாலினால் இரண்டு வகை உபயோகமுண்டு. சாணியிடும் குதப் பகுதியை மூடி மறைக்க வால் உதவுகிறது. மேலும், ஈயோ கொசுவோ கடித்தால் வாலால் அதை விரட்டவும் முடிகிறது. ஆனால் நாயின் வால் இந்த இரண்டு செயல்களுக்குமே பயன்படுவதில்லை. விறைப்பாகத் தூக்கிய நிலையில் நிற்பதோடு சரி. இப்படிப் பயனற்ற பொருள்களும் ஈச்வரசிருஷ்டியில் இருக்கத்தான் செய்கின்றன. அவற்றுள் ஒன்று அறமிலாப் புலமை.

## 56.அக்ரமமாய் வரும் மந்த்ரம் வீண்.

வழியில்லா வழியில் மந்திரத்தை அறிந்து கொண்டால் அது பலனளிக்காது .

अध्यात्मरहस्यங்களைச் சொல்லுமவன் ஸம்ப்ரதாயமன்றிக்கேயிருக்க ஏடு பார்த்தாதல் சுவரேறிக் கேட்டாதல் சொல்லுமாகில் களவுகொண்டு ஆபரணம் பூண்டாற்போலே கண்டார்க்கெல்லாம் தான் அஞ்சவேண்டும்படியாம்.

यदृच्छया श्रुतो मन्त्रः छन्नेनाथ छलेन वा।

पत्रेक्षितो वा व्यर्थस्स्यात् प्रत्युतानर्थदो भवेत्॥

இத்யாதிகளிற்படியே ப்ரத்யவாயமும் உண்டாம்.

*--- ரஹஸ்யத்ரயஸாரம், சிஷ்யக்ருத்யாதிகாரம்.*

முறைதப்பி மந்திரம் கேட்டுச் சொன்னால் பயனில்லை. இதைச் சொல்லும் இந்த வாக்கியத்தின் அர்த்தம்:

> அத்யாத்மசாஸ்த்ரத்தில் பஹிரங்கமாகச் சொல்லலாகாத பாகங்கள் உண்டு. நாமாகப் புத்தகம் பார்த்துச் சொல்லிவிடக்கூடாது. ஆசார்யனின் அனுமதி இன்றி கிரகிக்கக்கூடாது. அப்படித் தவறாகக் கேட்டுப் பிறருக்குச் சொன்னால் எல்லாரிடமும் பயப்படவேண்டியிருக்கும். திருடன் தான் திருடிய நகையை வெளியே அணிந்து செல்ல அஞ்சுவது போல் ஆகும். மந்த்ரத்தை எதேச்சையாகக் கேட்டாலோ, மறைந்திருந்து கேட்டாலோ, ஏமாற்றி அறிந்துகொண்டாலோ, புத்தகம் பார்த்து அறிந்துகொண்டாலோ, அந்த மந்திரம் வீணாவது மட்டுமின்றி, தீய பலன்களையும் விளைவிக்கும். என்று பிரமாணம் சொல்கிறபடி, தீங்கு உண்டாகும்.

ஜாக்கிரதை தேவை. கேட்கவேண்டிய முறையில் கேட்டு மந்த்ரோபதேசம் பெறவேண்டும். ஓராண் வழி ஸம்ப்ரதாயமாக வந்துள்ள இடத்தில் உபதேசம் பெறவேண்டும். ஏதோ ஒரு வழியில் தெரிந்துகொண்ட மாத்திரத்தாலேயே பலன் ஏற்பட்டுவிடாது. வீண் முயற்சியால் குருவுக்குத் தெரியாமல் சாமர்த்தியமாகத் தெரிந்துகொண்டு என்ன பயன்? தீமை தான் ஏற்படும்.

இதுவரை வீணென்று சொன்ன நாலு அறிவுரைகள்:

- அயல் நாடுகளில் கருமம் வீண்.
- அடங்கா மனத்தார் கற்றது வீண்.
- அறப் பண்பில்லாப் புலமை வீண்.
- அக்ரமமாய் வரு மந்த்ரம் வீண்.

## 57.அதிகாலையில் விழித்தெழுக.

விடியற்காலையில் தூக்கம் விட்டு எழுந்திருக்க வேண்டும்.

> प्राप्ते यामिन्याः पश्चिमे यामे सावधानेन निद्रा परित्याज्या।
> "यामद्वयं शयानस्तु""युक्त-स्वप्न-अवबोधस्य" इत्यादिषु स्मरणात्।
>
> ---*நித்யவ்யாக்யாநம்.*

ஸ்ரீபாஞ்சராத்ரரக்ஷையின் மூன்றாவது அதிகாரமான நித்யவ்யாக்யானத்தில் அருளிய அறிவுரை.

> இரவின் கடைசி யாமம் வந்தபொழுது கவனத்துடன் தூக்கத்தை விடவேண்டும். ''ஆறு மணி நேரம் தூங்குவது நல்லது'' உறக்கமும் விழிப்பும் தகுந்தபடி கொண்டவனுக்கு'' இது முதலிய ஸ்ம்ருதிப்பிரமாணங்கள் இருப்பதால்

ஒரு யாமம் என்பது மூன்று மணி நேரம். இரவின் கடைசி யாமம் என்பது சூரியோதயத் திற்கு முன் மூன்று மணி காலம். இதைப் பிராம்ம முஹூர்த்தம் என்பர். இந்த நேரத்தில் தூக்கம் கலைந்து எழுந்திருக்க வேண்டும். ஸத்துவகுணம் வளரும். அறிவில் தெளிவு ஏற்படும். ஆகையால் ஸாவதாநராக, அக்கறையுடன் இந்த நல்ல பழக்கத்தை ஏற்படுத்திக் கொள்ளவேண்டும்.

## 58.அதிகம் உணவைத் தவிர்த்திடுக.

மிகுதியாகச் சாப்பிடக்கூடாது.

> युक्तशब्दो मितपर इत्यभिप्रायेण मिताहारेत्यादिकं उक्तम्। श्रूयते हि -
> यद्धयात्मसम्मितं अन्नं तदवति तन्न हिनस्ति। तद्यत्कनीयो न तदवति ।इति।
> स्मरन्ति च ।उदरस्यार्धं अन्नस्य तृतीयं उदकस्य च।
> वायोस्सञ्चरणार्थं तु चतुर्थं अवशेषयेत्। इति।
> अतो न्यूनाधिकादि समस्तदोषराहित्यं युक्तशब्देन अभिप्रेतम्।
>
> --- *தாத்பர்யசந்த்ரிகா*

கீதையில் ஆறாம் அத்தியாயத்தில் அதிகம் சாப்பிடுபவனுக்கு யோகம் கிடையாது என்று தொடங்கி இரண்டு ச்லோகங்கள் உள்ளன. அவ்விடத்தில் தாத்பர்யசந்த்ரிகைப் பங்க்தி இது:

> யுக்தாஹார என்னுமிடத்தில் உள்ள யுக்த என்ற பதத்திற்கு அளவுக்குள் அடங்கிய என்று கருத்து ஆதலால் மிதாஹார என்று உரையிட்டார்(பகவத் ராமானுஜர்). ச்ருதி (வேதம்) சொல்கிறது: எது தன்னளவுக்குட்பட்ட அன்னமோ

அது காக்கிறது. இம்சிப்பதில்லை. எது குறைவோ அது காப்பதில்லை. ஸ்ம்ருதியும் சொல்கிறது: வயிற்றின் அரைப்பாகம் அன்னத்திற்கு. கால் பாகம் ஜலத்திற்கு. மீதி கால் பாகம் காற்று நடமாடுவதற்கு மிகுத்திவைக்க வேண்டும். ஆகையால் உணவைக் குறைப்பதும் தோஷம். அதிகப்படுத்துவதும் தோஷம். இந்தத் தோஷங்கள் இல்லாதபடி என்பது யுக்த என்ற பதத்தின் கருத்தாகும்.

அதிகப் பட்டினியும் கூடாது. அதிகச் சாப்பாடும் கூடாது. இரண்டுமே யோகத்திற்குக் கேடு. சரியான அளவில் உணவை உட்கொள்ள வேண்டும். அன்னத்தால் வயிற்றை நிரப்பக்கூடாது. அன்னத்தில் பாதியளவு தண்ணீர் குடிப்பது நல்லது.

## 59.அறிவால் தீமை அகற்றிடுக.

நம் அறிவைக்கொண்டு ஆராய்ந்து நமக்கு அஹிதமானவற்றை விலக்கவேண்டும்.

**अविमृश्य विपत्तिं आपतन्तीम्**

**न हि तिष्ठन्ति अहितेषु बुद्धिमन्तः॥**

***---யாதவாப்யுதயம்***

சிசுபாலனை நோக்கிப் பீஷ்மர் கூறும் அறிவுரையாக அமைந்தது இது:

ஆராய்ந்து பார்ப்பது அவசியம். தமக்கு நேரவிருக்கும் கேட்டினை ஆராயாமல் இருக்கலாகாது. புத்திசாலிகள் தம் அஹிதங்களில் பிடிவாதமாக இருக்கமாட்டார்கள்.

தமக்கு அஹிதம் எனத் தெரிந்தவுடன் தம் நிலையை மாற்றிக் கொண்டு விடுவார்கள். சிசுபாலன் கிருஷ்ணனுக்கு முதல் மரியாதை செய்யக்கூடாது என்று தடுத்தான். பெரியோர் எடுத்துச் சொல்லியும் மாறவில்லை. ஒரே நிலையில் இருப்பதால் தனக்குத் தான் கேடு என்பதையும் உணரவில்லை. தன் அறிவைத் தன் ஹிதாஹிதவிசாரத்திற்குப் பயன்படுத்தவில்லை. அதனால் அவனுக்கு அபாயம் ஏற்பட்டது. பீஷ்மர் சொல்கிறார்: அறிவாளி ஒவ்வொருவனும் தன் நன்மைதீமையை ஆராயவேண்டும். தீமை தருவதில் நிலை கொள்ளக்கூடாது. பற்றினது விடாதொழியில் ஆபத்து. அஹிதங்களில் உறுதியான நிலைப்பாடு அறிவாளிகளின் செயல் அன்று. தன் கருத்து சரியா தவறா என்பது ஒருபுறம் இருக்கட்டும். அதனால் தனக்குக் கேடில்லையா என்பதும் முக்கியமே. ஒரு காரியத்தைத் தொடங்கிய பின்னரும் கூட அதன் விளைவுகளை எண்ணிப்பார்த்து அதனால் தீமை விளையுமானால் அதை நிறுத்தி விடுவது தான் அறிவாளிக்கு அழகு.

## 60.அனுகுண தம்பதி ஆயிடுக.

கணவன் மனைவியிடையே ஒற்றுமை முக்கியம்.

यत्रानुकूल्यं दम्पत्योः त्रिवर्गस्तत्र वर्धते।

इति धर्म-अर्थ-काम-हेतुतया उक्ताः।

***---ஸ்தோத்ர-ரத்ந-பாஷ்யம்.***

தம்பதிகள் பரஸ்பரம் அனுகூலராக இருப்பது குறித்து அருளியது:

> "எங்கே தம்பதியரிடையே அனுகூலத்தன்மை இருக்கிறதோ அங்கே அறம் பொருள் இன்பம் என்னும் மூன்றும் வளரும்." என்று மூன்று புருஷார்த்தங்களுக்கும் காரணமாக மகளிரைச் சொன்னதுண்டு.

கணவனும் மனைவியும் ஒத்துப்போவதால் ஏராளமான நன்மைகள் உண்டு. தருமத்தில் ஈடுபடுவது, பொருள் ஈட்டுவது, இன்பம் நுகர்வது, எல்லாமே அனுகூலதம்பதியரிடம் வளர்ச்சி அடையும். கிருஹஸ்தர்களுக்கு இந்த அறிவுரை. இதனால் யுவதிகளும் நன்மைபயப்பவரே, என்று சொல்லவந்தார், மாதா பிதா யுவதய: என்பதற்கு உரையிடுகையில்.

கடந்த நாலு உபதேசங்களின் சுருக்கம்:

- அதிகாலையில் விழித்தெழுக.
- அதிகம் உணவைத் தவிர்த்திடுக.
- அறிவால் தீமை அகற்றிடுக.
- அனுகுண தம்பதி ஆயிடுக.

## 61.அடிமிதிபடினும் ஆன்றோர் சேர்.

பெரியவர்கள் துன்புறுத்தினாலும் அவர்களையே சார்ந்திருப்போம்.

अधरीकृतोऽपि महता

तमेव सेवेत सादरं भूष्णुः।

अलभत समये रामात्

पादाक्रान्तापि पादुका राज्यम् ।।

***---பாதுகாஸஹஸ்ரம்.***

ராமபாதுகையை நிதர்சனமாகக் காட்டி நமக்குச் செய்யும் உபதேசம் இது:

> பெரியோன் நம்மைக் கீழ்மைப்படுத்தினாலும் நலம்விரும்பி அவனையே மதிப்புடன் சார்ந்திருக்க வேண்டும். பாதுகாதேவியே! ராமபிரானின் காலடிக் கிடந்தும் பொறுமையாக அந்த மஹானையே விடாமல் பற்றியிருந்த நீர் ஒரு காலத்தில் ராஜ்ஜியத்தையே அடைந்தீர் அன்றோ?

பாதுகையிடமிருந்து நாம் அறிந்து கொள்ளவேண்டியவற்றைச் சொல்கிறார். பெரியவரைச் சார்ந்திரு. அவர் இழிவுபடுத்தினாலும் பொறுத்துக்கொள். அந்தப் பெரியவரையே அவலம்பித்திரு. அவரைவிட்டு வேறொருவரிடம் அவரே அனுப்பினாலன்றிப் போகாதே. அவரிடம் மதிப்பு குறையாமல் பணியாற்று. ஒரு நாள் இல்லாவிட்டால் ஒரு நாள் மேன்மை ஏற்படும். மஹானுக்குக் கீழ்மையைப் பொறுத்துக் கொண்டால், நாளடைவில் மற்றவரை விட மேன்மை பெறமுடியும். பெரியோரை ஆச்ரயித்தல், பொறுமையுடன் அவருக்குத் தொண்டாற்றல், அவரைவிட்டு அகலாமை, அவரைக் கௌரவித்தல், இவையெல்லாம் எதிர்காலத்தில் நற்பயன் விளைவிப்பவை.

## 62.அபயம் நலமுற விளி ஹரி பேர்.

பெருமாள் பேர்களைச் சொல்லி விளியுங்கள். பயம் நீங்கும். நலம் உண்டாகும்.

**रमादयित रङ्गभूरमण कृष्ण विष्णो हरे**

**त्रिविक्रम जनार्दन त्रियुग नाथ नारायण।**

**इतीव शुभदानि यः पठति नामधेयानि ते**

**न तस्य यमवश्यता नरकपातभीतिः कुतः॥**

**---அபீதிஸ்தவம்**

பயத்தை நீக்குவதற்காகவே பண்ணின ஸ்தோத்ரமான அபீதிஸ்தவம் ஸ்ரீரங்கநாதர் விஷயமானது. அதில் இந்த ச்லோகத்தில் பெருமாள் பெயர்களைச் சொன்னால் பயம் தீரும் என்கிறார்:

> ரமாதேவியின் தயிதனே! ரங்கபூமியின் ரஸிகனே! கிருஷ்ணனே! விஷ்ணுவே! ஹரியே! திரிவிக்கிரமா! ஜநார்த்தனா! த்ரியுகா! நாதா! நாராயணா! இது போன்ற உன் நாமங்கள் சுபமளிப்பவை. அவற்றை எவன் படிக்கிறானோ அவன் யமனுக்கு வசப்படுவதில்லை. நரகத்தில் விழும் பயம் ஏது?

பெருமாள் நாமங்கள் பல உள்ளன. அவையெல்லாம் மங்களம் பயப்பவை. அவற்றைப் படிப்பவர்களுக்கு நரகபயமே கிடையாது. ஆகையால் நாமஸங்கீர்த்தனம் பண்ணுங்கள்.

## 63.அறத்திற் காசாரம் தான் வேர்.

ஆசார அனுஷ்டானத்துடன் இருங்கள். அது தான் தர்மத்திற்கு மூலம்.

| |
|---|
| **आचार-प्रभवो धर्मो धर्मस्य प्रभुरच्युतः।** |
| **इति पञ्चम-वेदेऽपि सर्व-शास्त्रार्थः ईरितः॥** |
| ***---ரஹஸ்யத்ரயஸாரம், ப்ரபாவ வ்யவஸ்தாதிகாரம்*** |

ஆசாரம் என்பது நல்லொழுக்கம். அதன் முக்கியத்துவத்தை இந்தக் காரிகையால் அருளுகிறார்:

> ஆசாரத்திலிருந்து உண்டாகிறது தர்மம். தர்மத்திற்குப் பிரபு அச்சுதன். என்பது எல்லாச் சாஸ்த்ரங்களின் திரண்ட பொருள். பஞ்சமவேதமான பாரதத்தில் இது சொல்லப்பட்டது.

ஆசாரம் இன்றேல் தர்மமே இல்லை. தருமத்திற்கு அடிப்படையே ஆசாரம் தான். ஒழுக்கம் கெட்டவன் தானதருமங்களோ ஜபஹோமங்களோ பண்ண அருஹதை அற்றவன். ஆசாரப்படி நடப்பவன் அடிப்படைத் தருமத்தை அனுஷ்டித்தவன் ஆகிறான். சரணாகதி பண்ணின பிறகும் கூட ஆசாரநெறி அவசியம். அச்சுதனுக்கு உகப்பு அதனால் தான். என்றைக்கும் ஆசாரத்தை விடலாகாது.

## 64.அறிவுரை சிறுகச் சிறுகச் சேர்.

பெரியோர்களின் நல்லுரைகளைக் கொஞ்சம் கொஞ்சமாகச் சேமிப்பது கூட விஹிதம் தான். இவற்றுக்கு உபயுக்தங்களான நல்வார்த்தைகளையும்

| |
|---|
| **सुव्याहृतानि महतां सुकृतानि ततस्ततः।** |
| **सञ्चिन्वन् धीर आसीत सिलहारी सिलं यथा॥** |
| **என்கிறபடியே ஆய்ந்தெடுத்து अभ्यास-भूयस्त्वैயாலே தெளிந்துகொள்வது.** |
| ***---ரஹஸ்யத்ரயஸாரம், நிகமநாதிகாரம்.*** |

இங்கெடுத்த மேற்கோள் மஹாபாரதத்தில் உள்ளது. ஸம்ப்ரதாயபரிசுத்தி என்னும் நூலில் இது தான் கடைசி அறிவுரை. ரஹஸ்யத்ரயஸாரத்திலும் கடைசி அதிகாரத்தில் இதைச் சொல்கிறார். இதனால் முக்கியத்துவம் பெறும் இந்த வாக்கியத்தின் அர்த்தம்:

> மஹான்களின் சொற்களிலும் செயல்களிலும் நமக்குப் படிப்பினையாகப் பல இருக்கும். அவை ஆங்காங்கே சிதறிக் கிடக்கும். அவற்றை ஒவ்வொன்றாகத் தேர்ந்தெடுத்துச் சேமிப்பது நல்லது. உதிரித் தானியங்களைப் பொறுக்குபவன் எப்படிச் சோம்பாமல் பொறுமையுடன் ஒவ்வொன்றாகப் பொறுக்கிச் சேமி

க்கிறானோ அதுபோல இவற்றைத் திரட்டவேண்டும். இப்படித் திரட்டுபவன் தீரனாக, அதாவது அறிவில் வல்லவனாக இருப்பான்.

ஆன்றோர்களின் ஸதுபதேசங்களையும் ஸதனுஷ்டானங்களையும் சேகரிக்கவேண்டும். பலப்பல இடங்களிலிருந்து ஆய்ந்தெடுக்கவேண்டும். (இப்பொழுது ஆயிரம் அறிவுரைகளைத் திரட்டும் நமது பணியும் இதில் அடங்கும்.) நம் அறிவு வளர்ச்சிக்கு இது பெரிதும் உதவும்.

கடந்த நாலு அறிவுரைகளாவன:

- அடிமிதி படினும் ஆன்றோர் சேர்.
- அபயம் நலமுற விளி ஹரி பேர்.
- அறத்திற்கு ஆசா ரம்தான் வேர்.
- அறிவுரை சிறுகச் சிறுகச் சேர்.

## 65. அறிஞர் சேவை சுத்தி தரும்.

நோக்குகளில் தூய்மையை அடைய விரும்புபவர் அறிஞர்களுக்குத் தொண்டாற்றவேண்டும்.

**प्रज्ञा-धम्मिल्ल-मल्ली-परिमल-मिलित-प्राज्ञ-सेवा- समुद्यत्**

**शुद्ध-आलोक-उज्वलं माम्**

***---அதிகரண ஸாராவளி.***

இது ஸ்ரக்தரா துக்தராசியான அதிகரணஸாராவளியின் கடைசிக்கு முந்திய ச்லோகம் ஆனதால் பிரசித்தமானது. மேற்கோள் எடுத்த பகுதியின் அர்த்தம்:

> நல்லறிவு என்னும் அழகுப் பின்னலிலுள்ள மல்லிகையின் மணத்தோடு கலந்ததும் நல்லறிஞர்களுக்குப் பணிவிடையாற்றுவதால் உண்டானதுமான தூய நோக்கங்களால் ஒளிர்பவனான என்னை.

நாம் நல்லெண்ணங்களுடன், மலினமற்ற நோக்கங்களுடன் திகழவேண்டுமானால் அதற்கு இரண்டு படிகள் உண்டு. ஒன்று அறிவுமணம் கமழ்தல். மற்றொன்று அறிஞர்க்குத் தொண்டாற்றி அவர் கடாக்ஷம் பெறுதல். இப்படி மூதறிஞர்களை நாம் கௌரவித்தால், நமக்கு உயரிய சிந்தனைகள், தூய கண்ணோட்டங்கள் ஏற்படும். ப்ராஜ்ஞர்களுக்குச் சேவை செய்வது நல்லது.

## 66.அர்ச்சை வடிவும் முக்தி தரும்.

ஆலயவழிபாடு பண்ணுங்கள். அர்ச்சாவதாரமும் மோக்ஷபர்யந்தமான பலன்களைத் தரவல்லதே.

**இப்படியே அர்ச்சாவதாரமும் மிறுக்கற மோக்ஷத்தைத் தருமென்னுமிடத்தை**

**सुरूपां प्रतिमां विष्णोः प्रसन्न-वदनेक्षणाम्।**

**कृत्वाऽऽत्मनः प्रीतिकरीं सुवर्ण-रजतादिभिः॥**

**तां अर्चयेत् तां प्रणमेत् तां यजेत् तां विचिन्तयेत्।**

**विशति अपास्त-दोषस्तु तामेव ब्रह्म-रूपिणीम्॥**

**என்று ஸ்ரீசௌநகபகவான் அருளிச்செய்தான்.**

***———ரஹஸ்யத்ரயஸாரம், தத்வத்ரயசிந்தநாதிகாரம்.***

கோவிலில் விக்கிரகங்களை வழிபடுவது நல்லது என்பதை விஷ்ணுதர்மத்திலிருந்து மேற்கோள் காட்டி நமக்கு அறிவுறுத்துகிறார்:

விபவாவதாரம் போலவே அர்ச்சாவதாரமும் எளிதில் மோக்ஷம் தரவல்லது. இதைச் சௌநக மஹரிஷி சொல்கிறார்:

> ''விஷ்ணுவின் விக்கிரகத்தைத் தங்கம், வெள்ளி போன்றதொரு பொருளால் அழகிய வடிவுடனும் மலர்ந்த திருமுகமும் திருக்கண்களும் கொண்டதாய், தனக்கு மகிழ்ச்சி தரும் வகையில் அமைத்து, அந்தப் பிரதிமையை அர்ச்சிக்க வேண்டும். அதை நமஸ்கரிக்கவேண்டும். அதை ஆராதிக்கவேண்டும். அதைத் தியானிக்கவேண்டும். இவன் குற்றம் நீங்கப்பெற்று அந்தப் பரம்பொருள் வடிவையே புகுகிறான்."

விக்கிரக வழிபாடு கூடாது என்று சில நவீன மதத்தினரும், விக்கிரகம் நம் தியானத்துக்குத் துணை புரியுமாயினும் நேரடியாக மோக்ஷப்பலனைத் தராது என்று நம்மில் சிலரும் நம்புகின்றனர். ஆனால் மஹர்ஷிகளின் கருத்து விக்கிரக வழிபாட்டின் மேன்மையைப் பறை சாற்றுகிறது. கோவில்களில் (அல்லது கிருகங்களில்) அழகிய விக்கிரகங்களைப் பிரதிஷ்டை செய்து வணங்கி வழிபடுவது மிகச் சிறந்தது. இதனால் மோக்ஷமும் கிடைக்கும். அர்ச்சாமூர்த்திகள் என்று பெயர் இவற்றுக்கு. பெருமாளின் ஐந்துவகை அவதாரங்களில் இது நான்காவது வகை. அர்ச்சாமூர்த்திகளைத் தொழுது துதிசெய்து பயன் பெறுவோம்.

## 67.அகந்தை தவத்திற்கழிவு தரும்.

அகம்பாவம் கொண்டால் செய்த தவம் பலன் தராதொழியும். இறுமாப்பு கூடாது.

**यज्ञोऽनृतेन क्षरति तपः क्षरति विस्मयात्।**
**आयुर्विप्रपरीवादात् दानं च परिकीर्तनात्॥**
**இத்யாதிகளிற்படியே ஸுக்ருதநாசகங்களாயிருப்பன சில துஷ்க்ருதங்கள்**

***——ரஹஸ்யத்ரயஸாரம், சரமச்லோகாதிகாரம்.***

ப்ரபத்தியின் பெருமையைச் சொல்லுமிடத்தில் யாகம், தவம், தானம், இவற்றுக்கெல்லாம் இல்லாத ஒரு சிறப்பு ப்ரபத்திக்கு இருப்பதை விளக்குகிறார்:

> பொய் சொல்வதால் யாகம் வீணாகும். கர்வப்படுவதால் தவம் வீணாகும். அந்தணரைப் பழிப்பதால் ஆயுள் குறையும். தம்பட்டம் அடித்துக் கொள்வதால் தானம் வீணாகும். இப்படிச் சில தீச்செயல்களால் சில நற்செயல்கள் நாசமாகின்றன.

ஆனால் பிரபத்தி என்ற நற்செயல் அப்படியன்று. மற்ற பாவச்செயல்கள் அதைத் தடுக்க முடியாது. எதனாலும் தடைபடாத பெருமை உடையது சரணாகதி. தவத்திற்கு இந்தப் பெருமை கிடையாது. நான் வருந்தித்தவம் செய்தேன், பிறர் செய்யமுடியாததைச் சாதித்தேன், எனக்கு நிகர் யார்? என்று ஆணவம் தலைதூக்கினால் இதுவரை செய்த தவமெல்லாம் பலனற்றுப் போய்விடும். அகம்பாவம் அவ்வளவு கொடியது. அதற்குச் சிறிதும் இடம் கொடுக்கக் கூடாது. நாம் செய்த கொஞ்சநஞ்சத் தவத்தையும் கெடுத்துக் கொள்வானேன்? பணிவுடன் கர்வமின்றி இருக்கவேண்டும்.

## <u>68.அடமோ மூர்க்கர்க்கிழிவு தரும்.</u>

அடம் பிடிக்கக்கூடாது.

**பற்றினது விடாதொழியில்**
**दृढ-पूर्व-श्रुतो मूर्खः धर्माणां अविशारदः।**
**वृद्धान् अपृच्छन् सन्देहान् अन्धः श्वभ्रं इवच्छति॥**
**अन्यथा मन्दबुद्धीनां प्रतिभाति दुरात्मनाम्।**
**कुतर्क-व्याळ-दष्टानां विभ्रान्तेन्द्रिय-वाजिनाम्॥**
**என்கிற தசையாம்**

***——— ரஹஸ்யத்ரயஸாரம், ஸித்தோபாயசோதநாதிகாரம்.***

பிராட்டியின் பெருமையைப் பரக்கப்பேசிய பின் அதை ஏற்றுக்கொள்ளாமல் பிடிவாதம் பிடிக்கும் சிலரை ஏசுகிறார்:

> ஏற்கெனவே கிரகித்ததை விடாமல் பிடிவாதமாக இருப்பவனின் நிலை: முன்னம் கேட்டதிலேயே உறுதியாக இருப்பவன் மூர்க்கன். தருமங்களை நன்கு அறியாதவன். பெரியோரிடம் சந்தேகம் கேட்காமல் குருடன் போல் பள்ளத்தில் விழுகிறான். அறிவிலிகளுக்கும் துஷ்டர்களுக்கும் விபரீதமாகத் தோன்றும். அவர்களைக் குதர்க்கம் என்கிற பாம்பு கடித்துள்ளது. அதனால் இந்த்ரியங்கள் என்னும் குதிரைகள் மிரண்டு போயிருக்கின்றன.

பிடிவாதக்காரர்கள் அழிவதற்கு மூன்று காரணங்கள்: 1.மூர்க்கத்தனம். அடம் பிடிப்பவர் எல்லாருமே மூர்க்கர். 2.தருமத்தை நன்கு அறியாதிருத்தல். அதனால் தானே தவறான விஷயத்தில் பிடிவாதம் பிடிக்கிறார்கள்? 3.முதியோரிடம் சந்தேகம் கேட்காமல் இருத்தல். தான் நினைப்பதே சரியென்று தீர்மானமாக அடம் கொண்டவன் வ்ருத்தர்களிடம் போய்க் கேட்பதில்லை. இந்த மூன்று காரணங்களால் அவன் அதோகதி அடைகிறான். எப்படியானால் ஒரு குருடன் வழி தெரியாதவனாய் இருந்தும் பார்ப்பவர் உதவியை நாடாமல் தானே பிரயாணம் பண்ணினால் குழியில் விழுவானோ, அப்படி. இந்த உவமானத்தில் அறிவு கண் போன்றது. மூர்க்கன் குருடன் போன்றவன். தருமம் தெரியாமலிருத்தல் வழிதெரியாமை போன்றது. பெரியோர்களைக் கேளாமை பார்வையுள்ளோர் துணைவேண்டாமை போன்றது. தீக்கதி குழி போன்றது. இப்படி மிகப் பொருத்தமான உவமையைச் சொல்லும் இந்த ச்லோகம் மஹாபாரதத்தில் உள்ளது. அடுத்த ச்லோகம் இதிஹாஸஸமுச்சயத்தில் உள்ளது. நாலு பெருங்குறைகள் ஒரே இடத்தில் சேர்ந்துவிட்டால் விபரீதத்தைக் கேட்கவேணுமா? 1.புத்தி மந்தம். 2.துஷ்டஸ்வபாவம். 3.கோணல் தருக்கம். 4. புலன் கலக்கம். இது அத்தனையும் சேர்ந்தால் பாம்பு கடித்த குதிரை மிரண்டும் போனால் விபரீத விளைவு உண்டாவது போல் ஆகும். அவர்களுக்குத் தவறாகவும், மாறாட்டமாகவுமே எல்லாம் தோன்றும். அடம் பிடிப்பவர்க்கெல்லாம் இந்த நிலை தான். சொன்ன நாலு தோஷங்களும் ஒருங்கே இருந்தால் தானே ஒருவன் அடம் பிடிப்பான்? புத்திசாலியோ, பண்பாளனோ, நல்ல தர்க்கம் செய்துபார்ப்பவனோ, புலன் கலங்காதவனோ, கெட்டதில் பிடிவாதமாக இருக்கமாட்டான்.

எதுஎது என்னென்ன தரும் என்பது குறித்து இப்போது நாம் பார்த்த நாலு உபதேசங்கள்:

- அறிஞர் சேவை சுத்தி தரும்.
- அர்ச்சை வடிவும் முக்தி தரும்.
- அகந்தை தவத்திற்கழிவு தரும்.
- அடமோ மூர்க்கர்க்கிழிவு தரும்.

## 69.அவரவர் தருமம் அவர்க்கு சரி.

வெவ்வேறு வகுப்பினருக்கு வெவ்வேறு தருமம். அடுத்தவன் தருமத்தை அனுஷ்டிக்காமல் தன் சொந்த தருமத்தையே கைப்பிடிக்கவேண்டும்.

**स्वनुष्ठितस्य दुरनुष्ठितस्य वा परधर्मस्य अधर्मत्वेन गर्हणीयत्वात्**

***--- தாத்பர்யசந்த்ரிகா.***

கீதையில் ஸ்வதர்மம் என்ற பதம் பல அத்தியாயங்களில் வந்திருக்கிறது. இரண்டாம் அத்தியாயத்தில் அர்ஜுனனின் ஸ்வதர்மம் க்ஷத்ரியதர்மம் என்று அர்த்தமாம். ஆனால் மூன்றாவது அத்தியாயத்தில் அதே பதம் கர்மயோகத்தைக் குறிக்கிறதாம். இந்த வேறுபாட்டை விளக்க முற்பட்ட ஸ்வாமி தேசிகன் ப்ரஸங்காத் நமக்கு வழங்கும் அறிவுரை ஒன்று:

> பிற வகுப்பினருக்கான தருமத்தைச் சரிவர அனுஷ்டித்தாலும் சரி, சில லோபங்களுடன் அனுஷ்டித்தாலும் சரி, அது அதர்மமே. அது நிந்தைக்குரியதே.

ஆண்களுக்கு வேறு தருமம். பெண்களுக்கு வேறு தருமம்.
அந்தணர்க்கு வேறு தருமம். அரசர்க்கு வேறு தருமம்.
இல்லறத்தில் வேறு தருமம். துறவிகளுக்கு வேறு தருமம்.
பாலர்களுக்கு வேறு தருமம். முதியோர்க்கு வேறு தருமம்.

ஒருவர் தருமத்தை இன்னொருவர் அனுஷ்டித்தால், அது அதருமமே ஆகும். தத்தம் தருமத்தைத் தான் கடைப்பிடித்து ஒழுகவேண்டும்.

## 70.அவரவர் சக்திக்கேற்ப நெறி.

இயலாதவர்கள் இயன்றவரை சாஸ்த்ரநெறியைக் கடைப்பிடிக்கவேண்டும்.

**तत्तत्-पुरुष-शक्ति-अनुसारेणैव हि नित्य-नैमित्तिक-काम्य-विषयाणां सर्वेषां शास्त्राणां प्रवृत्तिः।**

***--- நித்யவ்யாக்கியானம்.***

எத்தனை நாழி உறங்கி எப்போது விழித்தெழவேண்டும்? இதுகுறித்துச் சொல்லுகையில் அவரவர் சக்திக்கேற்றபடி சிறிது முன்பின் இருக்கலாம் என்கிறார். இன்னும் பொதுவாக:

> நித்யம், நைமித்திகம், காம்யம், என்ற மூவகைச் சாஸ்த்ரங்களுமே எல்லாருக்கும் ஒரே மாதிரியாக ப்ரவ்ருத்திப்பதில்லை. அவரவர் சக்திக்கேற்பத்தான்.

ப்ராம்ஹமுஹூர்த்த ஆர்ம்பத்தில் எழுந்திருக்கமுடியாதபடி ஜீரணக்கோளாறு உள்ள நாட்களில் மேலும் சிறிது தூங்கிவிட்டு சூரியோதயத்துக்குச் சற்று முன்னர் எழுந்தாலும் போதும். இதே போலத்தான் மற்ற கருமங்களிலும். பூர்ணாநுஷ்டாநம் பண்ணமுடியாத சந்தர்ப்பங்களில் சக்தியை மீறிச்செய்து வியாதிகளுக்கு இலக்காகவேண்டாம்.

## 71.அவரவர் மொழியில் பதிலடி தா.

எதிராளிகளின் ரீதியிலேயே சென்று அவர்களை மடக்கவேண்டும்.

भाष्यादिषु क्वचित् शशविषाणाद्युदाहरणं प्रतिबन्द्यभिप्रायेण परमतेन वेति द्रष्टव्यम्।"पिशाचानां पिशाचभाषयैव उत्तरं देयं" इत्यादिन्यायात्

--- ***ந்யாயபரிசுத்தி.***

கேவலாந்வயி என்னும் ஹேதுவகையை விளக்கும் ப்ரகரணத்தில் (முயல்கொம்பு முதலிய) நிருபாதிநிஷேதத்தையும் இசையாதவர் நாம் என்னுமிடத்தில் சொல்வதிது:

> ஸ்ரீபாஷ்யம் முதலிய கிரந்தங்களில் சில இடங்களில் முயல் கொம்பு முதலியவற்றை உதாஹரித்திருப்பது "பிசாசுகளுக்குப் பிசாசுகளின் பாஷையில் தான் பதில் அளிக்கவேண்டும்" என்ற பழமொழிக்கு இணங்க.

நம்முடைய நெறிப்படியே நாம் பதிலடி கொடுத்தால் பகைவன் மசிய மாட்டான். நமக்கு ஒவ்வாவிடினும், எதிராளியை அவர் வழியிலேயே சென்று முறியடிக்கவேண்டும். அவரவர் மொழியில் பேசினால் தானே அவரவர்க்குப் புரியும்? ஸாதுவாதங்கள் துஷ்டனிடத்தில் எடுபடுமா? காட்டுக்கூச்சல்கள் நாகரிகரிடம் எடுபடுமா? எதிராளியின் தன்மைக்கேற்ப நாம் வளைந்து ஜயிக்கவேண்டும். இதனால் தான் அப்யுபகம்யவாதம் (**எதிர்க்கொள்கையைத் தாற்காலிகமாக ஏற்றுக் கொண்டு பேசுவது**) என்பதும் சரி.

## 72.அவரவர் தொழிலில் இன்புறுக.

தத்தமக்கு ஏற்பட்ட தொழிலை விரும்பிச் செய்யவேண்டும்.

स्वे स्वे कर्मण्यभिरतः संसिद्धिं लभते नरः।(**கீதை**)

वर्ण-धर्म-विभागो मोक्ष-शास्त्रे किमर्थं इत्यत्राह। स्वे स्वे कर्मणीति।

--- ***தாத்பர்யசந்த்ரிகா.***

நாலு வர்ணத்தவருக்கும் அவரவருக்குரிய தொழிலைச் சொல்லி, தத்தம் தொழிலை ஈடுபாட்டுடன் செய்யவேண்டு மென்கிறது கீதை. இதற்கு விளக்கமாகத் தேசிகன் அருளுவது:

> தன் தன் தொழிலில் இன்புறுபவன் ஸம்ஸித்தி அடைவதாகச் சொல்கிறாரே, ஏன்? (போன ச்லோகங்களில் சொன்ன) வர்ணதருமங்கள் மோக்ஷசாஸ்த்ரத்தில் எதற்கு? இதற்குப் பதில் கூறுகிறார் இந்த ச்லோகத்தில்.

நமக்கு ஏற்பட்ட தொழிலில் நாம் விருப்பமும் ஈடுபாடும் கொண்டு பணியாற்றவேண்டும். அவ்வாறு செய்தால் வெற்றியுடன் நாளடைவில் மோக்ஷமும் கிட்டும். நம் தொழிலில் மனநிறைவில்லாமல், அடுத்தவன் தொழில் தனக்கு வாய்த்திருக்கலாமே என்று ஏங்குவது சரியன்று. அக்கரைப் பச்சையில் ஏமாறவேண்டாம். தன் தொழிலை வேண்டா வெறுப்பாகக் கடமையே என்று செய்வதும் நல்லதில்லை. கடமையில் மகிழ்ச்சி கொள்ளும் பக்குவம் தேவை. அது ஸம்ஸித்தியைத் தரும்.

கடந்த நாலு அறிவுரைகளாவன:

- அவரவர் தருமம் அவர்க்கு சரி.
- அவரவர் சக்திக் கேற்ற நெறி.
- அவரவர் மொழியில் பதிலடி தா.
- அவரவர் தொழிலில் இன்புறுக.

## 73.அழகிய பெண்டிர் அனலைப் போல்.

பெண்ணழகில் மயங்கி எரிந்துபோகவேண்டாம்.

**अङ्गार-सदृशी नारी घृत-कुम्भसमः पुमान्।**

**तस्मात् नारीषु संसर्गं दूरतः परिवर्जयेत्॥**

**इत्यादिकं अत्र भाव्यम्।**

***---ஸ்தோத்ரரத்நபாஷ்யம்***

ஸ்மரபரவச: என்ற ஆளவந்தார் ஸூக்திக்கு உரையிடும்போது பெண்ணாசையால் ஏற்படும் தீங்கைச் சொல்கிறார்:

> தணல் போன்றவள் நாரி. நெய்க்குடம் போன்றவன் ஆண். ஆகையால் (தகாத) பெண்ணொடு புணர்ச்சியைத் தொலைவில் நீக்கிவிடவேண்டும். இது முதலிய பிரமாணங்களை இவ்விடத்தில் எண்ணிப் பார்க்கவும்.

தர்மவிருத்தமான காமத்தைப் பற்றிச் சொல்வதாக ஆரம்பத்தில் கூறியிருப்பதால் இது தகாத பெண்டிரின் உறவைத் தவிர்க்கச் சொன்னது. கூடாப் பெண்டிரைக் கூடுவதால் வரும் தீங்கை

நெய்-நெருப்பு உவமையால் விளக்குகிறார். நெய்க்குடம் போல் ஆண். தீ போல் பெண். இருவரும் சேர்ந்தால் நெய் எரிந்து போவது போல் ஆண் அழிந்துபோவான். நெய் எரியும் வரை நெருப்பு ஜ்வலிப்பது போலப் பெண்ணும் ஒளிர்வாள். இவ்வளவு அபாயமான செயல் வேண்டாம். கிட்டக் கூடப் போகாதீர். தூரத்திலேயே பரிஹரியுங்கள். அருகில் போனால் தீப்பற் றிக் கொள்ளும் அபாயம் உண்டு. முன்னெச்சரிக்கையாக விலகியே இருங்கள். நெருங்கிய பின்னர் காப்பாற்றிக்கொள்வது கடினம்.

## 74.அறிவாய் செல்வம் பாம்பைப் போல்.

செல்வம் சேர்த்து வாழ்பவர் வெகு ஜாக்கிரதையாக இருக்கவேண்டும்.

सपञ्चाङ्गेन मन्त्रेण नीतिमाहात्म्यनिर्विषाम्।
नियच्छत निजाङ्गेषु भुजङ्गीमिव सम्पदम्॥

--- ***யாதவாப்யுதயம்.***

கண்ணன் அரசர்களுக்குச் சொல்லும் அறிவுரையாகத் தேசிகன் அமைத்துள்ளவற்றில் இதுவுமொன்று:

> செல்வம் பாம்பு போன்றது. அது தன் அங்கங்களில் வரும்போதெல்லாம் விஷமி ல்லாததாகப் பண்ணி அடக்கவேண்டும். இதற்காகப் பஞ்சாங்கமந்த்ரத்தைப் பயன்படுத்தலாம்.

அரசர்கள் செல்வத்தை ஏற்கவேண்டியது தான். ஆனால் அது பொல்லாதது. அதற்கு நாம் வசப்படாமல் அதை நம் வசத்தில் வைத்திருக்கவேண்டும். பாம்புக்கு விஷம் போலச் செல்வத்துக்கும் தீமை விளைவிக்கும் நிலை உண்டு. பாம்புவிஷத்தை நீக்க மந்த்ரம், நீதி(சிகிச்சை முதலியவை), இரண்டையும் சேர்த்துப் பயன்படுத்துவது போல, செல்வத்தின் தீங்குகளைக் களைவதற்கும், மந்த்ரம்(ஆலோசனை), நீதி(ராஜநீதி), என்ற இரண்டையும் கையாளவேண்டும். அதன் பிறகு செல்வமாகிற பாம்பு தன் அங்கங்களில் வந்தாலும் பயமி ல்லை. இந்த ச்லோகத்தில் அங்கம், மந்த்ரம், என்ற பதங்களுக்கு இரண்டிரண்டு அர்த்தங்கள். அங்கம் என்றால் உடம்பு. அங்கம் என்றால் உறுப்பு. பாம்பாட்டியின் அங்கத்தில் பாம்பு இருக்கும்போது அது விஷம் நீக்கப்பட்டிருக்கும். ராஜாவின் அங்கங்களில், அதாவது அரசுறுப்புகளான அரண், படை, முதலியவற் றில் செல்வம் வரும்போதும் இப்படியே. அபாயகரப்பகுதிகளை நீக்கிவிட வேண்டும். விஷக்கடி மருந்தும் மந்திரமும் போல் அரசனின் ராஜநீதியும் மந்த்ராலோசனையும் அபாயத்தை விலக்க உதவும். விஷக்கடி மந்த்ரத்துக்கு ஐந்து அங்கங்கள் உள்ளன. அதுபோல, காமந்தகநீதி நூலிலும் ஐந்து அங்கங்களோடு கூடிய மந்த்ராலோசனை நற்பயன் அளிக்கும் எனக் காண்கிறது. இவ்வாறாக, செல்வத்திற்கும் பாம்புக்கும் ஐந்து ஒப்புமைகள்: 1.இரண்டும் பேராபத்தை விளைவிக்கவல்லவை. 2.இரண்டும் அங்கங்களில் வருபவை.(அங்கம் என்பதற்கு வெவ்வேறு அர்த்தங்கள்.) 3.இரண்டும் மந்த்ரத்தால் தணிந்து நலம் பயப்பவை.(மந்த்ரம் என்பதற்கு வெவ்வேறு அர்த்தங்கள்.) 4.இரண்டு மந்த்ரங்களுக்கும் ஐந்து அங்கங்கள்.(அவை வெவ்வேறானவை.சாத்திரங்களில் தெரிபவை.) 5.இரண்டையும் அடக்கி ஆளமுடியும். இந்த ச்லோகத்திலிருந்து நாம்

தெரிந்துகொள்ளும் உபதேசம் என்னவென்றால், செல்வத்தை நல்வழிப்படுத்தப் பாடுபடவேண்டும். இல்லையேல் அது ஆபத்தை உண்டாக்கும். வாளாவிருந்து விட்டால் பிறகு வருந்தவேண்டி வரும். அதைத்தவிர்க்க செல்வந்தர் ஆரம்பம் முதலே கண்ணும் கருத்துமாக இருக்க வேண்டும். பின்விளைவுகளான திமிர், செருக்கு, அதருமம், எல்லாவற்றையும் திட்டமி ட்டு முளையிலேயே கிள் ளியெறியவேண்டும்.

## 75.அறிவில்லாதான் விலங்கைப் போல்.

முக்கிய அம்சங்களில் தெளிவான அறிவில்லாத சாதாரண மனிதன் மிருகங்களுக்குச் சமமானவன்.

**முமுக்ஷுவுக்கு அவச்யம் ஜ்ஞாதவ்யங்களான ப்ரமேயங்களில் தோன்றிய விரோதங்களைச் சமிப்பியாதொழியில் ज्ञानेन हीनः पशुभिस्समानः என்கிற தசையாம்.**

***–––விரோதபரிஹாரம்.***

இது விரோதபரிஹாரம் என்னும் நூலின் முதல் வார்த்தை.(இதற்கு முன் தொடக்கப் பாசுரமும் ச்லோகங்களும் மட்டுமே உள்ளன.) ஆகையால் இந்த அறிவுரைக்கு முக்கியத்துவம் உண்டு.

> அறிவில்லாதவன் மிருகங்களைப் போன்றவன் என்கிறது ஒரு புராணம். மோக்ஷார்த்தியானவன் அவசியமாக அறிந்துகொள்ள வேண்டியவற்றுள் முரண்பாடுகளைத் தீர்க்காவிட்டால் அறிவில்லாதவராகிப் பசுதுல்யமான நிலை உண்டாகும்.

நரசிம்மபுராணம் சொல்கிறது: உண்ணுவது, தூங்குவது, பயப்படுவது, ஆணும் பெண்ணும் புணர்வது, இவையெல்லாம் மனிதர்களுக்கும் விலங்குகளுக்கும் பொதுவானவை. ஆராய்ந்தறிவது என்ற ஒன்று தான் மற்ற விலங்குகளுக்கு இல்லாமல், மனிதனுக்குத் தனிச் சிறப்பாக இருக்கிறது. ஆகையால் அத்தகைய அறிவில்லாதவன் விலங்குகளை ஒத்தவனே. என்று. நமக்கு மிகவும் தேவையான ப்ரமேயங்களில் விரோதமில்லை என்பதைத் தெளிந்துகொண்டவன் தான் அறிவுள்ளவன். அவன் தான் விலங்குகளினும் சிறந்தவன். ஆகையால் தெளிவு அவசியமானது. (அதற்காகத்தான் இந்த விரோதபரிஹாரம் என்னும் கிரந்தம்.) உபதேசத்தின் சாரம்: தேவையானதில் தெள்ளிய அறிவு வேண்டும். குழம்பக்கூடாது. ஒன்றுமே தெரிந்துகொள்ளாமல் பசுபோலவும் இருக்கலாகாது. தீர்மானமான, ஐயம்திரிபற்ற, ஜ்ஞானத்தைப் பெறவேண்டும்.

## 76.அஞ்சுக சொர்க்கம் நரகம் போல்.

நரகத்துக்குப் பயப்படுவது போல் ஸ்வர்க்கத்திற்கும் பயப்படு. அதுவும் மோக்ஷத்திற்குத்தடையே.

न वक्तुं अपि शक्यते नरक-गर्भ-वासादिकम्
वपुश्च बहु-धातुकं निपुण-चिन्तने तादृशम्। त्रिविष्टप-
मुखं तथा दिवि पदस्य ते दीव्यतः
किमत्र न भयास्पदं भवति रङ्गपृथ्वीपते॥

--- ***அபீதிஸ்தவம்.***

இந்தப் பிரகிருதிமண்டலத்தில் உள்ள எல்லாமே பீதியளிப்பவை. சொர்க்கமானாலும் சரி, நரகமானாலும் சரி. இதைச் சொல்லும் ச்லோகத்தின் அர்த்தம்:

> நரகக்கொடுமையும், கர்ப்பவாசக் கொடுமையும், இது முதலியவையும் சொல்லி மாளாதவை. ஆராய்ந்து பார்த்தால், அனேக தாதுக்கள் கொண்ட நமது உடலும் அத்தகையதே. உன் ஒளிரும் பரமபதம் இருக்க, சுவர்க்கம் முதலியவையும் நரகாதிகள் போலவே. அரங்கத்தரசனே! இங்கே எது தான் அச்சம் தராதது?

எல்லாமே அச்சம் விளைவிப்பவை தான். நிலவுலகம், நரகுலகம், வானுலகம், எல்லமே இந்தப் பிரகிருதிக்குள் நம்மைச் சுழற்றிச் சுழற்றி அடிப்பதால் பயஹேதுக்களே. பரமபதம் ஒன்று தான் ஆனந்தஹேது. நரகத்தைச் சொல்லிவிட்டு த்ரிவிஷ்டபமும்(சொர்க்கமும்) அத்தகையதே என்கிறார். சொர்க்கத்தில் இன்பமும் நரகத்தில் துன்பமும் கிடைக்கையில், இவ்வளவு பெரிய வித்தியாசத்தைக் கருதாமல் இரண்டையும் ஒரே விதமானதாகச் சொல்வதன் கருத்து இதோ: 1.இரண்டும் பிரகிருத்திக்கு உட்பட்டவை. 2.இரண்டும் நம் வினைப்பயன் துய்க்க அமைந்தவை. 3.இரண்டும் நம்மைப் பிறவிச் சுழலில் தள்ளுபவை. 4.இரண்டும் துச்சமானவை, மோக்ஷாநந்தத்துடன் ஒப்பிடும்போது. ஆகையால் நாம் இரண்டுக்கும் அஞ்சுகிறோம். மோக்ஷத்தையே நாடவேண்டும்.

எது எதுபோல என்று சொன்ன நாலு:

- அழகிய பெண்டிர் அனலைப் போல்.
- அறிவாய் செல்வம் பாம்பைப்போல்.
- அறிவில்லாதான் விலங்கைப்போல்.
- அஞ்சுக சொர்க்கம் நரகம் போல்.

## 77.அடியார்க்காட்படு பெருமாளால்.

பாகவதர்களுக்குத் தாஸனாக்கப் பெருமாள் துணையை நாட வேண்டும்.

**அடியார்க்கென்னை ஆட்படுத்த...**
**अतोऽहमपि ते दासः**

**என்னப்பண்ணின உபகாரத்தைக்காட்டிலும்**
**உற்றது முன்னடியார்க்கடிமை என்னப்பண்ணி**
**இதற்கு மேலொரு உபகாரமுண்டோ...**

***--- முநிவாஹநபோகம்.***

பகவத்தாஸ்யத்தினும் உயர்ந்தது பாகவததாஸ்யம். அது நமக்கு எளிதில் கிட்டாது. அதைப் பெருமாள் தான் நமக்கு ஏற்படுத்தியருள வேண்டும். திருப்பாணாழ்வாரின் அமலனாதிபிரானில் அடியார்க்கென்னை ஆட்படுத்த விமலன் என்ற வரிக்கு உரையாக அமைந்த வாக்கியமிது.

> பெருமாளே! நான் உனக்கடிமை என்னும் நிலை நன்று. அதைக்காட்டிலும் உயர்ந்த நிலை உன் அடியார்க்கடிமை என்பது. இப்படி அடியார்க்காட்படுத்திய நீ மஹோபகாரம் செய்தவராகிறாய்.

அடியார்க்கடிமை செய்வது பெரும் பாக்கியம். அதை அடையப் பெருமாள் துணை தேவை. பெருமாளே நம்மை அடியார்க்கு ஆட்படுத்துகிறார்.

## 78.அவனுகப்படியார் உகப்பதனால்.

அடியார்களை உகப்பிப்பதன் மூலம் பெருமாளை உகப்பிக்க வேண்டும்.

**பிரமாணங்களை ஆராய்ந்தால் ராஜாவுக்கு ராஜகுமார-உபலாலநம் போலே பாகவதகைங்கர்யம் பகவானுக்கு அபிமதமாய் இருக்கையாலவன் செய்யும் கிஞ்சித்காரங்களில் பாகவதகைங்கர்யம் ப்ரதானமாயிற்று.**

***---ரஹஸ்யத்ரயஸாரம், புருஷார்த்த காஷ்டாதிகாரம்.***

பாகவதர்களுக்கு ஏன் பணிவிடை செய்யவேண்டும்? அவர்களும் நம்மைப் போன்றவர் தானே? பெருமாளுக்கு மட்டும் கைங்கர்யம் பண்ணினால் போதாதோ? என்று ஒரு ஸஹஜமான கேள்வி. அடியார்க்கும் பணி செய்வது நம் கடமை என்பதற்கு நான்கு காரணங்கள் சொல்கிறார் தேசிகன். 1. பெருமாளுக்கு உகப்பான திருப்பணிகளைச் செய்வது தானே நாம் அவருக்குச் செய்யும் கைங்கரியம்? பாகவதகைங்கரியம் தான் அவருக்குப் பிடித்தது என்று அவரே சொல்லிவிட்டாரே? 2.சாஸ்த்ரத்தில் சொன்னதை நாம் மீறலாகாது. பாகவதகைங்கர்யம் பண்ணச் சொல்லி சாஸ்த்ரம் விதிக்கிறது. மறுகேள்வி கேட்காமல் அதைப் பண்ணவேண்டும். 3.பெருமாளை எந்தேந்த உருவில் ஆராதிக்கலாம்? பாகவதர்களின் அந்தர்யாமியான உருவில் அவரை ஆராதித்தால் மிக நல்லது. 4.பெருமாள் தனக்குள்ள சேஷித்வத்தைத் தன் அடியார்களுக்கும் கொடுப்பது பொருத்தமானதே. ராஜா தனக்களித்த மாலையைத் தன் யானைமேல் போடுவது போல். இந்த நாலு காரணங்களுள் முதலாவதை விளக்கும் ஸ்ரீஸூக்தி இது:

சாத்திரப் பிரமாணங்களை ஆராய்ந்து பார்த்தோமானால் இது தெரிகிறது. ராஜகுமாரனைக் கொஞ்சினால் ராஜாவுக்கு மகிழ்ச்சி ஏற்படுவது போல் பாகவதர்களுக்குத் தொண்டு செய்து அவர்களை மகிழ்வித்தால் அதனால் பகவத்ப்ரீதி உண்டாகும். ஆகையால் நாம் செய்யக்கூடிய பணிகள் எல்லாவற்றுள்ளும் பாகவதகைங்கரியமே சிறந்தது.

இரண்டு காரணங்கள் சொல்கிறார் பாகவதகைங்கர்யத்தால் பகவத்ப்ரீதிக்கு. ஒன்று, ப்ரமாணங்கள் அப்படித்தான் சொல்கின்றன. ஒன்றா இரண்டா இதற்குப் பிரமாணங்கள்? பாத்மோத்தர புராணம், கருடபுராணம், மஹாபாரதம், என்று ஏராளமானவை. இரண்டாவது காரணம் இது லௌகிக திருஷ்டாந்தத்துக்கும் ஒத்துவருகிறது. தன் குழந்தைகளைச் சீராட்டுபவரைத் தந்தைமார் விரும்புவது கண்கூடு. பெருமாளுக்கு நாம் செய்யும் மற்ற உபசாரங்களும், புஷ்பம், கந்தம், இவையெல்லாமும் கூட லௌகிகதிருஷ்டாந்தத்தின் அடிப்படையில் தானே? அவனுக்கு இவை தேவையில்லை என்றும் அவனுக்கு எல்லாமே போக்யம் என்றும் அறிந்தும் உலகவழக்கை ஒத்து ஆராதிக்கிறோம் அல்லவா? இப்படி பகவத்கைங்கர்யத்தில் அடங்கியதாகவும் ஆகிறது பாகவதகைங்கரியம். இதை இத்தகையதாக அறிந்து செய்வோமாக.

## 79.அடியார் ஆராதனமே மேல்.

ததீயாராதனம் பண்ணவேண்டும்.

**பகவத் கைங்கரியமும் பாகவத கைங்கரியமும் சேர அனுஷ்டிக்க அரிதானபோது இரண்டத்து ஒன்றை விடவேண்டும்படியான ஆபத்தசையிலே**

**...आराधनानां सर्वेषां विष्णोराराधनं परम्।**

**तस्मात् परतरं प्रोक्तं तदीयाराधनं परम्॥**

**...பாகவத கைங்கர்யம் தன்னிலே பகவத் கைங்கரியத்தையும் கண்டு கிருதார்த்தனாய் இருக்கப் பிராப்தம்.**

***———ரஹஸ்ய ரத்நாவளி ஹ்ருதயம்.***

இங்குத் ததீயாராதனம் என்றது திருமாலடியார்களை அமுது செய்விப்பது உட்பட எல்லா உபசாரங்களாலும் மகிழ்வித்தல்.

பெருமாள் ஆராதனத்தைக் காட்டிலும் மேலானது அடியாரை ஆராதித்தல். நாம் இரண்டையுமே தான் பண்ணவேண்டும். பெருமாளையும் ஆராதிக்கவேண்டும். அவனடியார்களையும் ஆராதிக்கவேண்டும். ஏதேனும் ஒரு சங்கடநிலையில் இவ்விரண்டுள் ஒன்று தான் பண்ணலாகுமென்றால் பாகவதாராதனம் பண்ணவும். அதில் இரண்டும் அடங்கும். “எல்லா ஆராதனங்களுக்குள்ளும் விஷ்ணுவுக்குப் பண்ணும் ஆராதனமே உயர்ந்தது. அதைக் காட்டிலும்

உயர்ந்ததாகும் அவனடியார்களுக்குப் பண்ணும் ஆராதனம்." ... பாகவத கைங்கர்யத் திலே பகவத் கைங்கரியம் **அடங்கி விடுவதைப் பார்த்து, கடமையை ஆற்றி யாகிவிட்டது என்று நிம்மதியாக இருக்கவேண்டும்.**

பாத்மோத்தரபுராணத்தில் உள்ளது இங்கு ப்ரமாணமாக எடுத்த ச்லோகம். மற்றைத் தெய்வங்களுக்கும் அரசர் முதலானோர்க்கும் பண்ணும் உபசாரங்களும் ஆராதனங்கள். அவை யாவற்றினும் சிறந்தது பெருமாள் திருவாராதனம். அதைக் காட்டிலும் சிறந்ததும் ஒன்றுண்டு. அது தான் ததீயாராதனம் என்பது. அதை விட உயர்ந்த ஆராதனம் வேறு கிடையாது.

## 80.அடியார் வீட்டில் புழுவும் மேல்.

பாகவதர்களின் சகவாசம் நல்லது.

**पशुर्मनुष्यः पक्षी वा ये च वैष्णवसंश्रयाः**

**तेनैव ते प्रयास्यन्ति तद्विष्णोः परमं पदम् त्**

**इत्यादिषु उक्तं अपकृष्ट-जन्मापि त्वदिष्ट-विनियोग-सिद्धत्वात्**

**शेषत्व-काष्ठा-वेदिनो ममालम्ऽभागवत-अभिमान-विषय-भूत-देश-**

**वासित्वं तत्कैङ्कर्यं च मम अपेक्षितं इति तात्पर्यम्।**

***---ஸ்தோத்ர ரத்ந பாஷ்யம்.***

"தவ தாஸ்ய ஸுகைக ஸங்கிநாம் பவநேஷு அஸ்த்வ்பி கீடஜந்ம மே" என்கிற ஆளவந்தார் ஸூக்திக்கு உரையில் உள்ளது இந்த வாக்கியம்.

> பசு, மனிதன், பறவை, எதுவானாலும் எவரெவர் வைஷ்ணவர்களைச் சார்ந்திருக்கிறார்களோ அவர்கள் அந்தக் காரணத்தாலேயே பெருமாளீன் பரமபதத்தை அடைகிறார்கள்." இது முதலான பிரமாணங்களில் சொன்ன நீசப் பிறவியும் எனக்குப் போதும். உன் இஷ்டப்படியான யோனியில் என்னைப் பிறக்கச் செய். அடிமையின் எல்லைநிலத்திலுள்ள நான் நீ தரும் பிறவியை மறுக்காமல் ஏற்பேன். ஆனால் நான் வேண்டுவது ஒன்று உண்டு. பாகவதர்களின் அபிமானத்துக்குரிய இடத்தில் பிறந்து அவர்களுக்குக் கைங்கரியம் பண்ணும்படி என்னைச் செய்.

நாம் எந்த ஜீவராசியாகப் பிறக்கிறோம் என்பது கூட அவ்வளவு முக்கியமில்லை. எங்கே பிறக்கிறோம்? வைஷ்ணவர்களை ஆச்ரயிக்கக் கூடிய இடத்திலானால் சரி. அவர்கள் பார்வை படும் இடத்திலானால் நல்லது. அவர்களின் சகவாசமே நமக்கு உத்தாரகம் ஆகும். அந்தப் பாக்கியம் கிடைக்குமானால், புழுவாய்ப் பிறந்தாலென்ன, புல்லாய்ப் பிறந்தாலென்ன? ஏதும் குறையில்லை. ஆனால் வேறு கிருகங்களில் உயர் பதவியுடன் பிறந்தால் கூட அந்தப் பிறவி

வேண்டாம். உயரினப் பிறவியை விடத் திருமாலடியார் உடனிருக்கை தான் முக்கியம். இதுவே எனது வேண்டுகோள். என்றிவ்வாறு தெள்ளத்தெளிவாகத் தம் மனோரதத்தை வெளியிடுகிறார்..

அடியார்கள் பற்றிய நான்கு உபதேசங்கள்:

- அடியார்க்காட்படு பெருமாளால்.
- அவனுகப்படியார் உகப்பதனால்.
- அடியார் ஆராதனமே மேல்.
- அடியார் வீட்டில் புழுவும் மேல்

## 81. அபவர்க்கத்தும் பக்தன் தான்.

நாம் ப்ரபத்தி பண்ணியிருந்தாலும் பக்தியும் பூண்டிருக்கவேண்டும்.

**समस्तोपाधिविनिर्मुक्तदशायामपि स्वरूपवत् तदनुवृत्तेः(भक्त्यनुवृत्तेः)।**

**तथा च पठ्यते काश्मीरपुरनिवासिभिः-**

**मोक्षोपायस्य किं रूपं भक्तिरित्यक्षरद्वयम्।**

**अथ मोक्षस्य किं रूपं भक्तिरित्यक्षरद्वयम्॥ इति**

--- ***நிக்ஷேபரக்ஷா***

பக்தியோகம் ஸ்வரூபவிருத்தம் அன்று. நேர்மாறாக பக்தி தான் ஸ்வரூபஸித்தம். அதனால் தான் மோக்ஷத்திலும் அந்த நிலை கழியாது. முக்தர்களெல்லாம் பகவத்பக்தர்களாய் மகிழ்கிறார்கள். அந்தத் தடையற்ற பக்திக்காக பக்தியோ ப்ரபத்தியோ இப்பொது பண்ணுகிறோம். இதைச் சொல்லும் தேசிகஸூக்தி இது. மோக்ஷத்திலும் பக்தி அனுவர்த்திக்கும். இதைச்சொன்ன மேற்கண்ட வாக்கியத்தின் அர்த்தம்:

> எல்லா உபாதிகளும் கழிந்த நிலை மோக்ஷமென்பது. அந்த நிலையிலும் கூட நாம் பகவானிடம் பக்தராகவே இருப்போம். இவ்வாறு காச்மீரத்திலும் ஒரு சுலோகம் வழக்காற்றில் உள்ளது. மோக்ஷத்திற்கு வழியும் பக்தி. மோக்ஷம் என்னும் பலமும் பக்தி.

பக்தியால் நிரந்தரபக்தியை அடையலாம். பக்திக்குப் பல ஆகாரங்கள் உண்டு. உபாயபக்தி, பலபக்தி, ஸ்வயம்ப்ரயோஜநபக்தி, எல்லாமே உயர்ந்தவை.

## 82. அபிசாரமறை அவச்யம் தான்.

சாஸ்த்ரத்தின் எந்தப் பகுதியும் வீணானதன்று. எல்லாம் அத்யயனம் செய்து பயன் பெறலாம். எதையும் ஒதுக்காதீர்.

मुमुक्षोरपि रक्षकक्षत्रियाद्यभावे राक्षसाद्यभिभवे च आत्मरक्षणार्थं
अभिचारः कर्तव्य एव।
"सर्वत एव आत्मानं गोपायेत्" इति शास्त्रात्।
अन्यथा अहरहः अनुष्ठेयस्य आप्रयाणात् अनुवर्तनीयस्य कर्मादेः उच्छेदप्रसङ्गेन
उपायानिष्पत्तेः मोक्षासिद्धिप्रसङ्गात्।

***---ந்யாயபரிசுத்தி***

ப்ரமேயாத்தியாயத்தில் ச்ருதிவிஹிதம் எல்லாம் ஹிதம் என்று சாதிக்கிறார். அப்படியானால் அபிசாரம் பிறரை ஹிம்ஸிக்க உபாயமாக வேதத்தில் உள்ளதே, அது எப்படி ஹிதமாகும்? என்று கேட்டால் அதுவும் ஒருவகையில் நன்மை பயப்பதே என்று அருளுகிறார்.

> சில சமயங்களில் மோக்ஷார்த்தி கூட அபிசாரம் செய்ய நேரிடலாம். காப்பாற்றும் க்ஷத்திரியர்கள் இல்லாதபொழுது ராக்ஷஸாதிகள் பீடித்தால் தன்னைக் காப்பாற்றிக் கொள்ளவேண்டியது சாத்திரக் கடமையாதலால் அபிசாரம் பண்ண வேண்டியது தான். இல்லையேல், இவன் நாள்தோறும் அனுஷ்டிக்க வேண்டியதும் மரணம் வரை தொடர்ந்துசெய்ய வேண்டியதுமான கர்மம் முதலியன அறுபட்டுப் போவதால் மோக்ஷமே ஸித்திக்காமற் போகக் கூடுமாதலால்.

அபிசாரம் கெட்டது தான். பிறரை ஹிம்ஸிக்காமல் இருப்பது தான் நல்லது. விசேஷித்து முமுக்ஷு எதற்காகப் பரஹிம்ஸை பண்ணுவான்? ஆனால் அவனுக்கும் கூட அபிசாரசாஸ்த்ரம் பயன்படும் காலம் நேரிடலாம். தன்னைத்தானே காத்துக் கொள்வதற்காகப் பரஹிம்ஸையும் பண்ணக்கூடிய சூழ்நிலை வரலாம். வேதத்தில் விஹிதமான எல்லாமே நல்லது தான். எதையும் வேண்டாம் என்று ஒதுக்குவதற்கில்லை.

## 83. அழிவான் மூடன் நம்பாதான்.

சந்தேகப்பிராணியாக இருக்காதே.

यस्त्वेवं अतिशङ्कया दूयते, स तु स्व-माता-पितृ-चरित- अनवधारणेन
स्व-ब्राह्मण्यं अपि यथार्हं अतिशङ्केत इति जितं लोकायतेन। उक्तं च भगवता।

"अज्ञश्च अश्रद्दधानश्च संशयात्मा विनश्यति।
नायं लोकोऽस्ति न परः न सुखं संशयात्मनः॥"
तत् सिद्धं विशिष्टाधिकारिकं वेदाविरुद्धं वैखानसादि-स्मरणं प्रमाणमिति।

---*ந்யாயபரிசுத்தி*

வைகாநஸர்கள் தாழ்ந்த ஜாதியினர் என்றும் வைகாநஸஸ்ம்ருதி ப்ரமாணம் ஆகாது என்றும் சொல்வாரைக் கண்டிக்கிறார்.

> இவ்வளவு அதிகமான சங்கையாலே நொந்து போகிறவன் தன் பெற்றோர் நடத்தையையும் தீர்மானிக்கமுடியாமல் தன் ப்ராம்மண்யத்தையும் சங்கிப்பான். (எதையுமே நம்பவேண்டாம் எனும்) லோகாயதனுக்கு வெற்றியாம். பெருமாளே (கீதையில்) அருளியிருக்கிறார்: ''அறிவிலி, (அனுஷ்டிக்க)சிரத்தை அற்றவன், சந்தேகப்பிராணி, இத்தகையவன் அழிகிறான். அவனுக்கு இவ்வுலகும் (தர்மம்,அர்த்தம்,காமமும்) இல்லை. வேறுலகும் (மோக்ஷமும்) இல்லை. ஸம்சயாத்மாவுக்குச் சுகம் கிடையாது'' என்று. ஆகையால் வைகாநஸஸ்ம்ருதி முதலியவை குறிப்பிட்ட சிலருக்கு மட்டுமானவையாய் வேதத்துடன் முரண்படாதவையாய் இருப்பதால் ப்ரமாணம் ஆகின்றன.

சங்கை இருக்கலாம், ஆனால் அதிசங்கை கூடாது. எதற்கெடுத்தாலும் சந்தேகப்பட்டுக் கொண்டிருப்பவன் எப்படிக் கடைத்தேற முடியும்? இகசுகமும் இல்லாமல், பரசுகமும் இல்லாமல், வீணே அழிந்துபோவான். ஐயம் கொள்வதிலும் அளவோடு இருப்போம்.

## 84. அல்லல் படுவதும் அருளால் தான்.

துன்பங்கள் நேரும்போது கடவுளை நிந்திக்கக் கூடாது.

**இவ்விடத்திலுள்ள சிற்றின்பங்களைத் துக்க-ப்ரஸங்க-ரஹிதமாக அனுபவிப் பிக்குமாகில் இவனுக்கு இந்நசை ஒருகாலும் மாறாது. பகவதநுபவத்தில் போக்யதா புத்தியும் கொழுந்துவிட்டு வராது. சிக்ஷகனான ஈச்வரன் சில கடினப்பிரகிருதிகளுக்குப் பண்ணுகிற அனுக்ரகவிசேஷம் இதென்று அனுஸந்திக்கை உசிதம்.**

---*ரஹஸ்யத்ரயஸாரம், ப்ரபாவரக்ஷாதிகாரம்*

பெருமாள் ப்ரபந்நனுக்கும் துக்கத்தைத் தருகிறாரே, ஏன்? அவருக்குக் கருணை இல்லையா? என்ற கேள்விக்கு விடை:

> நிலவுலகத்தில் உள்ள அசித்சுகங்கள் சிற்றின்பங்கள். அவை துக்கம் கலவாமல், துன்பத்திற்குப் ப்ரஸக்தியே இல்லாமல் ப்ராப்தமானால் இந்தப் பிரபந்நனுக்கு இச்சிற்றின்பங்களில் கூடாவிருப்பம் குறையாது போகும். பெருமாளை

> அனுபவிப்பதில் நாட்டம் வளராது. ஆகையால் துன்பங்களைக் கலந்து கொடுப்பதும் நன்மைக்கே. கடினச்சுபாவம் கொண்டவர்க்குப் பெருமாள் இத்தகைய அருளைப் புரிகிறார். இவ்வாறு கருதுவது தகும்.

(கடவுளுக்குக் கருணை இல்லை என்று கருதுவது தகாது.) பெருமாள் தன் பக்தர்களுக்குத் துக்கங்களைக் கொடுப்பதற்குச் சில காரணங்கள் உண்டு. அவற்றுள் முக்கியமானது, அவர்களிடம் அருள் பெருக்கினால், அவர்களை வாழ்க்கையில் வெறுப்படையச் செய்து தம் பால் ஈர்த்துக்கொள்வது என்பது. மகனிடம் அன்புகொண்ட தந்தை தானே அவனைக் கண்டித்துக் கசையடி கொடுத்து வளர்க்கிறான்? தகப்பன் பிள்ளையை அடிப்பது அவன் மேல் உள்ள அக்கறையால் தானே? அதுபோலப் பெருமாளும் தன்னைச் சேர்ந்தவர்களிடம் தனி அக்கறை கொண்டு தண்டித்து நல்வழிப்படுத்துகிறார். எந்தெந்தவிதங்களிலெல்லாம் பக்தனுக்கு நன்மை செய்கிறார் பெருமாள்? தண்டித்து நன்மை செய்வதும் ஒரு வகை. அவ்வளவு அருள் அவருக்கு.

கடந்த நாலு உபதேசங்கள்:

- அபவர்க்கத்தும் பக்தன் தான்.
- அபிசார மறை அவசியம் தான்.
- அழிவான் மூடன் நம்பாதான்.
- அல்லல் படுவதும் அருளால் தான்

## 85. அஷ்டாக்ஷரத்துள் எல்லாமே .

அஷ்டாக்ஷர மந்திரத்தில் எல்லாம் அடங்கியிருப்பதால் நிறைய மந்திரங்களை நாடிப்போகவேண்டாம். .

> **இவற்றில் திருமந்திரம் ஸர்வஸங்க்ரகம். இது தான் மூன்று பதமாய் எட்டுத்திருவக்ஷரமாய் இருக்கும்.**
>
> ***---ரஹஸ்யபதவீ.***

திருமந்திரம் என்னும் எட்டெழுத்தின் பெருமையைச் சொல்கிறார்:

> ரஹஸ்யத்ரயம் எனப்படும் மூன்று மந்திரங்களுக்குள்ளே முதலாவதான திருமந்திரம் எல்லாவற்றையும் சுருக்கிச் சொல்வதாயிருக்கும். இதில் மூன்று பதங்கள் உள்ளன. எட்டு எழுத்துகள் உள்ளன. .

இங்கே ஸர்வஸங்க்ரகம் என்பதை இரண்டு விதமாக விளக்கலாம். 1. தத்வம், ஹிதம், புருஷார்த்தம், என்ற மூன்றுமே இதில் உள்ளன. ( இந்த அர்த்தம் ரஹஸ்யபதவியில் உள்ள முந்தைய வாக்கியங்களுடன் நன்கு பொருந்தும்.) 2.``ஸர்வம் அஷ்டாக்ஷராந்தஸ்தம்'' என்று

ஒரு ப்ரமாண வசனம் உண்டு. அதன் படி நான்கு வேதங்கள், ஆறு அங்கங்கள், முதலிய எல்லா வாங்மயமும் இந்தச் சிறிய மந்திரத்தினுள் பொதிந்திருப்பதாக முனிவர்களின் கருத்து. இதனால் நாம் அறியும் நீதி என்னவென்றால்: இப்படி இது ‘‘ஸர்வமந்த்ர நைரபேக்ஷ்யகரமாய்’’ இருப்பதால் நாம் அனேக மந்திரங்களை அபேக்ஷிக்கத் தேவையில்லை. இது ஒன்றே போதும். இதன் விவரணமானதும் இதோடு இயைந்ததுமான இரண்டொரு மந்த்ரங்களுடன் நிறுத்திக் கொள்ளலாம். ஏராளமான மந்த்ரஸாஹித்யத்தில் தத்தளிக்க வேண்டாம். எல்லா வாங்மயமும் இதில் உள்ளதாகச் சொன்னவர்களின் கருத்தை ஏற்போம். இந்த மந்திரத்தின் பால் கொண்டுள்ள மதிப்பு காரணமாக எட்டு திருவக்ஷரங்கள் என்கிறார் இதில் உள்ள எழுத்துகளை.

## 86. அஷ்டாக்ஷரத்தால் எல்லாம் ஆம்.

இம்மை மறுமைப் பயன்கள் எல்லாமே அஷ்டாக்ஷரமொன்றாலேயே கிடைப்பதால் வேறு காரியங்களில் அதிகக் க்ருஷி பண்ணவேண்டாம்..

**ஸ்ரீமத் அஷ்டாக்ஷரமாகிற மஹாமந்த்ரம்**
**ऐहलौकिकं ऐश्वर्यं இத்யாதிகளிற்படியே ஸர்வ புருஷார்த்தங்களுக்கும் சாதனமாய்...**

***———ஸாரஸாரம்.***

அஷ்டாக்ஷரத்தால் எல்லாப்பலன்களும் கிடைக்கும் என்பதை ப்ரமாணத்துடன் சொல்கிறார்:

> சீர்மிக்க எட்டெழுத்து என்னும் இந்த மஹாமந்திரம் ‘‘இவ்வுலகத்தில் ஐச்வர்யத்தையும் சுவர்க்கம் முதலிய பரலோகப் பயன்களையும் கைவல்யத்தையும் பகவதனுபவத்தையும் சாதித்துத் தரவல்லது." என்று நாரதர் சொல்லுகிறபடி எல்லாப்புருஷார்த்தங்களையும் விளைவிக்கும்.

சுவர்க்கத்திற்காக ஜ்யோதிஷ்டோமம், ஐச்வர்யத்திற்காகக் குபேரபூஜை, கண்பார்வைக்காக ஸூர்ய நமஸ்காரம், என்று தனித்தனியாக உபாயங்களைப் பண்ணத் தேவையில்லை. அஷ்டாக்ஷர ஜபமொன்றுமே இவ்வெல்லாப் பலன்களையும் சேர்த்தும், அதற்கு மேலும், தரவல்லது. ஆகையால் மற்ற உபாயங்களை விட்டு இந்த மந்திரம் சொல்லும் உபாயம் மாத்திரம் அனுஷ்டித்து இந்த மந்திரத்தை மட்டும் ஜபம் செய்தால் எல்லாம் கிடைத்துவிடும். அவ்வாறு செய்வோமாக.

## 87.அஷ்டாக்ஷரமே பெருமாள் தான் .

அஷ்டாக்ஷரமந்திரத்தை ஜபிக்கும்போது பெருமாளே மந்திர உருவில் நம்மிடம் எழுந்தருளியிருப்பதை அறிந்து அதற்கேற்ற பக்திச்ரத்தையுடன் ஜபிக்கவேண்டும்.

व्यक्तं हि भगवान् देवः साक्षात् नारायणः स्वयम्॥

अष्टाक्षर-स्वरूपेण मुखेषु परिवर्तते॥

**என்கிறபடியே தேசிகஜிஹ்வையிலிருந்து...**

***———ரஹஸ்யத்ரயஸாரம், மூலமந்த்ராதிகாரம்.***

நாரதகல்பத்திலிருந்து பிரமாணம் காட்டி விளக்குகிறார்:

> ஸாக்ஷாத் நாராயண பகவானே அஷ்டாக்ஷரம் என்னும் உருக்கொண்டு வாய்களிலே நடமாடுகிறான் என்பது ஸ்பஷ்டமே. என்கிறபடி ஆசார்யனின் நாக்கிலிருந்து ... .

நாமெல்லாம் என்ன நினைக்கிறோம்? அஷ்டாக்ஷரம் பெருமாளைச் சொல்லும் மந்திரம் என்று. அது சரி தான். ஆனால் இன்னொரு படியும் உண்டு. அது பெருமாளே ஆன மந்திரம். மந்த்ரமூர்த்திம் ஹரிம் ஸ்மரேத் என்று வேறொரு இடத்தில் சொன்னது போல் பெருமாள் சில மந்திரங்களின் உருவில் இருக்கிறார். நாம் அஷ்டாக்ஷரத்தை ஜபிக்கும்போது நாக்கிலும் உதடுகளிலும் புரள்வது வெறும் சொல்லன்று, ஸாக்ஷாத் பெருமாளே நம்மிடம் ஸாந்நித்யம் கொள்ளுகிறார். அதற்குத் தகுந்த தூய்மையுடனும் கௌரவபுத்தியுடனும் பக்தியுடனும் நாம் ஜபிக்கவேண்டும். மற்ற ஸ்தோத்ர பாடங்கள் சொல்வதுபோல் இதையும் நினைத்துவிடவேண்டாம். தியானம், பரிசுத்தி, ஒருமுனைப்பு, எல்லாவற்றுடனும் ஜபம் பண்ணுவோம்.

## 88.அஷ்டாக்ஷரஜபம் அந்தியிலும் .

ஸந்தியாகாலங்களில் அஷ்டாக்ஷரஜபம் பண்ணவேண்டும்.

तस्मात् अष्टाक्षरं मन्त्रं मद्भक्तैः वीतकल्मषैः॥

सन्ध्याकालेषु जप्तव्यं सततं चात्मशुद्धये॥।

इति श्रीवैष्णवधर्मशास्त्रोक्त-श्रीमदष्टाक्षरजपोऽपि ।

यथाशक्ति सन्ध्यायां अवसरे कार्यः

--- ***நித்யவ்யாக்யாநம்.***

நாம் ஸந்தியாவந்தனத்துடன் சேர்த்து அஷ்டாக்ஷர ஜபத்தையும் பண்ண வேண்டும் என்பதற்குப் பிரமாணம் காட்டுகிறார்:

> மேற்சொன்ன காரணத்தாலே (பெருமாள் ஸந்த்யைகளில் விசேஷித்து அதிஷ்டானம் பண்ணுவதாலே) குற்றமற்ற என் பக்தர்களால் இந்த

அஷ்டாக்ஷரமந்திரமானது ஸந்தியாகாலங்களில் எப்போதும் ஜபிக்கத் தக்கது. இது ஆத்மசுத்தியை ஏற்படுத்தும். என்று(பெருமாள் திருவாக்காக) ஸ்ரீவைஷ்ணவ தர்மசாஸ்த்ரத்தில் சொன்னபடி அஷ்டாக்ஷரஜபத்தைக் கூடியவரையில் ஸந்தியாகாலத்தில் நேருகையில் பண்ணவேண்டும்.

அஷ்டாக்ஷரஜபம் ஸந்தியாவந்தனத்தில் அடங்கியதன்று. வைஷ்ணவரல்லாத பிராம்மணர் அதை ஜபிப்பதுமில்லை. ஆனால் வைஷ்ணவர்கள் ஸந்தியாவந்தன முடிவில் அஷ்டாக்ஷர மந்த்ரத்தையும் ஜபிக்கவேண்டும். இதற்கு இரண்டு காரணங்களைச் சொல்லுகிறது தர்மசாஸ்த்ரம். ஒன்று, மற்ற காலங்களுக்கு இல்லாத ஒரு சிறப்பு ஸந்த்யாகாலங்களுக்கு உள்ளது. பெருமாள் அந்தக் காலங்களை அதிஷ்டானம் பண்ணுகிறார். அதனால் அந்தக் காலங்களில் பண்ணும் அஷ்டாக்ஷரஜபம் அதிகப் பலன் அளிக்கும். மற்றொன்று, இந்த ஜபத்தை எப்பொழுதுமே பண்ணலாம், ஆத்மசுத்திக்காக. இப்படி தர்மசாஸ்த்ரவிதி இருப்பதால் தன்னால் இயன்றவரை இந்தத் திருவெட்டெழுத்தை ஸந்த்யை வேளைகளில் (ப்ரதோஷம் முதலியவை இல்லாமல் காலம் நேருகையில்) ஜபம் பண்ணவேண்டும். மற்ற பகவந்மந்த்ரங்களுக்கு ஸாயம்ஸந்தியையுடன் ஜபவிதி கிடையாது. இந்த விதி அஷ்டாக்ஷரத்திற்குச் சிறப்பானது.

இதுவரை அஷ்டாக்ஷரத்தைப் பற்றிச் சொன்ன நான்கு அறிவுரைகள் வருமாறு:

- அஷ்டாக்ஷரத்துள் எல்லாமே.
- அஷ்டாக்ஷரத்தால் எல்லாம் ஆம்.
- அஷ்டாக்ஷரமே பெருமாள் தான்.
- அஷ்டாக்ஷர ஜபம் அந்தியிலும்.

## 89. அரைகுறை அறிவால் எகிறாதே.

நிறைகுடம் தளும்பாது. அரைவேக்காடாய் ஆட்டம் போடாதே.

**अनियतबहुजल्पै रल्पबोधावलिप्तैः**
**अवमतगुरुवर्गै रत्रिवर्गापवर्गैः ।**
**अभिनयविधुताङ्गै रङ्गुलीनृत्तसारैः**
**अलमिह जडभूभृत्पीठमर्दै रमीभिः**

***--- ஸங்கல்பஸூர்யோதயம்.***

ஐந்தாம் அங்கத்தில் தர்ப்பனின் பேச்சாக அமைந்த ச்லோகமிது.

இவர்கள் உளறிக்கொட்டுபவர்கள். அற்பமான அறிவால் திமிர் பிடித்தவர்கள். பெரியோரை அவமதிப்பவர்கள். அறம் பொருள் இன்பம் வீடு என்ற நாலையும்

விட்ட பரம நாஸ்திகர்கள். உடலுறுப்புகளை ஆட்டி அசக்கி சேஷ்டை பண்ணுபவர்கள். விரல்களின் நடனம் மட்டுமே ஸாரமாகக்கொண்டவர்கள். அறிவற்ற அரசர்களின் அவைகளிலே ஆசனங்கள் தேய அமர்பவர்கள். போதும் போதும்.

அறிவு குறைந்தால் ஆணவம் கூடும். இந்த ஆணவத்தின் வெளிப்பாடு தான் அதிகப்பேச்சு, பெரியோரை மதியாமை, அங்கசேஷ்டைகள், அரசவையில் ஆர்ப்பாட்டம், இதெல்லாம். அறிவு முதிர்ந்தவர்களுக்கு அடக்கம் தானாகவே வரும். படாடோபம் இருக்காது. பெரியவர்களிடம் பணிவு கொள்வர். மிதமாய்ப் பேசுவர். துள்ளமாட்டார்கள். ஆனால் இந்த அரைகுறைகள் அதற்கு நேர் எதிர். அமர்க்களமும் ஆடம்பரமும் கையாட்டலும் விரல் தூக்கலும் அப்பப்பா! இந்த வெளி யபிநயங்களிலேயே மயங்கி இவர்களையே அறிஞர்களாக நினைத்து கௌரவிக்கின்ற அரசர்களும் இருக்கிறார்கள். சொந்த அறிவில்லாத அந்த பிரபுக்களுக்கு அறிவின் தராதரம் என்ன தெரியும்? அதிகப்பகட்டும் அதிகமிடுக்கும் காட்டுபவனை அறிவாளி என்று பிரமிக்கின்றார்கள் அவர்கள். அந்த ஜடங்களான ராஜாக்களைக் கவர்வதற்கு என்ன கூச்சல்கள் ஆட்டங்கள் போடலாமோ அதை இந்த அரைகுறைகளும் போடுகின்றன. இப்படியும் ஒரு அரசவை தேவையா? போதுமடா சாமி! ராஜஸத்காரங்களும் புரஸ்காரங்களும் பெறுபவரை உண்மையான அறிஞர் என்று நினைப்பதற்கில்லை.

## 90.அருகில் கிடைக்கையில் அலையாதே.

தனக்குத் தேவையானது தன் அருகிலேயே இருக்கும்போது எங்கெங்கோ அலைந்து தேடாதே.

**अत्के चेन्मधु विन्देत किमर्थं पर्वतं व्रजेत् ।**

**इष्टस्यार्थस्य संसिद्धौ को विद्वान् यत्नं आचरेत् ॥**

**इति न्यायात् कर्ममात्रेण चेत् अमृतत्वं लभ्येत, कः पुनः कर्माङ्गकात्**

**कर्मसमुच्चितात् वा ज्ञानात् अमृतत्वं लिप्सेत ?**

***---சததூஷணி.***

எட்டாவது வாதம் ஸாதநசதுஷ்டயபூர்வவ்ருத்தத்வபங்கவாதம் என்பது. அம்ருதத்வம் என்கிற இறவாநிலை கர்மங்களைச் செய்வதால் மட்டும் கிடைக்குமா, அதையும் செய்து ஜ்ஞானயோகமும் செய்தால் தான் கிடைக்குமா? என்ற ஐயத்துக்கு ஒரு உதாரணம் சொல்லி விளக்குகிறார்.

அருகிலேயே தேன் கிடைக்குமானால் எதற்காக மலையேறிப் போகவேண்டும்? தன் தேவை நிறைவேறிவிட்டால் எந்த அறிவாளி மேலும் முயற்சிப்பான்? என்கிற நியாயப்படி, கர்மத்தால் மட்டுமே இறவாநிலை கிட்டுமாயின், எவன் அத்துடன் சேர்த்தோ, அதை அங்கமாகக்கொண்டோ, ஜ்ஞானயோகத்தையும் பண்ணுவான்?

இதில் சொன்ன நியாயம் சாபரபாஷ்யத்திலுள்ள ச்லோகமொன்றை மேற்கோளாகக் காட்டிக் கூறியதாகும். கர்மத்தில் தான் முதலில் ப்ரவ்ருத்தி என்பதை விளக்க இது கையாளப்படுகிறது. பெருமுயற்சியால் கிடைக்கும் ஒரு பலன் சிறு முயற்சியாலும் கிடைக்குமானால், எதற்காகப் பெருமுயற்சி பண்ணவேண்டும்? தேன் மலையுச்சியில் பொதுவாகக் கிடைப்பது. நம் அருகிலேயே அது கிடைத்துவிட்டால், மலைக்குப் போய்த் தேன் கொண்டுவருவானேன்? அறிவுள்ளவன் அவ்வாறு செய்வானா? குறைந்த யத்தினத்தால் பலனடைவது நல்லதன்றோ?

## 91.அன்னக்குறை மூன்றேற்காதே.

தோஷமில்லாத உணவை மட்டுமே உட்கொள்ளவேண்டும்.

**जातिदुष्टं लशुनादि। आश्रयदुष्टं शूद्रान्नादि। निमित्तदुष्टं केशाद्युपहतं। तादृशदोषराहित्येन अशुद्धेभ्यो विभक्तात् अन्नात् सेन्द्रियस्य देहस्य रजस्तमोभिभव रहित सत्वोन्मेषापादनेन शुद्धितः पृथक्करणं विवेक इति प्रदर्शकं वाक्यमाह |**

--- ***தத்வடீகா.***

விவேகம், விமோகம், முதலிய ஏழை விளக்குகையில் ஜாத்யாச்ரயநிமித்த துஷ்டம் என்னும் தொடரை (ஸ்ரீபாஷ்யத்தில் எடுத்ததை) விளக்குகிறார்.

> உணவுக்கு மூன்றுவகையில் தோஷங்கள் நேரிடலாம். ஜாதிதோஷம், ஆச்ரயதோஷம், நிமித்ததோஷம், என்பவை. இதில் ஜாதிதோஷம் உள்ளவை பூண்டு முதலியவை. ஆச்ரயதோஷம் உள்ளவை சூத்ரான்னம் முதலியவை. நிமித்ததோஷம் உள்ளவை மயிர் விழுந்த அன்னம் முதலியவை. இந்த மூன்று குறைகளும் நீங்கிய அன்னத்தை ஏற்கவேண்டும். புலன்களிலும் உடலிலும் ரஜோகுணமும் தமோகுணமும் மிகாமல் வைக்கவும், ஸத்வகுணம் வளரவும் இவ்வாறு தூய்மையால் தனிப்படுத்துவதை விவேகம் என்பர். இதைக்காட்டும் வாக்கியத்தை மேற்கோள் காட்டுகிறார்.

சில பதார்த்தங்கள் உண்ணத்தகாதவை என்று சாத்திரங்களில் விலக்கப் பட்டிருக்கின்றன. பூண்டு, வெங்காயம், சாராயம், முதலியவை. இவை ஜாதிதுஷ்டங்கள். இன்னும் சில வஸ்துக்கள் உண்ணக்கூடிய பதார்த்தங்கள் ஆனாலும், ஆச்ரயதோஷம் அடைந்திருக்கலாம். நாய்ச்சோறு, இரும்பில் பால், முதலியவை. இன்னும் சில ஏதோ சில காரணங்களால் அசுத்தம் அடைந்திருக்கலாம். எச்சில் பட்டது, ஈ விழுந்தது, இத்யாதி. இப்படியாக மூன்று வகைத் தோஷங்கள் சம்பாவிதங்கள்**(நேரக் கூடியவை)**. இந்தத் தோஷங்கள் கொண்ட உணவைச் சாப்பிட்டால், ரஜோகுணமும் தமோகுணமும் மேலிடும். இந்தத் தோஷங்களைத் தவிர்க்கவேண்டும். இப்படித் தூய்மையைப் பிரித்தெடுப்பதை விவேகம் என்பர்

வேதாந்தசாஸ்த்ரத்தில். உணவுப்பழக்கங்களில் வரையறைகள் உடல் ஆரோக்கியத்துக்காக மட்டுமென்று தற்காலத்தவர் கருதலாம். ஆனால் மனதைப் பண்படுத்தவும் நற்பண்புகளை வளர்க்கவும் அவை தேவை என்கின்றன சாஸ்திரங்கள். இதை நம்புபவர் சாஸ்திரங்களில் சொன்ன கட்டுப்பாடுகளையும் ஏற்பர்.

## 92.அர்த்தக் கலக்கம் செய்யாதே.

சாஸ்த்ரவிசாரங்கள் பண்ணும்போது பிறர் குழம்பும்படியாகப் பேசுவது கூடாது.

**विवक्षितार्थावैशद्यं व्याकुलत्वमपूर्णता ।**

**उल्लोकतेत्यमी दोषा गुणकोटौ जडैः कृताः ॥**

--- ***ந்யாயபரிசுத்தி.***

கௌதமஸூத்ர பஹிஷ்காரபக்ஷம் என்னும் தலைப்பில் ஸ்வாமி தேசிகன் நமக்குச் சொல்லும் அறிவுரை இது. சாஸ்த்ரவிசாரங்கள் பண்ணுபவரும் அதைக்கேட்டு மதிப்பீடு செய்பவரும் அதற்கேற்ப சிறுமைபெருமைகளைப் புரிந்துகொள்ளும் பொதுமக்களும் கூட அறியவேண்டியது இது.

> தான் சொல்லவந்த அர்த்தத்தில் தெளிவில்லாமை, குழப்பியடித்தல், நிறைவின்மை, உலகநிகழ்ச்சிகளை மீறிப்பேசுதல் என்கிற நான்கும் சாஸ்த்ர விசாரங்களில் குறைகளாகக் கருதப்பட வேண்டியவை. ஆனால், சில அறிவிலிகள் இந்தக் குறைகளையே குணங்களாகக் கருதுகிறார்கள்.

வேண்டுமென்றே புரியாதபடி பேசும் பண்டிதர்களை அறிவிலிகள் பாராட்டுகிறார்கள். மிகவும் கஹநமானதும் துரூஹமானதும் எளிதில் விளங்காததுமான அர்த்தங்களை இவர் அறிந்திருக்கிறார் என்று நினைத்து அவரைக் கௌரவிக்கிறார்கள். மற்றவர்கள் குழப்பம் அடையும்படி பேசுபவர்களை மஹாமேதாவிகளாக மதிக்கிறார்கள். வெட்டு ஒன்று துண்டு இரண்டாகப் பேசாமல் வளவளவென்று முடிவே இல்லாமல் பேசுபவர்களை ஆற்றல் மிக் கவர்களாகப் பிரமிக்கிறார்கள். உலகநடப்புக்கு ஒவ்வாத கருத்துகளைச் சாத்திரம் என்ற போர்வையில் சொல்பவரை லோகாதீதஜ்ஞாநியாக நம்புகிறார்கள். ஆனால் உண்மையில் தெளிவின்மை, பிறரைக் கலக்குதல், முடிவின்மை, உலகநிகழ்ச்சிக்கு முரண், என்ற நான்குமே குறைகள் தான். குறைகளையே குணங்களாக மருள்பவர் ஜடர்கள். இவர்களைப் பயன்படுத்திக்கொண்டு மேன்மேலும் குட்டைகுழப்பிப் பெருமைபெறுபவர்கள் உண்டு. நாம் இவர்களிடம் ஏமாறக்கூடாது. எவ்வளவு ஆழ்ந்த கருத்தானாலும் அதைத் தெளிவாகச் சொல்பவரை மட்டுமே ஸத்கரிக்கவேண்டும். தானும் குழம்பி பிறரையும் குழப்புவதையே ஒரு கலையாகப் பயின்ற பண்டிதம்மந்யர்களை நாம் உயர்த்திவைக்கக் கூடாது.

இதுவரை நாம் செய்யக் கூடாததாகச் சொன்ன கடைசி நான்கு அறிவுரைகள் வருமாறு:

- அரைகுறை அறிவால் எகிறாதே.
- அருகில் கிடைக்கையில் அலையாதே.
- அன்னக்குறை மூன்றேற்காதே.
- அர்த்தக் கலக்கம் செய்யாதே.

## 93. அடைக்கலமல்லது ஹிதமிலை மேல்.

சரணாகதி பண்ணுவதே பரம ஹிதமாகும்.

यतिपति यामुन प्रभृतयः प्रथयन्ति दये
जगति हितं न नस्त्वयि भरन्यसनादधिकम्॥

--- *தயாசதகம்.*

பகவானிடம் நாம் பண்ணிக்கொள்ளும் சரணாகதி என்பது அவரது தயையின் மேல் பாரத்தைப் போடுவது தான். ஆகையால் தயாதேவி விஷயமான ஸ்தோத்ரத்தில் ப்ரபத்தியைப் பற்றிப் பேசியது மிகப் பொருத்தம்.

> தயாதேவியே! எம்பெருமானார், ஆளவந்தார், முதலிய ஆசார்யர்கள் பரக்கப்பேசுகிறார்கள் இந்த விஷயத்தை. உன்னிடம் சரண் புகுவதைக் காட்டிலும் மேலானதொரு ஹிதம் எங்களுக்கு இந்த உலகில் எதுவுமே இல்லை.

எங்கள் பரமாசார்யர்கள் ஆளவந்தார், ராமானுஜர் முதலானோர். அவர்கள் எங்கள் நன்மையிலேயே நாட்டம் கொண்டவர்கள். தீர ஆராய்ந்து எங்களுக்கு எது மிக நல்லது என்பதைச் சொல்லியிருக்கிறார்கள். விஸ்தாரமாக அருளிச்செய்திருக்கிறார்கள். தயாதேவியிடம் முழுப்பொறுப்பையும் ஒப்படைத்து விடுதல் என்கிற சரணாகதியைப் பண்ணுவது தான் எங்களுக்குப் பரமஹிதம் என்கிறார்கள் அவர்கள். இதைக்காட்டிலும் மிகுந்த ஹிதம் உலகிலேயே கிடையாது.

## 94.அர்த்தம் புரியா மந்த்ரமும் ஏல்.

மந்த்ரங்களுக்கு அர்த்தம் புரியாவிட்டாலும் அவற்றை ப்ரமாணமாக ஏற்றுக்கொள்ளுக.

ननु केषुचिन्मन्त्रेषु अर्थज्ञानानुदयात् अप्रामाण्यमुक्तं तत्राह
"सतः परं अविज्ञानम्।"
"सृण्येव" इत्यादिमन्त्रेष्वपि प्रतिपाद्यत्वेन सत एवार्थस्य केवलं
अव्युत्पन्नानां अविज्ञानम्। न च तावता निरर्थकत्वम्।
पुरुषाणां प्रेक्षाव्युत्पत्त्योस्तारतम्यात् अनियमेन

सर्वेष्वपि वाक्येषु अविज्ञातार्थतया प्रामाण्यभङ्गप्रसङ्गात्।

--- ***ஸேச்வர மீமாம்ஸா.***

வேதமந்த்ரங்கள் ப்ரமாணமாகுமா ஆகாதா என்கிற விசாரம் பண்ணும்போது இந்த அறிவுரை.

> மந்த்ரங்கள் ப்ரமாணமன்று. ஏனெனில் சில மந்த்ரங்களுக்கு அர்த்தமே கிடையாது. என்று பூர்வபக்ஷி வாதம் செய்தால் அதற்கு உத்தரம். ஆமாம், சில வேதமந்த்ரங்களுக்கு அர்த்தம் புரியவில்லை. ஆனாலும் அவற்றுக்கு அர்த் தம் இல்லை என்னலாகாது. இருக்கிற அர்த்தம் நமக்குத் தெரியவில்லை என்று மட்டும் சொல்லலாம். மக்களுக்கு அறிவும் தெரிவும் ஒரே அளவில் இருப்பதில்லை. ஒருத்தருக்குப் புரியாதது இன்னொருத்தருக்குப் புரியலாம். இதை வரையறை செய்ய முடியாததால், எந்த வாக்கியத்திலும் ப்ராமாண்யம் கிடையாது என்ன வேண்டி வரும். இது சரியன்று. வேதமந்த்ரங்களுக்கு ப்ராமாண்யம் உண்டு.

எல்லாருக்கும் புரிந்த வாக்கியம் என்று எதுவுமே கிடையாது. ஒருவருக்குமே அர்த்தம் புரியாத மந்த்ரம் இருப்பதாகச் சாதித்துவிடமுடியாது. ஆகையால் இந்த யுக்தியால் பூர்வபக்ஷம் நிலைத்துவிடாது. வேதமந்த்ரங்கள் ப்ரமாணமே. இதை ஏற்றுக்கொள்.

## 95.அறமே எண்ணுக உணவெண்ணேல்.

சாப்பாட்டைப் பற்றிய சிந்தையை விட்டுவிட்டுத் தருமசிந்தையுடனே இருக்கவேண்டும்.

नाहारं चिन्तयेत् प्राज्ञो धर्ममेवानुचिन्तयेत्।
अहारो हि मनुष्याणां जन्मना सह जायते॥

**என்று பராசரகீதாதிகளிலும்**

--- ***ரஹஸ்யத்ரயஸாரம், ஸ்வநிஷ்டாபிஜ்ஞாநாதிகாரம்.***

ப்ரபந்நனுக்குச் சரியான நிஷ்டை ஏற்பட்டுள்ளதா என்பதற்கான அடையாளங்களைக் கூறும்போது, அவன் எதெதில் சிந்தை கொள்ளவேண்டும் என்பதை விளக்குகிறார். இதற்காக மஹாபாரதத்தின் ஒரு பகுதியான பராசரகீதையிலிருந்து மேற்கோள் காட்டுகிறார்.

> அறிவாளியாயிருப்பவன் தன் உணவைப் பற்றிக் கவலைப்படமாட்டான். தர்மத்தைப் பற்றி மட்டுமே சிந்திப்பான். மனிதர்களுக்கு அவர்கள் பிறக்கும்போதே ஆஹாரமும் உண்டாகிவிடுகிறது. **இந்தக் கருத்து பராசரகீதை முதலியவற்றில் உள்ளது**.

எப்பொழுது பார்த்தாலும் சாப்பாட்டுக்காகவே (இக ஸௌக்யத்துக்காகவே) சிந்தைப்பட்டுக் கொண்டிருப்பவன் அறிவாளியன்று. மேன்மேலும் தருமங்களைச் செய்வது பற்றியே

சிந்திப்பவன் தான் அறிஞன். உணவைக் குறித்த கவலை தேவையே இல்லை. பிறக்கும்போதே உணவும் உண்டாகி விட்டது. கல்லுக்குள் இருக்கும் தேரைக்குக் கூட உணவைப் படைக்கிறான் கடவுள். அன்னவிசாரம் அதுவே விசாரம் என்று வாழ்நாளைக் கழித்துவிட்டால் என்ன பயன்? “பொன்றுங்கால் பொன்றாத்துணை” என்று பலரும் புகழும் அறத்தையல்லவா சேமிக்கவேண்டும்? அறம் பிறகும் உதவும். ஆகாரம் அப்போதைக்கு மட்டும் தான் உதவும். அறம் முயன்று பெறத்தக்கது. ஆகாரம் எப்படியும் கிடைத்துவிடும். நம் சிந்தை எப்பொழுதும் தர்மத்திலேயே இருக்கவேண்டும்; சாப்பாட்டில் வேண்டாம்.

## 96.அம்ருதநிலை பெற பிற நாடேல்.

பகவானை மட்டுமே அணுகி இறவாநிலை பெறலாம். வேறு யாரையும், வேறு எதையும், நாடவேண்டாம்.

`` नास्ति भेषजमन्यत्र नारायणरसायनात् ।”

“वासुदेवं परित्यज्य योऽन्यं देवमुपासते ।

तृषितो जाह्नवीतीरे कूपं खनति दुर्मतिः ॥”

इत्यादिप्रमाणगत्या प्रत्याह - तापेति

--- ***தத்வடீகா.***

**தாபாதுரை** ரம்ருதத்வாய ஸ ஏவ ஜிஜ்ஞாஸ்ய: என்றொரு பங்க்தி ஸ்ரீபாஷ்யத்தில் இருக்கிறது. அதில் ஏவ என்ற பதத்தின் தாத்பர்யத்தை விளக்குகிற தத்வடீகைப் பங்க்தி வருமாறு:

> “நாராயணன் என்கிற மருந்தினும் பிறிதொரு மருந்து கிடையாது” என்றொரு ப்ரமாணவாக்கியம் இருக்கிறது. “வாஸுதேவனை விட்டுவிட்டு எவன் வேறொரு தேவதையை உபாஸிக்கிறானோ. அவன் கங்கைக்கரையில் தாகம் எடுக்கும்போது கிணறு வெட்டும் மூடன்” என்கிறது மற்றொரு ப்ரமாணம். இது முதலான ப்ரமாணங்களை அனுசரித்து பதில் சொல்கிறார், தாப என்று தொடங்கி.

வேறு சிறு பலன்களுக்கு வேண்டுமானால் மற்ற தெய்வங்களை நாடலாம். இறவாநிலை (மோக்ஷம்) என்றதும் “வேண்டும் பெரும்பயன் வீடு” என்றதுமான அம்ருதத்வத்துக்கு வேறு எந்தத் தெய்வத்தையும் நாடிப் பயனில்லை. வேறு சிறு வியாதிகளுக்கு வேண்டுமானால் வேறு மருந்துகள் இருக்கலாம். ஆனால் ஸம்ஸாரவியாதிக்கு நாராயணன் ஒருவனிடமே மருந்து கிடைக்கும். எந்தப்பலன் தேவையானாலும் வாஸுதேவனை நாடிப் பெறலாம். அவனை விட்டுவிட்டு வேறு தெய்வத்தை உபாஸிப்பவன் மூடன். கங்கைக்கரையில் இருந்துகொண்டே தாகசாந்திக்காகக் கிணறு வெட்டுபவன் போன்ற அறிவிலி. கங்கை போல வாஸுதேவன். கிணறு போல பிற தெய்வங்கள். பரிமிதமாகத் தரவல்லவை. கங்கை நிறைய தரும். கேட்டது தவிர மேலும் பலன் தரும். கங்கைக்குள்ள பெருமை கிணறுக்கு உண்டா? கங்கைக்கரையில்

இருப்பவன் தாகமெடுத்தபோது கிணறு வெட்டலாமா? அதுபோலவே, வாசுதேவன் இருக்கையில், பலனை நாடிப் பிற உபாயங்களைத் தேடலாமா?

கடந்த நான்கு அறிவுரைகளைச்சேர்த்துப் பார்ப்போம்:

- அடைக்கலமல்லது ஹிதமிலை மேல்.
- அர்த்தம் புரியா மந்த்ரமும் ஏல்.
- அறமே எண்ணுக உணவெண்ணேல்.
- அம்ருதநிலை பெற பிற நாடேல்.

## 97. அனைத்தும் அடைய முயல்வானேன்?

எல்லாவற்றையும் பெறத் தேவையில்லை. தேவையானதைப் பெற்றால் போதும் என்று திருப்தி பெறவேண்டும்.

**गम्भीरे ब्रह्मभागे गणयितुमखिलं कः प्रवीणः प्रमेयम्**

**दिङ्मात्रं दर्शयन्नप्यहमिह निपुणैः प्राध्वमध्यक्षणीयः।**

**माभून्निश्शेषसिद्धिः तदपि गुणविदः स्फीतनिस्सीमरत्ने**

**मध्येहारं निधेयं महति जहति किं मौक्तिकं लब्धमब्धौ॥**

--- ***அதிகரணஸாராவளி.***

அதிகரணஸாராவளியின் தொடக்கப்பகுதியில் இந்த அறிவுரை இருக்கிறது:

> வேதாந்தசாஸ்த்ரம் கம்பீரமானது. அதிலுள்ள விஷயங்களையெல்லாம் எண்ணுவது இயலாத காரியம். யாரால் முடியும் முழுமையாக அறிவதற்கு? நான் ஏதோ கொஞ்சம் (இந்த நூலில்) காண்பிக்கிறேன்; அவ்வளவு தான். இருப்பினும் அறிஞர்கள் என்னை விசேஷமாகக் கடாக்ஷிக்கவேணும். இதற்கு ஒரு உதாரணம். மஹாஸமுத்ரம் நிறைய ரத்தினங்களைக் கொண்டுள்ளது. அதிலிருந்து ஒரு முத்துமணி கிடைக்கிறது. ஹாரத்தின் நடுவில் கோர்க்கலாம்படியான மௌக்திகம் அது. குணமறிந்தவர்கள் அதை விட்டுவிடுவரா என்ன?

கடலில் இன்னும் எவ்வளவோ ரத்தினங்கள் உள்ளனவே! அவை எல்லாம் எனக்கு வேண்டும் என்று காத்திருப்பார்களா என்ன? நமக்குக் கிடைத்தது நல்லதானால் அதைத் திருப்தியுடன் ஏற்றுக்கொள்வோம். இன்னும் கிடைக்காதது ஏராளமாக இருக்கிறதே என்று ஏங்குவானேன்? கடலில் எத்தனையோ மணிகள் உண்டு. எல்லாம் பெறவேண்டும் என்று நினைக்கலாமோ?

நல்ல முத்துமணி ஒன்று கிடைத்தால் அதைத் தரித்து மகிழலாகாதோ? கடல் போல் வேதாந்தம். முத்துமணி போல் அதிகரணஸாராவளி. இந்த நூலில் இல்லாத பிற வேதாந்தவிஷ்யங்கள் கடலில் உள்ள மற்ற ரத்தினங்கள் போல். நமக்கு மொத்தம் வேண்டும் என்ற அதீத ஆசை வேண்டாம். கிடைத்ததைக்கொண்டு திருப்தி பெறும் மனப்பக்குவமே நல்லது. கிடைத்ததிலேயே பெரிதாக மகிழ வாய்ப்பு உண்டு. இப்படி மகிழ்பவரே குணமறிந்தவர்.

## 98.அடைக்கலத்தின் பின் அச்சம் ஏன்?

சரணாகதி பண்ணின பிறகு பயப்படக்கூடாது.

**மாமேகம் ஶரணம் வ்ரஜ என்கிறபடியே ஸித்தோபாயத்வேந ஸ்வீக்ருதனான ஸர்வேச்வரன் அஹம் த்வா ஸர்வபாபேப்யோ மோக்ஷயிஷ்யாமி என்று பலப்ரதாநஸங்கல்பம் பண்ணுகையாலே இப்படி விஶ்வஸநீயனுமாய் ஸமர்த்தனுமாய் உபாயபூதனுமான ஈச்வரனைப் பார்த்து பலஸித்தியில் நிஸ்ஸம்சயனுமாய், நிர்ப்பயனுமாய்**

**--- *ரஹஸ்யத்ரயஸாரம், க்ருதக்ருத்யாதிகாரம்.***

பகவானிடம் சரணாகதி பண்ணினபிறகு, பொறுப்பேற்கை, ஸந்தேகம், பயம், சோகம், இதெல்லாம் கூடாது என்று சொல்லும் ப்ரகரணத்தில் உள்ள இந்த வாக்கியத்தின் கருத்து என்னவென்றால்:

> என்னை மட்டும் சரணடை என்றான் பகவான் கீதையில். அதன்படி அவனையே ஸித்தமான உபாயமாக வரிப்பது தான் சரணாகதி. அதற்குப் பிறகு நாம் அஞ்சவேண்டியதில்லை. ஏனென்றால் நமக்கு அந்தப் பலன் கிடைக்குமா என்று சந்தேகமில்லை. இதற்கு நாலு காரணங்கள். ‘‘நான் உன்னை எல்லா பாவங்களிலிருந்தும் விடுவிக்கிறேன்’’ என்று அவனே சொல்லியிருப்பதாலும், அவன் நம்பத்தக்கவன் ஆனதாலும், அவன் வல்லவன் ஆனதாலும், அவன் உபாயஸ்தானத்தில் நின்றுவிட்டபடியாலும், சரணாகதனுக்குக் கோரின பலன் கிடைப்பதில் ஐயமில்லை. பயமும் அதனால் நீங்கும்; ப்ரபத்தி பண்ணியபின் பயப்படக்கூடாது.

ப்ரபத்தி பண்ணிய பிறகு ஏன் பயப்படவேண்டும்? பகவான் நம்மைக் கைவிட்டுவிடுவானோ என்ற சந்தேகத்தால் பயமா? பகவான் நம்பிக்கைக்குரியனோ என்ற சந்தேகத்தால் பயமோ? அவனுக்கு நம்மைக் காக்கும் ஆற்றல் உண்டோ என்ற சந்தேகத்தால் பயமா? அவன் நம்மிடம் வேறு ஏதாவது உபாயத்தை மேலும் அபேக்ஷிப்பானோ என்ற சந்தேகத்தால் பயமா? இந்த நாலில் எதற்குமே ப்ரஸக்தி இல்லை. ஆகையால் பயமில்லாமல் இருக்கலாம். பயப்படுவது தப்பும்கூட.

## 99.அவசியமன்றா யத்தனம்? ஏன்?

எல்லாம் கடவுள் செயலாயிருப்பதால் நம் முயற்சியே தேவையில்லை என்று வாளாவிருந்து விடக்கூடாது.

यत् भव्यं तन्न न स्यात् यदभवितृ न तत्कल्पकोट्याऽपि सिद्ध्येत्
द्वेधाऽपि व्यर्थयत्ना नर इति यदि न स्वोक्तियत्नादिबाधात्।
यत् यत्नेनैव भाव्यं भवति यतनतः तत् स्वहेतूपनीतात्
दुस्साधायत्नलभ्ये प्रति यदि यतते तत्र नैष्फल्यमिष्टम्॥

***---தத்வமுக்தாகலாபம்.***

ஜீவஸரத்தில் ஜீவனின் கர்த்ருத்வத்தைச் சொன்ன பிறகு எழுகிற ஒரு சங்கையையும் அதன் பரிஹாரத்தையும் கூறுகிறார்:

> விதி வலியது. நடக்கவிருப்பது நடந்தே தீரும்; நம்மால் தடுக்க முடியாது. அதே போல நெடுங்காலம் முயன்றாலும் விதியை மீறி நாம் ஒரு செயலை நிகழ்த்திவிடமுடியாது. இரண்டு வகையிலும் நம் முயற்சி தேவையற்றது தான். என்கிற பூர்வபக்ஷத்தை ஏற்பதற்கில்லை. பூர்வபக்ஷியின் இந்த முயற்சி தான் எதற்கு என்கிற ஆக்ஷேபம் வருகிறது. சில காரியங்கள் முயற்சியால் கைகூடும் என்று விதி இருக்கலாமே! அத்தகைய காரியங்களுக்குத் தான் ஒரு ஹேதுவாகி முயலலாம் இல்லையா? முயற்சி செய்தாலும் கைகூடாதபடி அரிதானவை, முயற்சியின்றியே கிடைப்பவை என்ற இரண்டு வகைகளில் முயற்சி வீண் என்பதை நாங்களும் ஒப்புக்கொள்ளுகிறோம்.

சில பேர் சோம்பல் காரணமாகவும், இன்னும் சில பேர் மனம் வெறுத்த காரணத்தாலும், இன்னும் சிலர் தப்பான ஆராய்ச்சியாலும் தம் முயற்சியைக் கைவிட்டுவிடுகிறார்கள். நடப்பது நடக்கட்டும் என்று வாளா இருக்கிறார்கள். போதாக்குறைக்கு, இப்படியிருப்பது தான் சரி என்று வாதாடவும் செய்கிறார்கள். அவர்களது வாதம் என்னவென்றால் இது தான்: எல்லாம் விதிப்படித் தானே நடக்கும்? நாம் வரிந்து கட்டிக்கொண்டு உழைப்பதால் விதியை மீறி எதையாவது சாதிக்க முடியுமா? அல்லது, விதிப்படி நமக்குக் கிடைக்கவேண்டிய ஒன்று, தடுப்பு முயற்சிகளால் கிடைக்காது போய்விடுமா? இரண்டும் கிடையாது. நிகழ்வது நிகழ்ந்தே தீரும். ஆகையால் நாம் வீணாக முயற்சிகளை மேற்கொள்வதில் அர்த்லை. இப்படியெல்லாம் வாதித்து, தங்கள் மெத்தனப்போக்குக்கு விளக்கம் சொல்ல முற்படுகிறார்கள். இந்தக் கருத்தை நாம் ஏற்கமுடியாது. இது ஒரு வாதமா? நாங்கள் திருப்பிக் கேட்கிறோம். எதற்காக எங்களிடம் உங்கள் கருத்தை விளக்க முயல்கிறீர்கள்? விதிப்படி ஆகட்டும் என்று வெறுமனே இல்லாமல், எதற்காக உங்கள் பக்ஷத்தைச் சரியென்று வாதிக்கிறீர்கள்? நீங்கள் உண்மையிலேயே மனிதமுயற்சியே கூடாதென்ற உங்கள் கருத்தை முழுமையாக ஏற்பவரானால், இந்த வாதத்தைக்கூடப் பண்ணியிருக்க மாட்டீர்களே! (இதுவும் ஒரு மனிதமுயற்சி தானே?) சரி போகட்டும்; விஷயத்துக்கு வருவோம். விதி வலியது என்பதை நாங்களும் ஏற்கிறோம். ஆனால் சில காரியங்கள் மனுஷ்ய யத்தனத்தால் கைகூடும் என்று விதி இருக்கலாம் அல்லவா? அந்த விதிக்கு உட்பட்ட நாம் யத்தனங்களைப் பண்ணுவது யுக்தமேயல்லவா? விதியின் வலிமையை நமது சோம்பேறித்தனத்துக்கோ, வெறுப்புக்கோ, மந்தப்போக்குக்கோ,

காரணமாகச்சொல்லி வாதிப்பது எப்படி நியாயமாகும்? நாம் ஏற்கும் பெருமுயற்சிகளுக்கும் அதே விதி காரணமாகலாமே! அப்படியானால் விதியின் வலிமையைச் சொல்லும் பெரியோர்களின் கருத்து என்னவென்கிறீர்களா? அதற்கும் பதில் சொல்கிறோம். பகீரதப்ரயத்தினங்களாலும் கைகூடாதவை நேர்படும்போது அந்தோ விதி என்று ஆறுதல் அடைவது ஒன்று. எளிதில் சாத்தியமான பலன்களுக்கு மிகுந்த உழைப்பைத் தவிர்த்து விதிப்படி நடக்கட்டும் என்றிருக்கும் மனப்பக்குவம் இரண்டு. இவ்விரண்டுக்கும் பயன்படும் விதியின் வலிமை வாதம். ஒரேவழியாகச் சுருண்டு படுத்துவிட அது பயன்படாது. எங்கெங்கே யத்தனங்கள் தேவையோ அங்கங்கே அவற்றைப் பண்ணுவது தான் நல்லது.

## 100. அறி ஸம்ஸாரம் விஷத்தொடு தேன்.

இவ்வுலக வாழ்க்கையில் நசை கொள்ளவேண்டாம்.

**தேன் பட்ட விடம் போலத் தித்திக்கின்ற**
**சிறுபயனே உறுபயன் என்று அருந்துமாறும்**

***---பரமபதஸோபானம்.***

இரண்டாவதான நிர்வேதபர்வத்தின் முடிவுப்பாசுரத்தில் உள்ள இந்த வரியின் அர்த்தம் வருமாறு:

> ஸம்ஸாரத்தில் சிலர் ஆசை கொள்கிறார்கள். அதில் கிடைக்கும் இன்பங்கள் சிறியவை என்பதை அறிந்துகொள்ளாமல் அதுவே பேரின்பம் என்று மருள்கிறார்கள். அதையே அருந்துகிறார்கள்; அனுபவிக்கிறார்கள். உண்மையில் இந்த சுகம் தேன் பட்ட விஷம் போன்றது. ஆரம்பத்தில் தித்திக்கும். பிறகு தீங்கு விளைவிக்கும்.

ஸம்ஸாரத்தைத் தேன் பட்ட விஷம் போல என்று சொல்வதால் மூன்று கருத்துகளைத் தெரிவிக்கிறார்: ஒன்று, இதில் இன்பமும் துன்பமும் கலந்திருக்கும். இன்பம் குறைவே. தேன் கலந்த விஷம் என்னாமல் தேன் பட்ட விஷம் என்றதன் கருத்து இது. இரண்டு, இன்பம் தாற்காலிகமானது, விஷத்தின் மேல் தடவிய தேன் போல. துன்பவிளைவோ, நீடித்த கேட்டைத் தருவ்து. விஷம் போல. மூன்று, இன்பம் நம்மை ஈர்க்கும், தேன் தித்திப்பது போல. அதற்குள் துன்பம் புதைந்திருக்கும். தேனுக்குள் நஞ்சு போல. இந்த மூன்றையும் சேர்த்துப் பார்த்தால், ஸம்ஸாரத்தில் தீமை, அதிகமானதாலும், பேராபத்து விளைப்பதாலும், வேறொரு போர்வையில் மறைந்திருப்பதாலும், நாம் எச்சரிக்கையாக இருக்க வேண்டும். ஜனன மரணங்களை வெறுக்கவேண்டும். வீடு பெற விழையவேண்டும். தேனின் தித்திப்புக்கு ஈர்க்கப்பட்டு விஷத்தை அருந்துவானேன்? எனக்கு ஸம்ஸாரம் மகிழ்ச்சியைத்தானே தருகிறது என்று எவரேனும் நினைத்தால் அவர்கள் தேனில் மறைந்திருக்கும் விஷத்தை இன்னமும் உணராதவர்கள்.

கடந்த நான்கு அறிவுரைகளை ஒன்றுசேர்த்துப் பார்ப்போம்:

- அனைத்தும் அடைய முயல்வானேன்?
- அடைக்கலத்தின் பின் அச்சம் ஏன்?
- அவசியமன்றா யத்தனம்? ஏன்?
- அறி ஸம்ஸாரம் விஷத்தொடு தேன்.

ஆயிரம் அறிவுரைகளில் முதல் நூறு முற்றிற்று.

## ஆரண தேசிகனின் ஆயிரம் அறிவுரைகளில் முதல் நூறின் சுருக்கம்

1. லக்ஷ்மீபதியின் திருவடியைப் பணியுங்கள். -ரஹஸ்யத்ரயஸாரம்.
2. பாகவதர்களுக்குக் கைங்கர்யத்தைப் பற்றுக்கோலாகக் கொள்ளுங்கள். -முக்தகச்லோகம்.
3. மோக்ஷம் என்பது பேரானந்தம். அதில் ஆசை கொள்ளுங்கள். -அதிகரணஸாராவளி.
4. அடைக்கலம் புகுவதற்கு அவசரப்படுங்கள். -ரஹஸ்யத்ரயஸாரம்.
5. ஸந்தியாவந்தனத்தை விடக்கூடாது. -விரோதபரிஹாரம்.
6. வயிற்றுப்பிழைப்புக்காக அதிக அலைச்சல் தேவையற்றது. -வைராக்யபஞ்சகம்.
7. பிறர் பணத்தில் ஆசை கொள்ளக்கூடாது. -ஈசாவாஸ்யோபநிஷத்பாஷ்யம்.
8. அவமானம் நேரிட்டாலும் மனம் கலங்கக்கூடாது. -ரஹஸ்யத்ரயஸாரம்.
9. நமக்குப் பிறர் செய்த தீங்குகளை நாம் மறந்துவிட வேண்டும். -ஸுபாஷிதநீவி.
10. அகந்தை பொல்லாதது. நம்மை அழித்துவிடும். -தாத்பர்யசந்த்ரிகா.
11. தன் பாவங்களுக்குப் பச்சாத்தாபப்பட்டால் அந்தப்பாவங்கள் குறையும்.-அதிகாரசங்கிரகம்.
12. தரும மார்க்கம் பொன்றாதது. அதில் நிலைபெறவேண்டும். -யாதவாப்யுதயம்.
13.பகவத்-பாகவத-அபசாரங்கள் கொடியவை நேராமல் விழிப்புடன் இருங்கள்.-ரஹஸ்யரத்நாவளி
14. பாகவதரிடம் அபசாரம் நேர்ந்தால் மன்னிப்பு கேட்பது முக்கியம். -ப்ரதாநசதகம்.
15. அஞ்சி நடுங்க வேண்டியவற்றில் ஒன்றாகும் அபசாரப்படுவதென்பது.-ரஹஸ்யத்ரயஸாரம்.
16. பாகவதாபசாரத்தால் பிரம்மவித்யா-நிஷ்பத்தியில் தாமதம் ஏற்படும்.-அதிகரணஸாராவளி.
17. அடிக்கடி ஆவ்ருத்திபண்ணும் பக்தியெனும் அறிவுத்தொடரே மோக்ஷம் தரும்.-ந்யாயஸித்தாஞ்ஜநம்.
18. பெருமாளை அருச்சிப்பதிலும் துதிப்பதிலும் நம் பொழுதைக் கழிக்கவேண்டும். -ஸ்தோத்ரரத்நபாஷ்யம்.
19.ஆசார்யகடாட்சத்தால் அதிகப்பலன் கிடைக்கும். அதைப்பெறுங்கள்.-ஸங்கல்பஸூர்யோதயம்.
20. காமம், குரோதம் முதலிய ஆறு உட்பகைவர்களை அழிக்கவேண்டும். -யாதவாப்யுதயம்.
21. தன்னைப் பெற்றெடுத்த தாய்க்குத் தொண்டு செய்யவேண்டும். -ஸ்தோத்ரரத்நபாஷ்யம்.
22. பெருமாளிடம் காதல் கொள். மற்றவற்றில் விரக்தி கொள். -பரமதபங்கம்.
23. எந்தப் போகத்தையும் பெருமாளுக்கு ஸமர்ப்பித்த சேஷமாக அனுபவிக்கவேண்டும்.-நிக்ஷேபரக்ஷா.
24. அழகியின் உடல் உட்பட எல்லா ஜந்துசரீரங்களிலும் அருவருப்படைய வேண்டும்.-பரமபதஸோபாநம்.
25. பெருமாள் மட்டுமே ரக்ஷகர். பிறரிடம் சென்று சீரழிய வேண்டாம். -காமாஸிகாஷ்டகம்.
26. பிரம்மபதவி முதலியவைகூட விரும்பத்தகாதவை. அவற்றில் ஆசைவேண்டாம்.-தயாசதகம்.

27. திருமாலடியவர்களிடம் குறைகாணக்கூடாது. -அச்யுதசதகம்.
28. தாயாரிடம் ப்ரபத்தி பண்ணி அவள் மூலமாகப் பெருமாளிடம் பண்ணவேண்டும்.-சதுச்ச்லோகீபாஷ்யம்.
29. பண்புகெட்ட அரசரிடம் போய்ப் பல்லிளிக்கவேண்டாம். -வைராக்யபஞ்சகம்.
30. பிரம்மா, சிவன் முதலிய தேவதாந்தரங்களை விலக்கவேண்டும். -சரணாகதிதீபிகா .
31. தனக்கு வேண்டாதைப் பிறருக்கும் பண்ணக்கூடாது. -ப்ரதாநசதகம்.
32. பிரகிருதி என்னும் பெருஞ்சேற்றில் அழுந்த விரும்பக்கூடாது. -பரமபதஸோபானம்.
33. தானே கிடைக்கும் போகங்களை ஒதுக்காமல் ஏற்கலாம். -பாஞ்சராத்ரரக்ஷா.
34. ஹம்ஸபக்ஷி போல ஸாரமானதை மட்டும் ஏற்றுக்கொள்ளவேண்டும். -முநிவாஹநபோகம்.
35. நம்மைப் புகலாக அடைந்தவரைப் பரிவுடன் காக்கவேண்டும். -அபயப்ரதாநஸாரம்.
36. மோக்ஷம் தவிர மற்றெல்லா ஐச்வர்யத்தையும் புல் போலத் துச்சமாகக் கருதுக. -ஸ்ரீஸ்துதி.
37. கூட்டங்களில் பங்குகொள்ளப் பயப்படுக. -ரஹஸ்யரத்நாவளி ஹ்ருதயம்.
38. நரக யாதனைகளுக்குப் பயப்படுக. -பரமபதஸோபானம்.
39. எல்லா இந்திரியங்களையும் அடக்கிக் கொள்க. -ஹஸ்திகிரிமாஹாத்மியம்.
40. பகவானுக்குக் கைகூப்பி அஞ்சலி செய்க. -அம்ருதாஸ்வாதிநி.
41. கைங்கரியங்களில் அபராதம் புகாதபடி ஜாக்கிரதையாக இருக்கவேண்டும். -ந்யாஸதசகம்.
42. பகைவர்களில் பலஹீனரை அலட்சியப்படுத்துக. -யாதவாப்யுதயம்.
43. பெரியவர்கள் போல் வேஷம் போடுவதை அளவுக்கு மீறிச்செய்யாதே. -ஸுபாஷிதநீவீ.
44. தினந்தோறும் பெருமாள் திருவாராதனத்தைப் பண்ணவேண்டும் . – பாஞ்சராத்ரரக்ஷா.
45. பெருமாளுக்குச் சமர்ப்பிக்காத உணவை உண்ணாதே. -ஆஹாரநியமம்.
46. நண்பரை அதியாகச் சந்தேகிக்கக்கூடாது. -யாதவாப்யுதயம்.
47. வேதநெறியிலிருந்து விலகக்கூடாது. -ரஹஸ்யத்ரயஸாரம்.
48. அறிவு, பக்தி, இவை தவிர வேறெதையும் பெருமாளிடம் யாசிக்காதே. –ரஹஸ்ய ரத்நாவளிஹ்ருதயம்.
49. சரணாகதியில், ஆத்மா, பொறுப்பு, பலன் இம்மூன்றையும் ஒப்படைக்கவேண்டும். -ந்யாஸதசகம்.
50. விக்கிரகவடிவத்தில் உள்ள பகவானின் அழகில் மகிழுங்கள். -வரதராஜபஞ்சாமத்.
51. அர்த்தபஞ்சகம் என்ற ஐந்தையும் அறிந்துகொள்ளுங்கள். -அதிகாரசங்கிரகம்.
52. அறிவாளிகள் காட்டும் வழியில் பின்பற்றி நடக்கவும். -யாதவாப்யுதயம்.
53. பாரததேசத்திலேயே கருமங்களைப் பண்ணுங்கள். -ஹஸ்திகிரி மாஹாத்மியம்.
54. மனதை அடக்கி நிம்மதி அடையவேண்டும். -ரஹஸ்யத்ரயஸாரம்.
55. அறநெறியில்லாதவரது புலமை வீணானது. -ரஹஸ்யத்ரயஸாரம்.
56. தப்புவழியில் அறிந்த மந்த்ரம் வீண்; முறைப்படி குருவிடம் உபதேசம் பெறுங்கள்.-ரஹஸ்யத்ரயஸாரம்.
57, விடியற்காலையில் தூக்கம் விழிக்கவேண்டும். -நித்யவ்யாக்யானம்.
58. மிகுதியாகத் தின்னக்கூடாது. -தாத்பர்யசந்த்ரிகா.
59. அறிவால் ஆராய்ந்து அஹிதத்தை விலக்கிடுக. -யாதவாப்யுதயம்.
60. கணவன் மனைவியிடையே ஒற்றுமை அவசியம். -ஸ்தோத்ரரத்நபாஷ்யம்.
61. பெரியோர் துன்புறுத்தினாலும் அவர்களையே சார்ந்திருக்கவேண்டும். -பாதுகாஸஹஸ்ரம்.
62. பகவந்நாம ஸங்கீர்த்தனம் பண்ணுங்கள்; நன்மை உண்டாகும். -அபீதிஸ்தவம்.
63. ஆசாரம் தான் எல்லாத்தருமத்துக்கும் வேர் போன்றது; அதில் வழுவாதே. -ரஹஸ்யத்ரயஸாரம்.
64. நல்லுரைகளைச் சிறிது சிறிதாகச் சேமிக்கவேண்டும். -ரஹஸ்யத்ரயஸாரம்.

65. அறிஞர்களுக்குச் சேவைசெய்தால் தூயநோக்கு ஏற்படும். -அதிகரணஸாராவளி.
66. ஆலயவழிபாடு பண்ணுங்கள்: மோக்ஷமும் அதன்மூலம் பெறலாம். -ரஹஸ்யத்ரயஸாரம்.
67. அகந்தையால் தவம் அழியும். -ரஹஸ்யத்ரயஸாரம்.
68. அடம் பிடிக்காதே; அது குழியில் தள்ளும். -ரஹஸ்யத்ரயஸாரம்.
69. பிறர் தருமம் வேண்டாம்; தம் தருமமே அவரவர்க்கு நல்லது. -தாத்பர்யசந்த்ரிகா.
70.இயலாதவர்கள் முடிந்தவரை சாத்திரநெறியைக் கடைப்பிடிக்கவேண்டும். -நித்யவ்யாக்யானம்.
71. எதிரிகளின் வழியிலேயே அவர்களை மடக்கவேண்டும். -ந்யாயபரிசுத்தி.
72. தத்தம் தொழிலை விருப்பத்துடன் செய்யவேண்டும். -தாத்பர்யசந்த்ரிகா.
73. பெண்ணழகில் எச்சரிக்கையாயிருங்கள்; எரித்துவிடும். -ஸ்தோத்ரரத்நபாஷ்யம்.
74. செல்வம் பாம்பு போன்றது; ஜாக்கிரதையாக இருக்கவும். -யாதவாப்யுதயம் .
75. முக்கியவிஷயங்களை அறியாதவன் விலங்குகளுக்குச் சமம்; அறிவு பெறுங்கள். -விரோதபரிஹாரம்.
76. சொர்க்கமும் விரும்பாதீர்; அதுவும் நரகம் போல் மோக்ஷத்துக்குத் தடை. -அபீதிஸ்தவம்.
77. பாகவத தாஸனாகுவதற்குப் பெருமாள் துணையை நாடுங்கள். -முநிவாஹநபோகம்.
78. அடியார்களை மகிழ்விப்பதன் மூலம் பகவத்ப்ரீதி பண்ணுங்கள். -ரஹஸ்யத்ரயஸாரம்.
79. பாகவதகைங்கர்யத்தில் பகவத்கைங்கர்யமும் அடங்கும். அதையே செய்க. -ரஹஸ்யரத்நாவளிஹ்ருதயம்.
80. அடியார் வீட்டில் புழுவாகவேனும் பிறக்கலாம்; அடியார் சகவாசம் நாடுக. -ஸ்தோத்ரரத்நபாஷ்யம்.
81. பகவானிடம் பக்தி கொள்ளுங்கள்; அது மோக்ஷநிலையிலும் தொடர்வது. -நிக்ஷேபரக்ஷா.
82. சாஸ்த்ரத்தின் எப்பகுதியையும் வீணென்று ஒதுக்காதீர். -ந்யாயபரிசுத்தி.
83. சந்தேகப்பிராணியாக இருக்காதே. -தாத்பர்யசந்த்ரிகா.
84. துன்பங்கள் நேரும்போது கடவுளை நிந்திக்கலாகாது. -ரஹஸ்யத்ரயஸாரம்.
85. அஷ்டாக்ஷரத்துள் எல்லாம் அடங்கியிருப்பதால் அதையே ஜபியுங்கள். -ரஹஸ்யபதவீ.
86. அஷ்டாக்ஷரத்தால் எல்லாப்பலன்களும் கிடைப்பதால் வேறு தேவையில்லை. -ஸாரஸாரம்.
87. அஷ்டாக்ஷரமே பெருமாள் என்று கௌரவபுத்தி கொள்ளுங்கள். -ரஹஸ்யத்ரயஸாரம்.
88. ஸந்த்யாகாலங்களில் அஷ்டாக்ஷரஜபம் பண்ணுவது விசேஷம். -நித்யவ்யாக்யானம்.
89. அரைகுறை அறிவால் எகிறாதே. -ஸங்கல்பஸூர்யோதயம்.
90. அருகில் கிடைக்கும் வஸ்துவுக்காகத் தூரத்தில் அலையாதே. -சததூஷணி.
91. மூன்றுவகைக் குறைகள் கொண்ட உணவை விலக்குக. - தத்வடீகா.
92. சாஸ்த்ரத்து அர்த்தங்களைக் குழப்பியடிக்காதே. -ந்யாயபரிசுத்தி.
93. சரணாகதியே பரமஹிதம். -தயாசதகம்.
94. மந்த்ரங்களை ப்ரமாணமாக ஏற்கவும்; அர்த்தம் புரியாவிட்டாலும். -ஸேச்வரமீமாம்ஸா.
95. அன்னவிசாரம் வேண்டாம்; தர்மசிந்தையே வேண்டும். -ரஹஸ்யத்ரயஸாரம்.
96. இறவாநிலை பெறப் பகவானை மட்டுமே நாடுக. -தத்வடீகா .
97. எல்லாவற்றையும் பெறவேண்டுமென்று துடிக்காதே. -அதிகரணஸாராவளி.
98. சரணாகதிக்குப் பின்னர் பயப்படக்கூடாது. -ரஹஸ்யத்ரயஸாரம்.
99. விதி வலிதானாலும் முயற்சியைக் கைவிடாதே. -தத்வமுக்தாகலாபம்.
100. ஸம்ஸாரம் விஷம் கலந்த தேன் போல் தீயது; அதை விடமுயல். -பரமபதஸோபானம்.